கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



கவிதையைக் கடந்து...

KALKI ● 07.09.2008 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



கேபிள் தொலைக்காட்சி தொலையும் மனசாட்சி!

- அதிர்ச்சி ரிப்போர்ட்

3000 நாடகங்களும் ஒரு தேசிய விருதும்!

- அதிரடி ஐ.ஏ.எஸ்


போகுமிடமெல்லாம்
உங்களை பற்றித்தான் பேச்சு!
எங்களின் தலைசிறந்த நகை வல்லுனர்கள் வடிவமைத்த டிசைன்களை அணிந்திடுங்கள். போகுமிடமெல்லாம் உங்கள் நகைகளை பற்றித்தான் பேச்சு இருக்கும்.
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகைகள்
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
தி சென்னை சில்க்ஸ் ஜுவல்லரி மஹால்
(தி சென்னை சில்க்ஸ் அருகில்)
கோயம்புத்தூர் • திருப்பூர் • ஈரோடு • திருச்சி • சென்னை
பரந்து விரிந்த கார் பார்க்கிங் வசதி
Shop online at www.sktm.fh



உடையழகு... நடைபழகு...

நம்முடைய தோற்றத்தை அழகாகக் காண்பிப்பது நம் முகமும் கருவளையம் அற்ற கண்களும்தான் நம்மைப் பார்ப்பவர்க்கும் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

ஆனால், நம்மில் பெரும்பாலோர் முகத்தில் கருவளையம் இருக்கிறது.

கண்ணுக்குக் கீழே படர்ந்திருக்கும் இந்தக் கருமை எதனால் வருகிறது?

தூக்கமின்மை, அலர்ஜி, களைப்பு, டென்ஷன், தீராத வியாதிகள், வயது, சத்துக்குறைந்த உணவு, பரம்பரை, அனீமியா, மாதவிடாய்க் கோளாறு... இப்படிப் பல காரணங்கள் இருக்கலாம்.

இவற்றை எப்படி நீக்குவது?



பத்திரமா

இவற்றிலிருந்து எப்படித் தப்புவது? இதோ.. சில டிப்ஸ் :

★ தேங்காய் எண்ணெயை தொட்டுக் கண்ணுக்குக் கீழே மெதுவாக மஸாஜ் செய்யலாம்.

★ உருளைக்கிழங்கு மற்றும் வெள்ளரிக்காய் ஜூஸில் (துருவி அரைத்துப் பிழிந்தது) பஞ்சை நனைத்து, கண் மீது வைத்து ரிலாக்ஸ் செய்யலாம்.

★ ஃப்ரீஸரில் வைத்த ஜில்லென்ற பாலில் பஞ்சை நனைத்து கண்கள் மீது வைக்கலாம்.

★ உபயோகித்த டீ பேக்ஸை தூக்கி எறியாமல், ஃப்ரீஸரில்



வைத்து எடுத்து கண்கள் மீது வைக்கலாம்.

★ எலுமிச்சை சாறுடன், வெள்ளரி ஜூஸ் மற்றும் வெஜோலின் க்ரீமைக் குழைத்து மஸாஜ் செய்யலாம்.

★ ஆல்மண்ட் (பாதாம்) எண்ணெயில், புதினா இலைகளை அரைத்துக் கலந்து கருவளையத்தின் மேல் பூசலாம்.

★ மஞ்சள் தூளில் அன்னாசி ஜூஸைக் குழைத்து, கருவளையத்தின் மேல் தடவலாம்.

★ ஃப்ரீஸரில் வைத்த வாஸலினை எடுத்து கருவளையத்தின் மேல் தடவி வரலாம்.

★ வெங்காயம் நறுக்கினால், கண்களில் இருந்து வழியும் நீர், கண்ணுக்கும், அதன் கீழுள்ள சருமத்துக்கும் மிக நல்லது.

★ தினமும் இருமுறை தக்காளிச்சாற்றில்

பார்த்துக்கங்க!

எலுமிச்சை பிழிந்து, அதைக் கருவளையத்தில் தடவலாம்.

★ சர்வாங்காசனம் நல்ல உடற்பயிற்சி.

★ சாப்பாட்டில் உப்பைக் குறைத்து சத்துள்ள உணவைச் சேர்ப்பது நலம்.

இவை எல்லாம் கருவளையத்தைப் போக்கும் வழி!

அது வராமலிருக்க, தூக்கம்தான் மிக முக்கியம். இன்னொன்று, கவலைப்படுவதை விடுங்கள். கவலைதான் கருவளையத்துக்கான காரணம் என்று புரிந்தால் வசீகர முகம் வாய்த்துவிடும்!

- லதா சேகர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: சீதா ரவி

உதவி ஆசிரியர்: கதிர்பாரதி

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி:
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல்: 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு:
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு:
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள்:
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.


கேபிள் தொலைக்காட்சி

'டிராய்' எனப்படும் தகவல் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், வரிவசூலிக்கும் அலுவலகங்கள் மூலமாக ஓர் ஆய்வு நடத்தியது. நாடு முழுவதும் உள்ள கேபிள் ஆபரேட்டர்கள், சேவை வரியைச் சரியாகக் கட்டாததால், மத்திய அரசுக்குச் சுமார் 265 கோடி வரி இழப்பு ஏற்பட்டிருப்பதாக அதிர்ச்சித் தகவல் அதன் மூலம் தெரிய வந்திருக்கிறது.

வரி ஏய்க்கும் மனோபாவம் வரக் காரணம், சம்பந்தப்பட்ட வரிவசூலிப்பு அலுவலகங்கள், முறையாகப் பணிகளை மேற்கொள்ளாததுதான். கேபிள் தொலைக்காட்சி என்பது இன்னமும், முறையாக வரையறுக்கப்படாத ஒரு தொழிலாகத்தான் இருக்கிறது. போதாததற்கு உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் குண்டர்கள் கையில் தொழில் சிக்கிக் கொண்டுள்ளதால், அவ்வளவு சுலபமாக அதிகார வட்டம் உள்ளே நுழைய முடியவில்லை.

ஒவ்வொரு கேபிள் ஆபரேட்டரும், தனது ஆளுகையில் எத்தனை கேபிள் இணைப்புகள் இருக்கின்றன என்ற கணக்கைச் சரியாகக் கொடுக்கவேண்டும். ஆனால், இந்தக் கணக்கை மிகக் குறைத்துக் காட்டுகிறார்கள். இதன் காரணமாக வசூலும் குறைவாகக் காண்பிக்கப்பட்டு அரசுக்குக் கட்ட வேண்டிய சேவை வரியும் கணிசமாகக் குறைந்துவிடுகிறது. சேவை வரி வசூலிக்கும் கீழ்நிலை அதிகாரிகள், கேபிள் ஆபரேட்டர்களின் இணைப்பு எண்ணிக்கையைச் சரிபார்க்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை. இதற்கு என்ன காரணம் என்று சொல்லத் தேவையில்லை. நாடு முழுவதும் அரசின் கணக்குப்படி பதினைந்து லட்சம் கேபிள் இணைப்புகள்தான் உள்ளன! ஆனால், கடந்த இரண்டு மூன்று வருடங்களில் அது ஒன்றரை கோடியாக உயர்ந்திருக்கிறது என்பது அரசுக்குத் தெரியவில்லை! இந்த அடிப்படையில் சேவை வரி வசூல் செய்யாவிட்டால் வரி இழப்பு ஏற்படத்தான் செய்யும். மேலும், கேபிள் ஆபரேட்டர்கள் மக்களிடம் வாங்கும் பணத்துக்கு ரசீது கொடுப்பதில்லை. தில்லியில் வசூலாக வேண்டிய சேவை வரி 58 கோடி; ஆனால், வசூல் சுமார் ஆறு கோடி மட்டுமே.

சின்னச்சின்ன கேபிள் ஆபரேட்டர்கள் மட்டுமல்லாமல், எம்.எஸ்.ஓக்கள் எனப்படும் முக்கிய கேபிள் விநியோக மையம் நடத்தும் பெரு முதலாளிகளும் போலிக் கணக்கைக் கொடுத்து, வரி ஏய்ப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் இன்னும் ஆபத்தான விஷயம் என்னவென்றால், இந்த எம்.எஸ்.ஓக்களை நடத்துபவர்களே, சொந்தத் தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவை நடத்துவதால் கேபிள் தொழிலில் புரளும் கறுப்புப் பணம், மற்ற


"எம்.எஸ்.ஓக்களை நடத்துபவர்களே
சொந்தத் தொலைக்காட்சி,
பத்திரிகைகள் நடத்துவதால் கேபிள் தொழிலில்
புரளும் கறுப்புப் பணம் அந்தத்
தொழில்களுக்குத்
திருப்பி விடப்படுகிறதாம்!"
தொலையும் மனசாட்சி!

தொழில்களுக்குத் திருப்பி விடப்படுகிறது. 'கேபிள் ஆபரேட்டர்கள் இப்படி அரசை ஏமாற்றுவது என்ன நியாயம்?' தமிழ்நாடு கேபிள் தொலைக்காட்சி ஆபரேட்டர்கள் சங்கத் தலைவர் காயல் இளவரசுவைக் கேட்டோம்.


''பல சங்கடங்களுக்கிடையில் நாங்கள் தொழிலை நடத்திக் கொண்டு வருகிறோம்'' என்று ஆரம்பித்தார் இளவரசு. இணைப்புகளின் அடிப்படையில் வசூலாகும் தொகையில், மாதம் 12.36 சதவிகிதம் சேவை வரியாகக் கட்டுகிறோம். இணைப்புகளைக் குறைத்துக் காட்டி வரி ஏய்க்கும் போக்கு தமிழ்நாட்டில் இல்லை. எந்த ஆபரேட்டர் கட்டணச் சேவை வினியோகிக்கிறாரோ, அவரது இணைப்புகளின் எண்ணிக்கையைச் சுலபமாகக் கண்டு பிடிக்கலாம். அந்த அளவுக்குத் தொலைக்காட்சிகளின் தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது. ஆனால், நகராட்சி மற்றும் கிராமப்புறங்களில் இலவச சேனல்கள் வினியோகிக்கும் புதிய ஆபரேட்டர்கள், பொய்க்கணக்கு சொல்லி வரி ஏய்க்கும் வாய்ப்பு உண்டு. சேவை வரி வசூலிக்கும் மத்திய அரசு அலுவலகங்களில், நாங்கள் எங்கள் கணக்குப் புத்தகங்களைக் காட்டத் தயாராகவே இருக்கிறோம். இப்போது அரசு கேபிள் வினியோகம் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டிருப்பதால், இனி இது போன்ற புகார்களுக்கு இடம் இருக்காது'' என்றார்.


* காயல் இளவரசு

''கிராமப் புறங்களில் இலவச சேனல்கள் வினியோகிக்கும் புதிய ஆபரேட்டர்கள் வரி ஏய்க்கும் வாய்ப்புண்டு!''

''நமது நிதியமைச்சரின் மூளையில் உருவான இந்தச் சேவை வரி, வரிவசூலிப்பு கீழ்மட்டத்தில், ஊழியர்களிடையே லஞ்சம் மற்றும் ஊழலை வளர்க்கவே உதவி செய்கிறது. சேவை வரியை ஒழித்துவிட்டு, கம்பெனி அல்லது நிறுவன வரியாகப் போடலாம்'' என்கிறார் தில்லி மாநகர் டெலிபோன் நிகாமின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக இருந்து ஓய்வு பெற்ற எஸ்.ராஜகோபாலன். மேலும், ''சேவை வரிக் கோட்பாடு, முதலீடு செய்யும் மனோபாவத்துக்கு முரணாக இருக்கிறது. எனவே, வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. கேபிள் தொலைக்காட்சி வினியோகத் தொழிலில், வெளிப்படையான தன்மையே கிடையாது. 'ட்ராய்' அமைப்பின் ஆணைகள், ஆலோசனை அல்லது பரிந்துரை என்ற அளவிலேயே நின்றுவிடுகின்றன. அவை கட்டாயச் சட்டங்கள் அல்ல என்று வாதிட இடமிருக்கிறது. கேபிள் தொலைக்காட்சி ஆபரேட்டர்களின் தொழில் மற்றும் வருவாயை, நெறிப்படுத்தவும், கண்காணிக்கவும், அதிகாரங்களுடன்கூடிய தனி அமைப்பு தேவை'' என்கிறார்.

''நமது நிதியமைச்சரின் மூளையில் உருவான இந்தச் சேவை வரித் திட்டம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்!''


* எஸ். ராஜகோபாலன்

படம் : திருநாவு

– ப்ரியன்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை -63. போன்: 22760612.
City Office : No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033 போன் 23714942.

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தாங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு,உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தாங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள் தொழில், வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தாங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு Cheque / D.D / M.O மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்



அரசியல்வாதி சுந்தர்.சி!

நடிகர் ஜெய், நாயகி அர்ச்சனா, டைரக்டர் கிச்சா மூவரும் தங்களது அடுத்த ப்ராஜக்ட் குறித்து நம்மிடம் பேசினர்...

கிச்சா:

'தங்கம்' படத்துக்குப் பிறகு சுந்தர்.சி யை வச்சு 'தீ' பண்றேன்.

அர்ச்சனா:


என்னோட அடுத்த படம் 'தமிழகம்'. ரிச்சர்ட் ஜோடியா கலக்கறேன். சமீபத்துல ஊட்டியில 'நிக்குறா... நடக்குறா...'ங்கற பாடலைப் படமாக்கினோம். காலைல எழுந்திருக்கவே மனசு வராது. அவ்ளோ குளிர். ரெண்டு, மூணு கம்பளி போத்தி சுருண்டு படுத்துட்டிருப்பேன். முடியாம கஷ்டப்பட்டு எழுந்து குளிச்சுட்டா போதும், எங்கிருந்து வந்ததுன்னு தெரியாம அவ்ளோ ஒரு புத்துணர்ச்சி வந்துடும். ஆனாலும் குளிர் உடலைத் தழுவிட்டே இருக்கும். பதினொண்ணு பன்னென்டு மணிக்கு மேலதான் வெயில நாம உணர முடியும். போதாக்குறைக்கு அப்பப்போ மழை வேற வந்து சாரலா நம்ம மனசையும் உடலையும் குளிரவச்சுட்டுப் போகும். தேயிலைத் தோட்டங்கள் நிறைய. அதுக்கு மத்தியில நின்னு ஆடிப்பாடும்போது அங்கேயே தங்கிட மாட்டோமான்னு ஏக்கமா இருக்கும். சாயந்திரம் ஆக ஆக குளிர் ஏறிக்கிட்டே போகும். ஒரு கட்டத்துல ஸ்வெட்டர், குல்லா எல்லாம் போட்டும்கூட தாங்கமுடியாமப் போயிடும். ஒரே ஓட்டமா ஓடிப்போய் ரூம்ல வாமரை ஆன் பண்ணி முன்னால உக்காந்துடுவேன். ஆனாலும் ஊட்டியை விட்டுப் பிரியும்போது மனசு அந்தக் குளிருக்காக ஏங்க ஆரம்பிச்சுடும். இங்க நகரத்துல வந்து புழுக்கத்துல தத்தளிக்கும்போது, ஊட்டி காத்தும் ஊடுருவுற குளிரும் மனசுல நின்னு தித்திக்கும்.

* அர்ச்சனா



ஜெய்:

பகவதி, சென்னை 28, இப்போ சுப்ரமணியபுரம்னு மக்களோட ஆதரவுல எனக்கும் தமிழ் சினிமாவுல ஒரு இடம் கிடைச்சிருக்கறதை நினைச்சா ரொம்ப சந்தோஷமா இருக்கு. இதே உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் அடுத்து 'அதே நேரம் அதே இடம்' ஆரம்பிச்சுட்டோம். முந்தின படம் மாதிரி இதுவும் யதார்த்தமான படம்தான். படிச்சுட்டு வேலை தேடிக்கிட்டிருக்கறவனுக்கும் கல்லூரியில படிக்கிற பொண்ணு ஒருத்திக்கும் இயல்பா ஏற்படுற காதல்; அதனால உண்டாகிற பிரச்னைகள்ல நல்ல ஒரு ரொமான்ஸ் கதை சொல்ல ட்ரை பண்ணியிருக்கோம். லைன் கேட்க 'தின்'னாதான் இருக்கும்; ஆனா திரைக்கதை செம அடர்த்தி. இதுல எனக்கு ஜோடி 'சென்னை 28' விஜயலட்சுமி. ஹோம்லிதான் வரும்னு நினைச்சா எல்லா கேரக்டர்ஸும் எல்லாவிதமாவும் பண்ணி அசத்தறாங்க. அவங்க ரஜினி சாரோட 'சுல்தான் தி வாரியர்' பண்றதை நினைச்சா பிரமிப்பா இருக்கு. ஒண்ணு மட்டும் புரியுதுங்க, கடின உழைப்புக்கும் சின்சியாரிட்டிக்கும் என்னைக்கும் பலன் கிடைச்சே தீரும்.




ஜெய்

இதுவரை சுந்தர்.சி. ஏற்காத என்கவுன்ட்டர் போலீஸ் கேரக்டர். நேர்மைக்கும் வீரத்துக்கும் பெயர் போன சுந்தர்.சி தீர்க்க முடியாத பிரச்னை ஒண்ணுல மாட்டிக்கிறார். ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு, முள்ளை முள்ளாலதான் எடுக்கணும்னு முடிவு பண்ணி காக்கிச் சட்டையைக் கழட்டிட்டு, கதர்ச்சட்டை அணிந்த அரசியல்வாதியாயிடுறார். அதன்பிறகு அவர் கொடுக்கற பதிலடி ஒவ்வொண்ணும் இடி மாதிரி இருக்கும். அவர் பேசற அரசியல் வசனங்கள் படம் வந்தப்புறம் பரபரப்பா பேசப்படுறது நிச்சயம். சுந்தர்.சிக்குள்ள மறைஞ்சிருக்கிற மொத்தத் திறமையையும் வெளிக் கொணர்ற படமா 'தீ' இருக்கும். ஜோடி நமீதா - ராகிணி. சுந்தர்.சி கேரக்டருக்கு ஈடு கொடுத்து நடிச்சிருக்காங்க. ராகிணியின் பங்கு படத்தில் அதிகம்! முக்கியமான வேடம் ஒண்ணுல இசையமைப்பாளர் தேவா நடிச்சிருக்கார். படம் வந்ததுக்கப்புறம் அவர் நடிகரா பிஸியாயிட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்ல.''

- திவ்யா

கிரேஸியைக் கேளுங்கள்



உலகைக் காக்கும் ஆண்மை

● **கஸ்தூரி, திருவாரூர்**

நாலுபேர் மனசு நோகும்படி நடந்துக்காதேன்னு சொல்றாங்களே... யார் அந்த நாலுபேர்...?

மாதா, பிதா, குரு, தெய்வம்...

● **பி.சிவா, பாளையங்கோட்டை**

ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்குமா...?

கதவு திறக்குமா...? ஜன்னல் மூடுமா...? கூரை பிய்க்குமா...? எதற்கு இந்த அவஸ்தையான காத்திருப்புக்கள்... அறைக்குள் புழுங்கியது போதும்... வெளியே வந்து காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்...

● **அனன்யா, திருச்சி**

'படிச்ச முட்டாள்... படிக்காத முட்டாள்' யார் பெட்டர்?

ஏம்மா... ஒரு படிச்ச ஆளைப் பாத்துக் கேக்கற கேள்வியா இது... இருந்தாலும் சொல்றேன். நேத்து கோயில்ல சாமி அபிஷேகத்தின்போது, படிச்ச என்னைப் பாத்து இன்னும் படிக்க ஆரம்பிக்காத எம் பேரன் கேட்டான். 'என்ன தாத்தா நடக்குது'ன்னு. 'சாமியைக் குளிப்பாட்டறாங்கடா பேராண்டி'ன்னேன். அப்பால அலங்காரத்துக்காக திரை போட்டுட்டாங்க... இப்ப என்ன நடக்குதுங்கற ரேஞ்சுல எம் பேரன் என்னைப் பாத்தான்... 'சாமிக்கு டிரஸ் பண்ணறாங்கடா பேராண்டி'ன்னேன்... 'என்ன தாத்தா குளிக்கறச்சே பாக்கறதுதான் தப்பு... டிரஸ் பண்ணிக்கறதை பாக்கறதுல என்ன தப்பு... வுல்டாவா இருக்கே தாத்தா'ன்னான். படிக்காத முட்டாள் பேராண்டியின் கேள்விக்கு, படிச்ச முட்டாள் நான் பதில் சொல்ல முடியாம பேஜாராயிட்டேன்.

● **டி.ஜி.எஸ். பிரியம்மாள்புரம்**

மிருகங்கள் சிரிப்பதை நீங்கள் பார்த்ததுண்டா?

எங்க பக்கத்துவீட்டு நாய் 'கொல் கொல்'னு சிரிக்க பாத்துருக்கேன்... விசாரிச்சதுல தெரிஞ்சது அந்த நாய் 'மிருகசிரி'ஷம் நட்சத்திரத்துல பொறந்ததாம்...!

● **ராஜேஸ்வரி, நங்கநல்லூர்**

புதுசா புதுக்கவிதை ஏதாவது எழுதினீர்களா...?

'மேலே பற்றில்லாதது போல
பாவனை செய்தாலும்
கீழே தண்ணீர்
தாமரையைத் தழுவத்தான்
செய்கிறது...'

● **ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்**

காதலர்கள் பரிமாறிக் கொள்ளும் 'இச்'சை முதன்முதலில் கண்டுபிடித்த மகானுபாவன் யார் சார்...? இந்த 'இச்' எத்தனை வகைப்படும்...?

'இச்சையால்' தன்'னிச்'சையாக வருவது 'இச்'... கண்டுபிடித்தவர் மகானுபாவனல்ல, மகா சுகானுபாவர்... அவரவர் 'இச்'சா சக்தியைப் பொறுத்து இது விதவிதமாக வேறுபடும்.

● **ஏ.கே.நாசர், திருப்பட்டினம்**

அழகான ஆண்மை எது...?

வேளாண்மை.

● எம்.செல்லையா, சாத்தூர்

மௌனம் - சம்மதத்தின் அறிகுறியா...?

அறிகுறியாகவும் இருக்கலாம், ஒன்றும் அறியாத தற்குறியாகவும் இருக்கலாம்...

● கே.எஸ். கிருஷ்ணவேணி, குடந்தை

'கிரேஸியைக் கேளுங்கள்' பகுதியில் என் கேள்வி இடம்பெற எந்தக் கடவுளை வேண்டிக்கொள்ள வேண்டும்...? எந்தக் கோட்டாவில் இடம் பிடிக்க வேண்டும்?

ராக்கெட் வேகத்தில் Hurryயாக ஸ்ரீஹரிகோட்டாவில் அனுப்புங்கள்.

● மித்ரா, மும்பை

எதைத் தெரிந்துகொண்டால் எல்லாம் தெரிந்ததாகும்...?

'நான் - sense' ரமண மார்க்கம்.

● பவதாரிணி, அண்ணாநகர்

கோகுலாஷ்டமியில் கண்ணன் வருகைக்காக 'கால்' போடுகிறோம். விநாயக சதுர்த்தியின்போது பிள்ளையாருக்காக 'கால்' போடுவதில்லையே...ஏன்?

கண்ணனுக்காகப் போட்ட 'காலை' அழிக்காமல் வைத்திருங்கள்... மாமன் வழி நடக்கும் மருமகன் கணபதி அதில் அட்ஜஸ்ட் பண்ணி நடந்து வந்து உங்கள் தோளில் தும்பிக்'கை' போடுவான். 'கால்' போடுகிறோமோ, 'கை' போடுகிறோமோ, பண்டிகை நாட்களில் பகவான் பேரைச் சொல்லி... முறுக்கு, சீடை, அதிரசம், அப்பம், கொழுக்கட்டை என்று ஏகமாக வெளுத்துக்கட்டி நாம்தான் தொப்பை போடுகிறோம். ○





புரியலே...!

மூப்பது நிமிட காத்திருப்புக்குப்பின் மோகனும் சிவாவும் உள்ளே அழைக்கப்பட்டனர்.

''சொல்!'' கணீரென்ற குரலுடன் கண் விழித்தார் மந்திரவாதி. சிவா ஆரம்பித்தான்.

''சாமி... இவன் என் நண்பன் மோகன். இவனுக்கு நான் ரெண்டு லட்ச ரூபா கடன் தரணும். என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாத நிலைமை! நீங்க தயார் பண்ற ''உருமாறும் லேகியம்'' எனக்கு கெடச்சா அத வெச்சு எங்க ஆஃபீஸ்ல கேஷியர் ரூபத்துல மாறி எப்படியாவது பணத்த எடுத்து இவனுக்கு செட்டில் பண்ணிடுவேன்! அதேநேரம் உங்க ஃபீஸும் கரெக்டா பத்தாயிரம் இப்பவே தந்திடுவேன்'' என்ற சிவா ரூபாய் பத்தாயிரத்தை எடுத்து மேஜை மீது வைத்தான்.

மந்திரவாதி சிறிது யோசித்தார். பிறகு நெல்லிக்காய் அளவு லேகியத்தை எடுத்து வெற்றிலையில் சுருட்டி ''தம்பி, பத்திரம்! முப்பது வினாடிதான் நீ மாறப்போகும் உருவம் மத்தவங்களுக்குத் தெரியும். ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து சிவாவிடம் கொடுத்தார். உருமாறுவதற்குச் சொல்ல வேண்டிய மந்திரத்தையும் சொல்லிக் கொடுத்தார்.

மறுநாள்... கேஷியர் தன் அறைச் சாவியை மாட்டிவிட்டு சாப்பிடச் சென்ற அடுத்த நொடி, லேகியத்தை எடுத்து விழுங்கினான். மந்திரத்தை உச்சரித்த உடனே அவன் கேஷியராகவே மாறினான். உடனே சாவியை எடுத்து மளமளவென்று நான்கு ஐநூறு ரூபாய் கட்டுகளை ஒரு பையில் சுருட்டினான். மீண்டும் சாவியை மாட்டினான். தன் இருக்கைக்கு வந்தான். சிவாவாக மாறினான்.

''அப்பாடா' என்று பெருமூச்சு விட்டு நிமிர்ந்தபோது, எதிரே மோகன்!

''என்னடா திமிர்னு?''

''அவசரம்தான்... பணம் கெடச்சுதா?'' மோகன் கேட்க, இதுவும் நல்லதுக்குத்தான்... ஆஃபீஸில் செக் பண்ணினால் கூட மாட்டிக்கொள்ள வாய்ப்பிருக்காது என்று பணத்தை மோகனிடம் கொடுத்து விரைவாக அவனை வெளியேற்றினான்.

அன்று மாலை...

மோகன் கேட்டான் :

''பணம் கொண்டு வந்தியாடா சிவா?''

''என்னது பணமா? நீதான் மத்யானமே வந்து வாங்கிட்டுப் போய்ட்டியேடா?'' என்று சிவா பதற... மோகன் மறுக்க... எது உண்மை? எது பொய்? யாருக்குமே புரியவில்லை.

ஆனால் எல்லாம் புரிந்த ஒருவர் மட்டும் அந்த ஐநூறு ரூபாய் கட்டுக்களை ஆசையாகத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பெருங்களத்தூர். கீதாசீனிவாசன்

Welcome to affordable luxury

HANSA CHITRA
PALLAVARAM

Close to GST Road,
Leading Schools & Colleges
Market & Railway Station,
10 minutes drive from Airport.

1325 Sq.ft. to 1543 Sq.ft.,
Only 3 Bedroom Flats
Rs. 43.70* to Rs. 50* Lakhs
with all amenities



Location : 91, Dargah Road, Pallavaram, Chennai - 600 043



HANSA COURTYARD
THIRUVOTTIYUR

Opp. to Thiruvottiyur Bus Terminus,
very near to Markets,
Schools & Railway Stations

511 Sq.ft. to 999 Sq.ft.,
1, 2 & 3 Bedroom Flats
Rs. 12.5* to Rs. 24.4* Lakhs
with all amenities

Location : 643, Thiruvottiyur High Road, Chennai - 600 019

HANSA Estates

Sharika Mansion, 2, Lake Area First Street,
Nungambakkam, Chennai - 600 034.
Tel : 4221 0343 Mobile : 93807 18993 / 93807 18997
Email: sales@hansaestates.com

*Exclusive of Taxes & Charges



கல்கி



2008 செப்டெம்பர் 7
ஸர்வதாரி ஆவணி 22
மலர் : 67
இதழ் : 6

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

ஒரிஸ்ஸா: வாரி வழங்கிய வன்முறை உரிமம்!

ஒரிஸ்ஸாவில் நடந்துள்ள குரூர நிகழ்வுகள் நம்மை வேதனையுடன் தலைகுனியச் செய்கின்றன. சம நோக்குக்கும் சகிப்புத் தன்மைக்கும் பெயர்போன நம் நாட்டிலே, எந்தத் தேசத்திலும் நடக்கக் கூடாத கொடூரங்கள் நடந்துள்ளனவே என்கிற தலைகுனிவு; ஏற்கெனவே கிரஹாம் ஸ்டெய்ன்ஸ் பாதிரியாருக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமை, மீண்டும் ஒரு கிறிஸ்துவ அநாதை இல்ல பெண் ஊழியருக்கு நடந்துள்ளதே என்கிற வேதனை.

பிரச்னையின் வேர் என்பது கிறிஸ்துவ மத மாற்ற வியாபாரம்தான் என்பதில் சந்தேகமேயில்லை. இதன் காரணமாகவே வி.எச்.பி.யைச் சேர்ந்த சுவாமி லக்ஷ்மணானந்தா கொலை செய்யப்பட்டுள்ளார். மத மாற்றத்தை எதிர்த்து அவர் ஒரிஸ்ஸாவில், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பணியாற்றி வருவதால், ஏற்கெனவே பலமுறை அவர் உயிருக்கு அபாயம் நேர்ந்து தப்பியும் இருக்கிறார்.

லக்ஷ்மணானந்தா கொலை எவ்வளவு குரூரமோ, அநீதியோ, அந்த அளவுக்கு அதைத் தொடர்ந்து வி.எச்.பி.யினர் காட்டிய காட்டுமிராண்டித்தனமும் கண்டனத்துக்குரியது. தொண்டர்களின் உணர்ச்சி வேகத்துக்குத் தடைபோட்டு, நிலைமை மேலும் சீர்கெடாமல் வி.எச்.பி. அமைப்பின் தலைவர்கள் காத்திருக்க வேண்





டும். மாறாக, வன்முறை வெடித்து, ஒரிஸ்ஸா முழுவதும் பரவிவிட்டது. பா.ஜ.க. - பிஜு ஜனதா தள அரசு நிர்வாகம் கையைப் பிசைந்துகொண்டு நிற்கிறது. இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது! இந்தச் சூழலில், கலவரங்களை அடக்கும் அழுத்தந்திருத்தமான நடவடிக்கைகளை யார் சிந்தித்து எடுக்கப் போகிறார்கள்?!

நடந்த நிகழ்வுகளை ஒட்டுமொத்தமாகக் கண்டித்து, வி.எச்.பி. தலைமையுடன் தொடர்பைத் துண்டித்துக்கொள்ளும் அறிக்கையை அல்லவா, பா.ஜ.க. தலைமை தாமதமின்றி வெளியிட்டிருக்க வேண்டும்? அதற்கான துணிவு அக்கட்சித் தலைவர்களிடம் இல்லாதது மிகவும் வருத்தத்துக்குரியது. வி.எச்.பி. ஆதரவு நிலையினாலும் ஹிந்து அடிப்படைவாதத்தை அங்கீகரிப்பதாலும் வோட்டுவங்கி பலம் பெறும் என்று பா.ஜ.க. போடுகிற கணக்கு தப்புக் கணக்காகவே முடியும்.

ஹிந்துக்களை கிறிஸ்துவர்களாக மதம் மாற்ற பணம் கொடுப்பதும், வேறு உதவிகள் மூலம் ஆசை காட்டுவதும் கேவலமான காரியங்கள். அவ்வாறு மதம் மாறுவோர் உண்மையான கிறிஸ்துவர்களாக எப்படி இருக்க முடியும்? வெறும் எண்ணிக்கை பலத்தினால் எந்த மதமும் ஜெயிக்கமுடியாது. இதனை கிறிஸ்துவ அமைப்புகள் புரிந்துகொள்ள வேண்டும்.

நமது அரசியல் தலைவர்களும் 'மத மாற்ற வியாபாரம்' என்கிற கொடுமையை, ஓர் அரசியல் பிரச்னையாக அணுகாமல், சமூகப் பிரச்னையாக அணுகி, மக்களின் மனங்களையும் அவர்களது தேவைகளையும் புரிந்துகொண்டு தீர்வுகள் தேடவேண்டும். ஆனால், பல் குத்துவதைக்கூட அரசியலாக்கிப் பழகிவிட்ட நமது அரசியல் தலைவர்கள், போதாக்குறைக்கு அடியாள் படைகளையும் வளர்த்து, அவற்றுக்கு வன்முறை உரிமம் வழங்கி வைத்துள்ளார்கள்! வன்முறை கட்டவிழும் தருணங்களுக்கு இச்சூழல் சுலபமாக இடங்கொடுக்கிறது. அனைத்து கட்சித் தலைவர்களும் கூடி சீர்திருத்தங்களை நாடாவிட்டால், 2020க்குள் ஒன்றுபட்ட இந்தியா என்பதே பழங்கனவாகிவிடும்! ○

விழுவது வீழ்ச்சியல்ல; எழாமல் இருப்பதே வீழ்ச்சி என்பதை மெலட்டூர் இரா. நடராஜனின் 'அண்டங்காக்கை' தெளிவாகக் கூறியிருந்தது!

- சாந்தி சுந்தர், நெய்வேலி



புரிந்தால் சரிதான்!

கண்ணனின் உத்தமமான குணங்களை வர்ணித்து நம் மனத்தில் ஆழப் பதியவைக்கும் வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் ஸ்வாமி அவர்களுக்குப் பாராட்டு.

- ரெங்கமணி கிருஷ்ணஸ்வாமி, சென்னை - 90

லக்ஷ்மிமோகன் எழுதிய 'தியான வாக்கிங்' கட்டுரை (பக். 18-19) நடைப் பயிற்சி செய்பவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய கட்டுரை. பலருக்கும் பயன் படக்கூடிய வகையில் இருந்தது.

- எஸ். உஷா சுதர்சன், திருச்செங்கோடு

பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா 'எது செய்யத்தக்கது, எது செய்யத் தகாதது என்று நிர்ணயிப்பதில் சாஸ்திரமே உனக்குப் பிரமாணம்' எனக் கூறியதை காஞ்சிப் பெரியவர் எடுத்துச் சொன்னது மிகவும் அருமை.

- வி.ஜி. சத்தியநாராயணன், சென்னை - 61

கார்ட்டூனில் மர்மக்கவிதை என போடப்பட்டிருந்தாலும் புரிந்துகொள்ள வேண்டியவர் புரிந்துகொண்டு அநாகரிகம் என கண்டித்தும் விட்டாரே!

- அ.சம்பத், திருவரங்கம்

'**இ**யற்கைப் பேரழிவில் புதைந்தவர்களுக்கு என்றாவது கட்சிக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறந்தது உண்டா?' என்று கவிதையில் கவிஞர் கேட்டிருப்பது சிந்தனைக்குரிய விஷயம்.

- ஆர்.பழனிக்குமார், மதுரை 14

பி.எம்.எல். கட்சியும், பி.பி.பி. கட்சியும் ஒற்றுமையுடன் செயல்படாவிடில், பாகிஸ்தானில் மறுபடியும் சர்வாதிகாரம் புகுந்துவிடும்! 'இன்னொரு முஷாரஃப்' தோன்றுவார் என தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது பாகிஸ்தானுக்கு ஓர் எச்சரிக்கை!

- கே.வி.ராமன், சென்னை - 73

ஒவ்வொருவருக்குள்ளும் விழிப்புணர்வைத் தட்டிஎழுப்பும் 'முனியன்' போன்ற நாடகங்களை ஆதரிப்பதும், உற்சாகப்படுத்துவதும் மிகவும் அவசியம்.

- என். பாலகிருஷ்ணன், மதுரை

தூண்டப்பட்ட விளக்குதான் பிரகாசிக்கும் என்பதற்கு இயக்குனர் சிம்புதேவனின் மூன்று மாமன்கள்தான் ஆதார சுருதிங்க!

- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

எங்கள் மனைகளில் முதலீடு செய்து வளமையையும் மகிழ்ச்சியையும் பெற்றிடுங்கள்.

BLB
PLEDGED TO ETHICS



சென்னைக்கு மிக அருகில்
CMDA எல்லைக்குள்
4 வழி பாதை இணைப்பு
வசதியுடன் கூடிய

BLBயின் புதிய திட்டமானது இலாபகரமான முதலீட்டிற்கு அரிய வாய்ப்பினை உங்களுக்கு அளிக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக வளர்ச்சி வாய்ப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில், அரசு அனுமதி பெற்ற மனைகளை எங்கள் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வில் வளமையையும் மகிழ்ச்சியையும் அளித்துள்ளோம். எங்கள் கொள்கை அடிப்படையிலான அணுகுமுறை, தொழில்முறை செயல்பாடு மற்றும் தனிப்பட்ட சேவை ஆகியவை இத்துறையில் எங்களுக்கு நம்பகமான பெயரை பெற்றுத் தந்துள்ளன.

எங்களின் தற்போதைய திட்டங்கள் வளமைக்கான உத்தரவாதத்துடன் பல பலன்களை உங்களுக்கு அளித்திட காத்திருக்கின்றன. நீங்கள் தயாரா?

ஸ்ரீ நரசிம்மா நகர்

ஆவடி / பட்டாபிராம் / திருநின்றவூர் / பூந்தமல்லி
ஆகிய இடங்களிலிருந்து செல்லும் வசதி உண்டு.

(CMDA Approval No. 37/2007)

ஸ்ரீ ஹயக்ரீவா நகர்

மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி
மற்றும் GST ரோடு (NH) அருகில்

(DTCP Approval No. 117/2007)

ஸ்ரீமத் ராமானுஜர் டவுன்

வண்டலூர் கேளம்பாக்கம் IT சாலை

(DTCP Approval No. 151/2006)

சிறப்பம்சங்கள்: ✓ தார் சாலைகள் ✓ முழுவதும் வேலியிடப்பட்டது ✓ உடனே வீடு கட்டலாம் ✓ சுற்றிலும் வீடுகள் ✓ சுவையான நிலத்தடி நீர் ✓ இரயில் மற்றும் பஸ் வசதியுடன் கூடியது ✓ தெளிவான பத்திரங்கள் ✓ 5 ஆண்டுகள் பாதுகாப்பு சேவை

மனை | மகிழ்ச்சி | செழிப்பு

இலவசமாக மனையைப் பார்வையிட அழைக்கவும் :

28345104 / 05 / 06

கடன் வசதி
IDBI
SUNDARAM BNP PARIBAS HOME FINANCE

BLB ESTATES PRIVATE LIMITED

"SREE AUDISESHA BHAVAN", New No. 21, Chinnaiah Street, (Off. G.N. Chetty Road & Thirumalai Pillai Road), T.Nagar, Chennai - 600 017. E-Mail: blbestmail@vsnl.net Website: www.blbestates.com

COIMBATORE MARKETING OFFICE: 1105, Trichy Road, (Adj. to ABI), Ramanathapuram, Coimbatore - 641 045. Uma: Ph: 4395609 / 99943 52003

நன்மதிப்பில் முதலீடு



கவிதையக்

கலை இலக்கியப் பெருமன்றம் சிறந்த கவிதைத் தொகுப்புக்கு வழங்குவது 'ஏலாதி' விருது. இவ்வருடம் கவிதாயினி தமிழச்சி தங்கபாண்டியனின் 'வனப்பேச்சி' கவிதை நூலுக்கு இவ்விருது கிடைத்துள்ளது. அதனை முன்வைத்து அவரைச் சந்தித்தபோது...

● படைப்பாளிக்கு விருது/பரிசு அவசியம்தானா?

அங்கீகாரம் அவசியமானது. அங்கீகாரம் என்பது நமது செயலுக்கான நியாயத் தீர்ப்பு. அங்கீகாரத்தின் வெளிப்பாடுதான் விருது. விருது ஓர் உந்துசக்தி. அடுத்த அடிக்கான கிரியாஊக்கி. விருது பலரைக் கூட்டி அளிக்கும் பரிசுத்தொகை, பட்டய மாக இருக்க வேண்டியதில்லை. ஒற்றை ரோஜாவும், ஒரு ஜோடி கைத்தட்டலும்கூட விருதுதான். நிறுவனம் சார்ந்த விருது முக்கியமல்ல; எதற்காக என்பதுதான் முதன்மைக் கேள்வி. ஆனால் கலை இலக்கியப் பெருமன்றத் தின் 'ஏலாதி விருது' கிடைத்தது எனக்குப் பெருமைதான்.''

● ஆசிரியப் பணி; அரசியல் பணி; இலக் கியப் பணி இதில் எதை மனதுக்கு நெருக்கமாய் உணர்கிறீர்கள்?

''இலக்கியம் - என்னைச் சார்ந்ததாய் தற்போது உள்ளது. ஆசிரியப் பணிதான் மனதுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. காரணம் நான் கற்பதும் கற்பிப்பதுமான கொடுக்கல் வாங்கல், ஆத்மார்த்தமாய் நடக்கும் தளம் அது. ஆசிரியப் பணி தொழில் அல்ல - வாழ்க்கை முறை. ஆனால் நமது சேவைக் கனவுகளைச் செம்மையாகப் பூர்த்தி செய்ய, சமூகத்தின் கடைக்கோடி மக்களுக் கும் கடமையாற்ற அரசிய லால்தான் சாத்தியம் என்பதால் அதில் தீவிரம் காட்டுகிறேன்.''

● ஒரு படைப்பின் வெற்றியை எது தீர்மானிக்கிறது? யதார்த்தத் தொகுப்பான 'எஞ்சோட்டுப் பெண்'ணிலிருந்து 'வனப் பேச்சி' நவீன தன்மைக்கு மாறியதேன்?

''எனது வரிகளில் தனது வாழ்க்கை யைப் பார்த்தால்; எனது சொற்களின்

துணையோடு வாசகனும், நானும் ஒரு புள்ளியில் கைகுலுக்கிக் கொள்ள முடிந்ததால் அதுவே படைப்பின் வெற்றி. கவிதைகளில் யதார்த்தம், நவீனம் என்பதெல்லாம் தொடர் பயணத்தில் நிகழும் மாற்றம். கவிதைகளில் வலிந்து எதுவும் செய்ய இயலாது. உள்ளடக்கம்தான் வடிவத்தைத் தீர்மானிக்கிறது.''

● **கவிதையைக் கடந்து வேறு இலக்கிய வடிவத்திற்கு நகர விருப்பமா?**

''எழுத்தைப் பொறுத்தவரை திட்டமிடல் எனக்கில்லை. அதில் நம்பிக்கையுமில்லை. ஆய்வு நோக்கில் விமர்சனக் கட்டுரை எழுத ஈர்ப்பும், முக்காலத்தையும் வடிவமைக்கும் சிறுகதைகள் மேல் வசீகரமும் உண்டு, வருங்காலத் தட்பவெப்ப நிலை சாதகமானால்!''

● **ஆய்வுப்படிப்பும் அரசியல் படிப்பும் என்னவாயுள்ளது?**

''ஆய்வுப்படிப்பு முடிவடைய இருக்கிறது. தி.மு.கவில் அரசியல் படிப்பைத் துவங்கி படித்துக்கொண்டிருக்கிறேன்.''

● **வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவீர்களா?**

''அது தலைவரின் விருப்பத்தையும் முடிவையும் பொறுத்தது.''

● **நாடகக் கலைஞரான உங்களின் சினிமா பிரவேசம்...?**

''இப்போதைக்கு இல்லை. சினிமாவில் பெண்களுக்கான வெளியில் அறிவுசார்ந்த இடம் கிடைத்தால் மறுப்பதற்கில்லை.''

● **எழுத்தாளர்களின் அரசியல் வருகை - இலக்கியவாதிகளின் சினிமா விஜயம் எது விசேஷமானது?**

''எந்த இடமாக இருந்தாலும் அறிவு ஜீவிகளை விட மானுட ஜீவிகளின் பிரவேசம் மதிப்புவாய்ந்தது.''

● **கவிதைச் சூழலில் பெண் உடல் மொழி, பெண் பெயரில் ஆண்கள் எழுதக் கூடாது போன்ற சர்ச்சையில் உங்கள் கருத்து பதிவாகவில்லையே?**



கடந்து...
- தமிழச்சி தங்கபாண்டியன் பேட்டி

''பதிவுசெய்து கொள்ளுங்கள். ஆண்களுக்குச் சமமாக எழுத பெண்களுக்கு உரிமை உண்டு. ஆனால் பெண் உடல் மொழி மூலம்தான் ஒரு பெண் படைப்பு என்று அடையாளப்படுத்தல் அல்லது படைப்புகளில் பால்பேதம் தலைதூக்குவது தேவையில்லை. புனைப்பெயர் வைத்துக் கொள்வது அவரவர் உரிமை. அதில் தலையிடுவது உரிமை மீறல்தான். ஆண்கள் பெண் பெயரை புனைப்பெயராக வைத்துக் கொள்வதாலேயே பெண் இருப்பு அழியும் என்பது அர்த்தமற்ற வாதம்.''

\- அமிர்தா

ஒரு கிளை நூலகமும் சில

நான் ஆறாவது படித்தபோது பள்ளியில் நூலகம் இருப்பதாகவும், படிக்க கதைப் புத்தகமெல்லாம் தருகிறார்கள் என்றும் வியப்பான செய்தி கேள்விப்பட்டேன். ஹெட்மாஸ்டர் ரூமுக்குப் பக்கத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் போய் நூலகம் இருப்பதாகச் சொன்ன ரூமுக்குள் எட்டிப் பார்த்தபோது சிவாஜி வாத்தியார் மட்டும் அமர்ந்து ஏதோ படித்தபடி இருக்க, உள்ளே அலமாரிகளோ புத்தகங்களோ எதுவும் இல்லை. திரும்பிப் பார்த்தவர், அதட்டலாக 'என்னடா வேணும்?' என்றார். நான் 'லைப்ரரி...' எனத் தயங்கினேன். 'யாரு... உனக்கு சொன்னது? என்றார் இன்னும் கோபமாய். நான் மிரட்சியில் 'வள்ளிநாயகம் சொன்னான்' என்றேன். சிறிது மௌனித்தவர் 'உள்ள வாடா' என்றார். அவர் முன் போய் நின்ற என்னை மேலும் கீழுமாய் பார்த்து 'வாசிக்கத் தெரியுமா?' என்றார். பயத்தோடு 'வாசிப்பேன்' என்றேன். மேஜையைத் திறந்தார். அதில் புத்தகங்கள் இருந்தது. ஆக, அதுதான் லைப்ரரி என்ற விஷயமும் எனக்குப் புரிந்தது. அதிலிருந்து 'நம்மைச் சுற்றியுள்ள மிருகங்கள்' என்ற புத்தகத்தைக் கொடுத்தார். நான் அதைப் பார்த்த உடனேயே 'ஏதாவது கதைப் புத்தகம் இருக்குமா சார்?' எனக் கேட்க கொந்தளித்து விட்டார். 'உதை படுவ ராஸ்கல், முதல்ல இதைப்படி!' என கத்தியதோடு விடாமல் 'புக்குல மூலை கிலை மடங்கட்டும்... அப்ப இருக்கு!' என்றார்.

சில வாரம் கழித்து ஒருமுறை அவரை வழியில் பார்த்தபோது, 'புத்தகம் படிச்சு முடிச்சுட்டியா?' என்றார் இறுக்கமாக. நான் 'எந்தப் புத்தகம் சார்?' என்றேன். பிறகென்ன, அங்கு என்ன நடந்திருக்குமென உங்களால் யூகிக்க முடியும்.

முதன் முதலாய் வீட்டுக்கு மிக அருகில் இருந்த மாவட்டக் கிளை நூலகத்துக்கு என் அண்ணன்தான் கூட்டிப் போனார். அத்தனை புத்தகங்களை ஒரே இடத்தில் பார்த்துப் பிரமித்துப் போனேன். 'நம்மைச் சுற்றியுள்ள மிருகங்கள்' மாதிரி புத்தக வகையறாக்களே இல்லை. இரண்டாயிரம் புத்தகங்கள் இருந்திருக்கும். தவிர தினசரி, வார, மாத இதழ்கள் எல்லாமும் இருக்க திக்கு முக்காடிப் போனேன். பத்து சேர்கள், நான்கு அலமாரிகளுடன் முப்பதுக்குப் பத்தடி ஆஸ்பெட்டாஸ் கூரை அது.

அண்ணன் போய்விட புத்தக அலமாரிகளில் தேடி... விதவிதமான சப்ஜெக்டுகளில் பதினோரு புத்தகங்களை எடுத்துக்கொண்டு லைப்ரரியின் டேபிள் முன் வந்தேன். 'ஒரு நேரத்துக்கு எத்தனை புக் எடுக்கலாம் சார்?' என்றேன். புத்தகங்களைப் பார்த்து மிரண்டு போனவர், 'எல்லாத்தையும் முதல்ல டேபிள் மேல வை' என்றார். மெல்ல வைத்தேன். 'இந்தப் பக்கம் வந்து நில்லு' என்றார். நான் போய் நிற்க, கடும் எரிச்சலாய் 'இந்தா பாரு... பணம் கட்டி டோக்கன் வாங்கினாத்தான் புத்தகம் எடுக்க முடியும். அப்படியே டோக்கன் வாங்கினாலும் ரெண்டு புக்குதான் எடுக்க முடியும். இனி இந்த டேபிளைத் தாண்டி நீ உள்ளே போகக் கூடாது.... புரியுதா...?' எனக் கோபமாக அதட்டியவர் உள்பக்கம் பார்த்து....

தலைமறைவாளர்களும்

'யோவ் முத்து, தெருப்பசங்களை உள்ள நுழையாம பாத்துக்கோன்னு சொன்னா புரியாதாய்யா?' எனக் கத்தினார்.

சாதனை என்னவென்றால் இரண்டே மாதத்தில் அதே லைப்ரரியன் எனக்கு மிகவும் தோஸ்த் ஆகிவிட்டார். அவ்வளவு புத்தகங்களுக்கு அவர் 'ஓனர் மாதிரி' என்பதாலேயே நானும் பல திசைகளில் இருந்து அவரை வலையில் வீழ்த்தினேன். வீட்டிலிருந்து காஃபி கொண்டு போய் கொடுப்பது, அவசரத்துக்கு ஒரு குடம் தண்ணீர் எடுத்துத் தருவது, சர்பத் வாங்கிக் கொடுப்பது என பல உதவிகளைச் செய்து அவர் உள்ளத்தில் இடம் பிடித்தேன். ஒன்பது மணி லைப்ரரியை அவர் ஒன்பதரைக்குத் திறக்கும்போதே நானும் உடன் இருப்பேன். நான்தான் தினசரி பேப்பர்களுக்கு ஸ்டேப்லர் அடிப்பேன். நான் ஒரு ரவுண்டு படித்த பின்புதான் அவருக்கே கொடுப்பேன்.

நான் செய்யும் உதவிகளுக்குப் பதிலுதவியாக அவர் வார, மாத இதழ்களைத் தேவைப்பட்டால் சில புத்தகங்களையும் வீட்டுக்குப் படிக்கத் தருவார். காதும் காதும்





வைத்ததுபோல் இரவே படித்துவிட்டு, மறுநாள் மஞ்சள் பையில் போட்டு மர்மமான முறையில் திருப்பிக் கொடுப்பேன். இந்த 'மர்ம நட்பு' நன்கு வளர்ந்தது. அற்புதமான பல புத்தகங்களை இங்குதான் படித்தேன். சுஜாதா, கி.ரா நாவல்கள், விக்ரமாதித்தன் - வேதாள கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என நிறைய கிடைத்தது. கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் படித்துத் தீர்த்தேன்.

ஒருமுறை என் நண்பன் வீட்டில் 'Sports Star' இதழ் வைத்திருந்தான். வாங்கிப் பார்த்தால் லைப்ரரி முத்திரை இருந்தது. 'என்னடா?' என்றேன். 'ரொம்பப் பிடிச்ச புக்கை மட்டும் நம்ப லைப்ரரில இருந்து எடுத்துக்குவேன்!' என்றான். 'எடுத்துக்குவியா?' என்றேன் அதிர்ச்சியாய். 'அதாண்டா சுட்டுட்டு வந்துருவேன்' என்றான் அசால்டாய்.

அதன்பின்தான் லைப்ரரி திருட்டுக்களை அரங்கேற்றும் தலைமறைவாளர்களைக் கவனிக்க ஆரம்பித்தேன். இல்லை... துப்பறிய ஆரம்பித்தேன் என்பதுதான் சரி. படித்துக் கொண்டிருக்கும் போதே 'டர்' என ஒரு பக்கத்தைக் கிழித்து மடித்து வைப்பவர்கள், மாடியிலிருந்து கீழே இருக்கும் நண்பனிடம் புத்தகத்தைத் தூக்கிப் போடுபவர்கள், வேலை வாய்ப்புப் பகுதியில் 'சரட்' டென அட்ரஸை மட்டும் கிழிக்கும் வறுமையாளர்கள், போகிற போக்கில் புத்தகத்தைக் கைலிக்குள் போட்டு மடித்துக் கட்டிச் செல்பவர்கள், முன் வயிற்றில் பேண்ட்டுக்குள் சொருகிக் கொள்பவர்கள் எனப் பலவகை உண்டு. இவர்கள் அந்தத் திருட்டை நடத்தும் க்ஷணம் ஒரு நொடிக்கும் குறைவு. கொஞ்சம் அசந்தாலும் காட்சியாகப் பார்க்க முடியாது. சத்தம் மட்டும்தான் கேட்கும். இவர்கள் முகபாவம் பெரும்பாலும் புத்த பிட்சுக்கள் போல் இருக்கும். பாடி லாங்வேஜில் கிட்டத்தட்ட முகேஷ் அம்பானி போன்ற பணக்காரத்தனம் தெரியும்.

என் உளவுத் தகவல்கள் லைப்ரரியனுக்குப் போக ஆரம்பித்ததும் கிடுக்கிப்பிடி பிடித்தார். திருடர்கள் மாட்ட ஆரம்பித்தார்கள். ஒருமுறை பிடிபட்ட திருடன் மறுபடி அங்கு வரமாட்டான். சில மாதத்தில் திருட்டு முற்றிலுமாய் நின்று போய்விட்டது. (ஆனால், என் நண்பனை மட்டும் கடைசிவரை கையும் களவுமாகப் பிடிக்க முடியவில்லை). இதற்கிடையே எதிர்பாராத விதமாக எங்கள் 'மர்ம நட்பு' ஒரு நாள் உடைந்தது. நான் ஏதோ சின்னச் சின்ன உதவிகள் செய்யப் போக என் தன்மானத்தைச் சோதிக்கும் விதமாய்... 'சைக்

கில்ல சிம்மக்கல் வரை போயி அரை கிலோ நரகஸ் காஃபித்தூளும், ஒரு சின்ன தேன் பாட்டிலும் வாங்கி வர முடியுமா?' என்றார். நான் பயங்கரக் கடுப்பாகி 'முடியாது சார்' என சொல்லிவிட்டுப் போய் விட்டேன். கிட்டத்தட்ட சண்டை!

காதும் காதும் வைத்ததுபோல் இரவே படித்துவிட்டு, மறுநாள் மஞ்சள் பையில் போட்டு மர்மமான முறையில் திருப்பிக் கொடுப்பேன்.

அதன் பின் அங்கு போவதே இல்லை. சில மாதங்கள் கழித்து, தயக்கமாய் அங்கு சென்றபோது லைப்ரரியன் ரிட்டையர்டு ஆகிப் போய் விட்டார் என்றார்கள். மனைக்குக் கஷ்டமாய் இருந்தது. அவர் அட்ரஸ் வாங்கிப்போய் பார்க்கலாமா எனத் தோன்றியது. புது லைப்ரரியனிடம் 'யுனெஸ்கோ கூரியர் புக் எப்ப வரும்?' என்றேன். காட்டுக்கத்தலாய், 'அது எப்படி வரும்? நாம தான் போய் வாங்கணும். நான் ஒண்டியா எத்தனையைக் கட்டி மாரடிக்கிறது?' என்றார். அந்தக் கரடியின் சகவாசம் எனக்குத் தேவைப்படவில்லை.

அதன்பின் மதுரை மாவட்ட மைய நூலகத்தில் வாழ ஆரம்பித்தேன். அருமையான பொக்கிஷம் அது. ஆங்கில மொழிபெயர்ப்புக் கதைகள் நிறைய இருக்கும். அபூர்வமான சயின்ஸ் ஃபிக்ஷன் கதைகளும் கிடைக்கும். பின் தியாகராசர் கல்லூரியிலும் பெரிய நூலகம் இருந்தது. காஸ்ட்லியான புத்தகங்கள் இருக்கும். படம் பார்ப்பதற்காகவே சிலவற்றை எடுத்து வருவேன்.

சென்னை வந்தபின் தேவநேயப் பாவாணர், பிரிட்டிஷ் கவுன்ஸில் லைப்ரரிகளுக்கு அடிக்கடி போவேன். நிறைய கார்ட்டூன் புத்தகங்கள் கிடைக்கும். 'புலிகேசி' கதையை உருவாக்கும் முன் கன்னிமாரா லைப்ரரியிலேயே மூன்று மாதங்கள் கிடந்தேன்.



இத்தனை கடந்தும் எனக்கு நடை கற்றுக்கொடுத்த அந்த மரியாதைக்குரிய மாவட்டக் கிளை நூலகத்தின் புத்தக வாசனைகள் மட்டும் இன்னும் எனக்கு மறக்கவில்லை. சில புத்தகங்களின் பைண்டிங் அட்டையின் டிசைன்கூட ஞாபகமிருக்கிறது. அந்த லைப்ரரியன் இப்போது எப்படியிருப்பார்? அன்று அவருக்கு நரகஸ் காஃபித்தூளும், தேன் பாட்டிலும் வாங்கிக் கொடுத்திருக்கலாமோ எனத் தோன்றும்.

(தொடரும்)

கண்ணபிரானும் நாரதரும் பூமியில் நடந்து போகிறார்கள். தாகம் என்று தண்ணீர் கேட்கிறான் கண்ணன். கூப்பிடு தூரத்தில் தெரிந்த குடிசையில் வாங்கிவரப் போகிறார் நாரதர். போன இடத்தில் தன்னை மறக்கிறார். வாழ்க்கைச் சுழலில் சிக்கி, வெள்ளாமை, விளைச்சல், கல்யாணம், குழந்தைகள். வெள்ளத்தில் பயிரும் குடும்பமும் அழிகிறது. தனிமை சோகத்தில் மூழ்குகிறார். காற்றில் கண்ணன் குரல். 'குடிக்கத் தண்ணீர் கேட்டேனே, நாரதா, என்ன ஆச்சு?' இலக்கிய உத்தியான மேஜிக்கல் ரியலிசமும் தொழில்நுட்பக் கோட்பாடான வெர்ச்சுவல் ரியலிட்டியும் சந்திக்கும் புராண அற்புதம் இது. இங்கே இதில் ரெண்டாவது மட்டும்.

வெர்ச்சுவல் ரியலிட்டி கம்ப்யூட்டர் உருவாக்கும் ஒளி-ஒலிக் காட்சி. விசேஷ கம்ப்யூட்டர் திரையில் இந்த மாய உலகம் முப்பரிமாணமாக விரிய நாம் இதன் நடுவே நடக்கிறோம். எதிர்ப்படும் பிம்பங்களைத் தொட்டு உணர்கிறோம். கை குலுக்குகிறோம். பேசுகிறோம். சிரிக்கிறோம். கம்ப்யூட்டர் படைக்கும் மாயா லோகத்தில் நாம் அமிழ்ந்து அனுபவிப்பது எப்படி சாத்தியமாகிறது?

எட்டரை அடி விட்டமுள்ள ஒரு குழிந்த பந்து போன்ற அறை. தலையில் கவிழ்த்த ஹெல்மெட் போன்ற கவசத்தோடு இந்த மாயக் கோளத்தில் நுழையும்போது, மின்னலைகள் மூலம் கவசம் கம்ப்யூட்டரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறது. நீங்கள் நிற்பது வெற்று அறைதான். ஆனால் கம்ப்யூட்டர் உங்கள் முன் ஒரு பச்சை வயல் பரப்பை இழையவிடுகிறது. எல்லையில்லாது பச்சை மண்ணும், நெல் கதிரும், வாய்க்காலும், மரமும், நீலவானத்தில் பறக்கும் கொக்கும் நாரையுமாக விரியும் வெளி. நீங்கள் நகரும்போது தலைக்கவசம் உங்கள் கண் அசைவைப் பின்தொடர்கிறது. உங்கள் பார்வை போகிற திசையையும் நீங்கள் நடக்கும் வேகத்தையும் ஒட்டிய பிம்பங்களை, கம்ப்யூட்டர் வரிசையாகக் காட்டத் தொடங்குகிறது. அதோடுகூட வாய்க்கால் மதகில் தண்ணீர் பாயும் ஒலி, மரக்கிளையில் குயிலின் குரல்



என்று கூடவே தொடர்கிறது. வயல்வரப்பில் குந்திப் பகல் உணவு கழிக்கும் விவசாயியின் பிம்பம் உங்களை நிமிர்ந்து பார்க்கிறது. அவரை ஏதோ விசாரிக்கிறீர்கள். கம்ப்யூட்டர் இப்போது அந்தப் பிம்பத்தின் மூலமாக உங்களுக்குப் பதில் சொல்கிறது.

டிஜிட்டல் கேன்மேன்

மாயாலோகம்

மரத்தின் மேல் இருந்து கூவும் குயில் எவ்விப் பறந்து வானத்தில் சிறகடிக்கும் போது அந்த இசை தேய்கிறது. டாப்ளர் கோட்பாட்டைப் பயன்படுத்தி கம்ப்யூட்டர் செய்யும் சித்து வேலை இது.



வெர்ச்சுவல் ரியலிட்டியில் அமிழ்ந்திருக்க மனித மூளையும் ஒத்துழைக்கிறது. கம்ப்யூட்டர் உருவாக்கிய பிம்பத்தைத் தொட்டதும் ஏற்படும் தொடும் உணர்ச்சி மூளையை ஒரு வினாடி மழுங்கடித்து விடமுடியும். திரையில் காட்டிய கையை வருடும்போது மூளையை மேக்னெடிக் ஸ்கானிங் செய்து பார்த்தால், அது ஏமாந்தது தெரியும். உடம்பில் இன்னொரு கை முளைத்து அது வருடப்படுவது போல் உணர்ச்சியை மூளை நம்பிவிட வாய்ப்பு உண்டு. தொடு உணர்ச்சியைக் கம்ப்யூட்டருக்கு உணர்த்த சென்சார் இணைத்த கையுறைகள் பயன்படுகின்றன.

பொழுதுபோக மட்டும் இல்லை, உயிர் காக்கவும் வெர்ச்சுவல் ரியலிட்டி உதவி செய்யும். உயரமான கட்டடங்களுக்கான கட்டுமானப் பணி நடக்கும்போது, உச்சிக்கு ஏறி இறங்கும் தொழிலாளர்கள் பலியாவது அவ்வப்போது ஏற்படும் துயர நிகழ்வு. வெர்ச்சுவல் ரியலிட்டி கொண்டு உருவாக்கிய கட்டுமான தளத்தில் தலையில் பாரத்தோடு தொடர்ந்து 'ஏறி இறங்க' முற்படும்போது தலைசுற்றல், களைப்பு வந்து தப்பாக அடி எடுத்து வைப்பதை கம்ப்யூட்டர் கண்காணித்து வெளிப்படுத்தும்.

தீ விபத்தை வெர்ச்சுவல் ரியலிட்டியில் அச்சு அசலாக நிகழ்த்திக்காட்டி, தீயணைப்பு வீரர்களுக்கு செயல்முறை பயிற்சி அளிக்க முடியும். எதிரில் வருகிறவர் மேல் மோதாமல் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வதிலிருந்து, அசுர வாகனங்களான மிலிட்டரி டேங்க், டிரக், கார்ப்பரேஷன் தண்ணீர் லாரி ஓட்டுவது வரை இப்படி மாயாலோகத்திலேயே கற்பித்து விடலாம்.

கற்பிக்க நாங்க ரெடி. கற்றுக் கொள்ள நீங்க ரெடியா? என்கிறது மாயாலோகக் கல்வி.



புத்த துறவி

சென்னை, தண்டையார்ப்பேட்டை நேதாஜி நகர் பிரதான வீதியில் கம்பீரமாக நிற்கிறது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ஆளுயரச் சிலை. பள்ளிக்கூடம், வணிக நிறுவனம் என்று எங்கே பார்த்தாலும் நேதாஜி பெயர். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சுபாஷ் சந்திரபோஸ் இருக்கிறார்.

யுத்தம் முடிந்து பர்மாவிலிருந்து சென்னைக்கு அகதிகளாக வந்து, இங்கு குடியேறியவர்களில் பெரும்பான்மையானவர்கள் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்கள்.

ஐ.என்.ஏ.வில் இராணுவ வீரராகப் பணியாற்றி நேதாஜி நினைவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஆர்.கே. செல்லையாவைச் சந்தித்தோம்.

''என் அப்பா காலத்திலேயே பர்மா போய் விட்டோம். அங்கே ரங்கோன் பக்கத்தில் இருந்த கிராமத்தில் விவசாயம் பார்த்தோம். வீடு வாசல், நிலம் நீச்சு எல்லாம் இருந்தது. பதினெட்டு வயசில் ரங்கோன் போனபோது ஒரு பொதுக் கூட்டத்தில் நேதாஜி பேசுவதைக் கேட்டேன். உடனே அவருடைய இராணுவத்தில் சேர்ந்து விட்டேன்!''

''பர்மாவிலிருந்த தமிழர்கள் நிறைய பேர் நேதாஜியின் இராணுவத்தில் சேர்ந்தார்களா?''

''ஆண்களும் பெண்களுமாய் ஆயிரம் ஆயிரமாகச் சேர்ந்தார்கள். ஐ.என்.ஏ.வில் மெட்ராஸ் மெயில், பஞ்சாப் மெயில் என்ற பெயரில் படையணிகள் இருந்தன. நேதாஜிக்குத் தமிழர்களின் வீரம், தலைமைக்குக் கட்டுப்படும் சுபாவம் இதெல்லாம் மிகவும் பிடித்ததால், மெட்ராஸ் மெயிலுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தார்.''

''நேதாஜியின் வீர உரைகளில் உங்களால் மறக்க முடியாத வாசகம்?''

''வெள்ளைக்காரன் என்ன நமக்கு சுதந்திரம் கொடுப்பது? நாம்தான் போராடிப் பெற வேண்டும். இதற்குப் பிரதிபலன் எதிர்பார்க்காதீர்கள் என்றதுதான்!''

''அன்றைய போர்க்கால நினைவுகள்?''

''ஜப்பான் மீது அமெரிக்கா அணு குண்டு வீசியதும் ஜப்பான் சரணடைந்து விட்டது. முன்னேறிச் சென்ற இந்திய தேசிய இராணுவம் இம்பால் வரை போய் விட்டது... பிரிட்டிஷாரின் உக்கிரமான குண்டுவீச்சின் காரணமாகப் பின்வாங்க நேர்ந்தது... சைகோனிலிருந்து ஒரு இராணுவ விமானத்தில் நேதாஜி தப்பிச் செல்கையில் பார்மோசாவில் விபத்துக்குள்ளாகி மரணம் அடைந்தார்...''

''நேதாஜி இறக்கவில்லை. புத்த துறவி போன்ற மாறுவேடங்களில் பல இடங்களில் கண்டதாக ஒரு சர்ச்சை இன்றும்

நேதாஜி!

இருக்கிறதே?''

''நேதாஜி கோழை இல்லை மறைந்து வாழ. இந்தத் தகவல் அவர் இயல்புக்கே எதிரானது!''

''பர்மாவிலிருந்து பெரும் எண்ணிக்கையில் இந்தியர்கள் வெளியேறிய சம்பவம் பற்றி...?''

''யுத்தகாலத்து பீதியின் காரணமாக அகதிக்கப்பலிலும் கால்நடையாகவும் ஆயிரக்கணக்கானவர்கள் வெளியேறினார்கள். காடு மலைகளைத் தாண்டி இவர்கள் இந்திய எல்லையைத் தொடுவதற்கு முன்னாலேயே வாந்தி பேதியில் மாண்டு போனார்கள். பாதிப்பேரை ஜப்பானிய இராணுவம் வழிமறித்து மீண்டும் பர்மாவுக்கே பிடித்துச் சென்றது! மீதிப்பேர் தப்பி 1964ல் இந்தியா வந்தோம். பர்மாவுக்கு வேலைக்குப் போனவர்களின் உறவினர்கள் தமிழ்நாட்டில் இருந்ததால் அவர்கள் தாயகம் திரும்பியதில் பிரச்னை இல்லை. பர்மாவிலேயே சொத்துசுகங்களை விட்டு விட்டு இந்தியா வந்தவர்கள் நிலைமை தான் மோசம்...''

''உங்கள் நிலைமை எப்படி...?''

''எனக்கும் இங்கே ஆதரவுக்கு யாருமில்லை. ஒரு லாட்ஜில் வேலை, பிளாட்ஃபாரக் கடை, வாட்ச்மேனாக வேலை, பிறகு ரெகார்ட் கிளார்க் ஆனேன். என் குழந்தைகளைப் படிக்கவைத்து இன்று அவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள்!''

''பர்மாவில் தொடர்ந்து வாழ முடியவில்லையா?''

''யுத்தத்திற்கு முன்னால் பர்மா ஒரு அமைதியான நாடு. பர்மியர்கள் சாந்த சுபாவம் கொண்டவர்கள். இராணுவ ஆட்சி ஏற்பட்டதும் எல்லாம் மாறிப்போய் விட்டது. நம்மவர்கள் அவர்களுடைய நாட்டில் செல்வாக்காக இருப்பதைக் கண்டு நம்மீது உள்ளூர துவேஷம் உண்டாகி விட்டது. இராணுவ ஆட்சி தனியார் சொத்துக்களைத் தேசிய உடைமை ஆக்கியது. எங்களுக்கு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை!''

''பர்மா நினைவுகள் சிலவற்றைச்





வெத்திலைதான் மடிச்சோம்!

பர்மாவில் ரசிக ரஞ்சனி, தொண்டன், பர்மா நாடு போன்ற தமிழ்ப் பத்திரிகைகளும் வெளிவந்தன.

பர்மாவில் புத்த

அன்றைக்கு அந்நியனை விரட்ட ஆவேசம் மிக்க நேதாஜி. இன்று அஹிம்சையும் அமைதியும்தான்

சொல்ல முடியுமா?''

''யுத்த காலத்தில் பர்மாவில் ஜப்பானியப் படையினர் இந்தியர்களைப் பெரிதும் மதித்தனர். காந்தி, இந்தியா இந்த இரண்டு வார்த்தைகளைச் சொன்னால் ஜப்பான்காரன் விட்டுடுவான். சுதந்திரத்துக்குப் பிறகு நேருஜி பர்மா வந்தார். இந்திரா காந்தியும் உடன் வந்தார். கூடவே ராஜீவ் காந்தி, சஞ்சய்காந்தி குட்டிக் குழந்தைகள்... பர்மாவில் வருஷப் பிறப்பு நாளை ஒருவர் மீது ஒருவர் தண்ணீர் பீய்ச்சி அடித்து விளையாடுவார்கள்... நாங்கள் குடியிருந்த வீதி வழியாகத்தான் நேரு, சூ-என்-லாய், பர்மா பிரதமர் எல்லோரும் போனார்கள். ஒருவர் மீது ஒருவர் தண்ணீரைப் பீய்ச்சிக் கொண்டு கோலாகலமாகச் சென்ற ஊர்வலத்தை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

ஜப்பான்காரன் ரோடு போடும்போது தொழிலாளர்களுக்கு உடனுக்கு உடன் கரன்ஸி நோட்டு அச்சடித்துக் கையில் கொடுத்து விடுவான்.

யுத்தத்துக்குப் பிறகு ஜப்பான் நாட்டு கரன்ஸி நோட்டுக்கு மதிப்பில்லாமல் போனது. அந்த நோட்டுகளை வைத்து

விஹாரங்கள் நிறைய உண்டு. உற்சவ காலங்களில் தங்கப் பொடியை அதன் சுவர்களில் பூசிவிடுவார்கள்... இப்படிப் பூசிப்பூசி பல வருஷங்களில் பல அங்குல கனத்தில் தங்கப் படிவு சேர்ந்துவிடும். குண்டுவீச்சில் இடிந்து விழ்ந்த புத்த விஹாரங்களின் இடிபாடுகளில் இருந்த தங்கத்தைச் சேகரித்து பணக்காரர்கள் ஆனவர்கள் உண்டு. 'பர்மாவுக்குப் போயி புத்தகாளை தோண்டப் போறியாக்கும்!' என்று நம்ம ஊர்ப்பக்கம் கிண்டலாகக் கேட்பார்கள்!''

''அடிமை இந்தியாவிலும் சுதந்திர இந்தியாவிலும் வாழ்ந்திருக்கிறீர்கள். காந்திஜி, நேதாஜி யாருடைய கொள்கை இப்போது பிடிக்கிறது?''

''அன்றைக்கு அந்நியனை விரட்ட ஆவேசம் மிக்க நேதாஜி. இன்று அஹிம்சையும் அமைதியும்தான்'' என்று சொல்லிக் கைகூப்பினார் செல்லையா.

- **தஞ்சாவூர்க்கவிராயர்**

படம்: **மணிமேகலை நாகலிங்கம்**

முற்றுப்புள்ளியில்... மூங்கில்

மதுரை தத்தனேரி, பாரதி நகர், அருள்தாசபுரம் போன்ற பகுதிகளில் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மூங்கில் தொழிலில் பல தலைமுறைகளாக ஈடுபட்டு வருகின்றனர். சுமார் ஆயிரம் குடும்பங்கள் ஈடுபட்டிருந்த தொழிலில், இன்று முன்னூறு குடும்பங்கள் மட்டுமே சிக்கி உழன்று கொண்டிருக்கின்றன. இந்தத் தலைமுறையோடு இந்தத் தொழில் முடங்கிப் போய்விடுமோ என்கிற பெருங்கவலை அவர்களின் முகங்களில்.

''பதினஞ்சு வயசுலேர்ந்து இந்த வேலை செஞ்சு வர்றேன். இது எங்களுக்கு குடிசைத் தொழில் மட்டுமல்ல. பாரம்பரியமா தொடர்ந்து வர்ற குடும்பத் தொழில். தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்கள்ல பரவலா நாங்க வசித்து வர்றோம்.


மூங்கில் அர்ச்சனை தட்டு மற்றும் மூங்கில் கூடைகளுக்கென ஒரு மவுசு இன்னும் கொஞ்சம் இருந்துகிட்டுதான் இருக்கு. இல்லாட்டி இப்ப ஈடுபட்டிருக்கற கொஞ்சநஞ்ச குடும்பங்கள்லயும் சாப்பாட்டுக்கு வழி இல்லாமப் போயிருக்கும். அதனால இந்தத் தொழிலை நேசிக்கிறோம்!'' எனச் சொல்கிறார் ராஜேஸ்வரி.

இத்தொழிலின் மூலப்பொருளான மூங்கில் ஈத்தை தமிழ்நாட்டில் விளைவதில்லை. கேரளாவில்தான் விளைகிறது. அங்கிருந்து மதுரை கோரிப்பாளையம் வந்து சேர்கிறது.

''கடந்த ஐந்து வருடங்களில் கேரள மூங்கில்களின் விலை மூன்று மடங்கு உயர்ந்து விட்டதால் எங்கள் தொழில் பெரும் சரிவைச் சந்தித்து வருகிறது'' எனக் கூறுகிறார் ராஜாராம்.

''திருமலை நாயக்கர் கல்லூரியில் எம்.ஏ., வரலாறு தேர்ச்சி பெற்றிருக்கேன். சொல்லிக்கற மாதிரி வேலை எதுவும் கிடைக்கலை. ரோட் குரும்ஸ் அல்லது கார்டன் குரும்ஸ் என்றழைக்கப்படும் கூட்டுமாறு பின்னித் தர்றது என்னோட தொழில். மூங்கிலை இருப்பு வைத்துத் தொழில் செய்ய குறைஞ்சது பத்துப் பதினைந்தாயிரம் ரூபாய் முதலீடு தேவை. எங்கள் சமூகத்தினருக்குக் கடனுதவி அளிக்க அரசு முன்வர வேண்டும். இல்லாவிட்டால் முன்னூறு குடும்பங்களின் வறுமைக் கதறலோடு, இந்தத் தொழில் இந்தத் தலைமுறையோடு காணாமல் போகும்'' என்று கண்கலங்குகிறார் பாலசுப்பிரமணியன்.

- ஸ்ரீரங்கம் திருநாவு





அருண் சரண்யா

விக்ரமுக்குக் குழப்பமாக இருந்தது. ஷிப்ராவின் இறப்பின் காரணத்தை அறியும் முயற்சியில் பவித்ரா தன்னுடன் ஒத்துழைக்க மறுப்பது ஏன்?

'ஒருவேளை பவித்ராவுக்கும் ஷிப்ராவின் இறப்புக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ?'

அவனது உள்மனம் 'பவித்ராவுக்கும் ஷிப்ராவுக்கும் இடையே இருந்த நட்பைச் சந்தேகிப்பது தவறு' என்றது. அப்படியானால் லட்சுமி என்று யாரையும் தனக்குத் தெரியாது என்று பவித்ரா ஏன் சொல்ல வேண்டும்? அவளது வகுப்பிலேயே அந்தப் பெயரில் ஒருத்தி இருந்ததை ஏன் மறைக்க வேண்டும்?

பவித்ராவைக் கொஞ்சம் ஆழம் பார்க்க முடிவு செய்தான். தன் அடுத்த சந்திப்பிலேயே, ''பவித்ரா, நல்லா யோசிச்சு சொல்லு. லட்சுமின்னு கல்லூரி வகுப்பில் யாருமே இல்லையா?'' என்றான்.

பவித்ரா சுதாரித்துக்கொண்டாள். ''எனக்கு ஞாபகமில்லே விக்ரம்.''

விக்ரம் சட்டென்று ''எனக்கு ஞாபகமிருக்கு. நேற்று லட்சுமியைச் சந்தித்துப் பேசினேன்'' என்றான்.

அப்போது பவித்ராவின் திடுக்கிடலை அவன் கவனிக்கத் தவறவில்லை.

''என்ன இன்னும் நினைவு வரலையா? உங்க வகுப்பிலே படிச்ச லட்சுமிதான். போனிடெய்ல் போட்டுக்கிட்டு வருவாளே, அவ வீடு கூட நீலாங்கரையிலே இருக்குதே. அவளைப் பார்த்துப் பேசினேன். ஆனா அவ ஒண்ணும் உருப்படியா சொல்லலே. போதாக்குறைக்கு...'' சட்டென பேச்சை நிறுத்திக்கொண்டான் விக்ரம்.

அதை எப்படிச் சொல்வது? ''விக்ரம், காலேஜ் நாட்களிலேயே நீ ரொம்ப ஸ்மார்ட்டா இருப்பே. இப்போ இன்னும் கம்பீரமா இருக்கே. அப்பதான் நீ அந்த பவித்ரா பின்னாலே அலைஞ்சுக்கிட்டிருந்தே. அந்த முட்டாள் உன்னை ஏத்துக்கல. இப்ப வசதி எப்படி? இப்பவாவது நான் அப்ளிகேஷன் போடலாமா?'' என்று கேட்டதை எப்படிச் சொல்ல?

கேட்கும்போதே அருவருப்பாக இருந்தது. கூடத்தில் தன் பெற்றோர் இருக்கையில் தன் அறைக்குள் அவள் தன்னை அழைத்துப் போனதே கொஞ்சம் இங்கிதம் இல்லாத தோரணையாகப் பட்டிருக்க, அடுத்து இப்படி ஒரு கேள்வி.

''இந்தக் கேள்வியெல்லாம் இருக்கட்டும். முதலில் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லு. ஷிப்ராவை உனக்குத் தெரிஞ்சிருக்கும்...'' பாதி பேசிக்கொண்டிருக்கும்போதே லட்சுமி இடைமறித்தாள்.

''தெரியும். அவளுக்குக் கல்யாணம் ஆனதும் தெரியும். அவ செத்துப் போனதும் தெரியும்.''

நில்... கவனி... செல்! கொல்!



6

'என்ன ஒரு அநாகரீகப் பேச்சு' என்று நினைத்துக்கொண்டே தன் மனத்தில் இருந்த கேள்விப் பட்டியலிலிருந்து முதல் கேள்வியை உதிர்த்தான். ''ஷிப்ரா கூட கடைசியா எப்போ பேசினே?''

''ப்ளீஸ். அவ பேச்சு வேணாமே. நாம நம்மைப் பத்தி பேசலாம்.''

மேலும் சில கேள்விகள், மேலும் சில பதில்கள். விக்ரமால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. 'இவளுக்கும் ஷிப்ராவின் மரணத்துக்கும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாது.'

பவித்ராவுக்கு அது ஏற்கனவே தெரிந்திருந்தது. ஷிப்ராவின் லட்சுமி அவள் அல்ல. ரயில் விபத்தைத் தொடர்ந்து எங்கோ மறைந்துபோன ஷிப்ராவின் செல்ஃபோன் கிடைத்துவிட்டால் மர்மம் விடுபட வாய்ப்பு உண்டு. அல்லது லட்சுமி தன் மௌனத்தைக் கலைக்க வேண்டும்.

பெரிய அளவில் காணப்பட்டது ஷிப்ராவின் புகைப்படம். தான் வாங்கி வந்திருந்த மாலையை கை நடுங்க அவள் படத்தின் மீது சாத்தினாள் ஷிப்ராவின் மாமியார். மௌனமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார் ஷிப்ராவின் மாமனார்.

''விளையாட்டுப் போல ஒரு மாசம் ஆயிடுச்சு, விதி ரயில் வடிவத்தில் வந்து நம்ம மருமக உயிரைப் பறிச்சு.'' என்று வருத்தமாகச் சொன்ன அந்த முதியவனின் குரல் சட்டென உடைந்தது. ''ஒருவேளை மாமியார் கொடுமையாலே அந்தப் பொண்ணு தண்டவாளத்திலே விழுந்துடுச்சோ என்னவோன்னு நம்ம தெருவில நேத்து யாரோ பேசிட்டுப் போனாங்களாம். முனியம்மா தயங்கித் தயங்கி சொன்னா.''

''விடும்மா. நம்ம மருமக அப்படிப்

திக்திக் தொடர்கதை

பட்டவனா? தப்பாப் பேசினா நம்மையில்ல தண்டவாளத்துக்கு அனுப்பியிருப்பா!''

கணவரின் குரலில் தென்பட்ட கசப்பு அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் வியப்பை அளித்தது. ''பேசாம இருங்க. கேட்கிறவங்க தப்பா நினைச்சுக்கப் போறாங்க'' என்று அடக்கினாள்.

பிறகு கொஞ்சம் மெல்லிய குரலில், ''பெரியவங்க நாம்தான் அடுத்த நடவடிக்கையைத் துவக்கணும். ஒருத்தி இறந்துட்டா இன்னொருத்தியைக் கொண்டு வர வேணாமா? ஆனா குரு இதை எப்படி எடுத்துப்பான்னு தெரியலியே.''

அறையை நோக்கி யாரோ வரும் சத்தம் கேட்டது. குரு நேராக ஷிப்ராவின் படத்துக்கு அருகே வந்து நின்றான். அடுத்தகணமே அவன் முகம் கோபத்தில் கருங்கியது.

''யாரு ஷிப்ரா படத்துக்கு மாலை போட்டது? என்னைப் பொறுத்தவரை ஷிப்ரா இன்னும் சாகலை.''

கத்தியபடியே கண்கலங்க அவன் வெளியேற அப்போதுதான் அந்த வீட்டுக்குள் நுழைந்திருந்த பவித்ராவின் முகத்தில் வேதனை அதிகமாகியிருந்தது.

குருவின் பெற்றோர் ''வாம்மா'' என்றனர் சுருக்கமாக.

''அவன் இப்படித்தான் இருக்கான். ஷிப்ரா செத்ததை அவனாலே கொஞ்சம் கூட ஏத்துக்க முடியலே.''

''எப்படி முடியும்? ரொம்ப ஒட்டுறவோடு பழகினவங்களாச்சே'' என்றாள் பவித்ரா.

''குறைவாத்தான் தூங்கறான். நேத்து தூங்கும்போதுகூட, 'ஷிப்ரா, நீ உயிரோடதான் இருக்கேன்னு எனக்குத் தெரியும். உன்னை சீக்கிரமே கண்டுபிடிச்சுடுவேன்'னு பெனாத்தறான்'' என்றார் ஷிப்ராவின் மாமனார்.

புதியதொரு புதிர் போர்வை அதிகப்படியாகத் தன்னைச் சுற்றுவது போல உணர்ந்தாள் பவித்ரா.

தன் உணர்வுகளை மறைத்துக் கொள்ள ஷிப்ராவின் புகைப்படத்தை உற்றுப் பார்த்தாள். சில நொடிகளுக்குப் பிறகு அவள் பார்வை அதற்கு சற்றுத் தள்ளி மாட்டப்பட்டிருந்த மற்றொரு புகைப்படத்தின் மீது பதிந்தது. அதில் குருவும் குமாரும் தோளில் கை போட்டபடி சிரித்துக்கொண்டே போஸ் கொடுத்தனர். இரட்டைச் சகோதரர்கள்.

(தொடரும்)





எழுத்தாளர் கடமை

இன்றைய பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களின் கடமை - ஜனங்களுக்குப் பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக்கொள்ளக்கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை உயர்த்துகிற விஷயங்களையே எழுதவேண்டும் - இதை சுவாரசியமாகச் செய்யவேண்டும். உத்தமமான விஷயங்களைப் புதுப்புது விதங்களில் உணர்த்த வேண்டும். பத்திரிகையாளர்கள் வாழ்நாள் முழுதும் மாணாக்கர்களாகவே இருந்தால்தான் தாங்களும் இப்படிப் புதுப்புது விஷயங்களை அறிந்து, மற்றவர்களுக்குப் பிரசாரம் செய்ய முடியும்.

சத்தியத்தை, சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரைகளாக்கித் தர வேண்டும். சர்க்கரைப் பூச்சுத்தானே ஒழிய, முழுக்கவும் சர்க்கரையாகிவிடக் கூடாது. வெறும் சர்க்கரை உடம்புக்கு நல்லதல்ல. வெறும் இந்திரிய ரஞ்சகமான சமாசாரங்களில்தான் ஜனங்களுக்கு அதிகக் கவர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இவ்விதமே எழுதுவது சரியல்ல. ஜனங்களுக்கு ஆத்மாபிவிருத்தி தருகிற முறையில் எழுதுவதற்கு இருதய பூர்வமாக எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் முனைந்தால், தானாகவே ஜனங்களுக்கு அதில் ருசி பிறக்கும். 'நம்மையும் உயர்த்திக்கொண்டு, நம் வாசகர்களையும் நாம் உயர்த்த வேண்டும்' என்கிற கடமை உணர்ச்சியைப் பெற வேண்டும். இவ்விதம் ஆத்ம க்ஷேமம், லோக க்ஷேமம், சாந்தி, சுபிட்சம் எல்லாவற்றுக்கும் மெய்யான சேவை செய்கிற பாக்கியத்தைப் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் பெற வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

www.ஜெயில்.காம்

''சார், இவன் என் ஆட்டைத் திருடிட்டான்.''

''கான்ஸ்டபிள் இவனை உள்ளே தள்ளு... அந்த ஆட்டை என் வீட்டுக்குள்ளே தள்ளு...''

- ஆரணி தமிழ்செல்வம்





''சார், கேடி கபாலிக்கு நம்மகிட்டே பயம் விட்டுப்போச்சு...''

''ஏன்...?''

''இன்னிக்கு ராத்திரி திருடப் போறேன். பந்தோபஸ்துக்கு வர முடியுமான்னு கேட்கிறான்.''

- வி. சாரதிடேச்சு

''இது ரொம்ப ராசியான ஜெயில்!''

''எப்படி?''

''இங்கேயிருந்து தப்பிச்சுப் போனவங்க பிடிபடவே மாட்டாங்க!''

- அம்பை தேவா





''உங்க செல்நம்பர் சொல்லுங்க?''
''98427 13441.''
''ஒரு நம்பர்தானா?''
''இல்லையே... 10 நம்பர் சொன்னேனே?''

- சி.பி.செந்தில்குமார்

பொய்க்கால ஆட்சி



''என்ன தலைவரே... நீங்க ஆட்சிக்கு வந்தா 'குப்தர்களின் பொற்கால ஆட்சி அமைப்போம்'னு பேசியிருக்கீங்களே?''

''எல்லா தலைவர்களோட பெயர்கள்லயும் ஆட்சி அமைக்கறதா சொல்லிட்டாங்க... நான் வேற யாரு பெயரைத்தான் சொல்றது?''

- ச. ஆதிகேசவன்



''நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, சொத்துல ஒரு பைசாகூட கிடைக்காதுன்னு அப்பா சொல்லிட்டார் முரளி...''

''அப்ப உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கலைன்னு சொல்லிட்டா, சொத்தை என் பெயர்ல எழுதி வெச்சிடுவாரா?''

- எம்.அசோக்ராஜா

''என்னப்பா ஆனந்து... ஊருக்கெல்லாம் தகவல் போயாச்சா..?''

''உம். நீங்க வற்புறுத்தினீங்களேன்னு தான் சொன்னேன். மற்றபடி டாக்டருக்கு நல்ல நம்பிக்கை இருக்கு. உங்களுக்கு குணமாயிடும்னு சொல்றாங்கப்பா.''

உம். மனைவி, மகன் இன்னும் யாராரோ எனக்கு இப்படி வெண்சாமரம் வீசக் கடமைப்பட்டிருக்கிறார்கள். படுக்கையில் வீழ்ந்தால் இதெல்லாம் சகஜம்தான். ஆனால் உண்மை அதுவல்ல.

மரணம் ஒரு சர்வாதிகாரி. புயல் மாதிரி குறி வைத்து இலக்கைத் தாக்கிவிட்டுத் தான் அது ஓயும்.

எழுபத்து ஒன்றில் எனக்கு வைத்தியம் நடந்தது. ராஜாஜி சானிட்டோரியத்தில் நாலு மாதம். நூற்றியிருபது ஸ்டிரப்டோமைசின் ஊசி. அப்போதே சொன்னார்கள், டி.பி. ரிலாக்ஸ் ஆனால் பிழைக்கிறது கஷ்டம் என்று.

ஆனால் அக்கஷ்டத்தை நான் விளையாட்டாக எடுத்துக்கொண்டேன். முந்தா நாள் இராத்திரி வியாதியின் கை ஓங்கி விட்டது. ரத்த வாந்தி.

எக்ஸ்ரேயில் என் வலப்பக்க நுரையீரல் காணோமாம்! ஆபரேஷன் செய்தால்தான் வண்டி ஓடும் என்றார்கள்.

ஆனால் ரத்தக் கொதிப்பு, சர்க்கரை, இரண்டும்



கடைசிப் பக்கக் கவிதைகள்

தவிர வயசான மனுஷன். ஆபரேஷன் தாங்காதாம்.

போகிறது விடுங்கள்.

இரண்டு மாப்பிள்ளை, இரண்டு மருமகள் என ஜோடி ஜோடியாய் வமிசம் விதைத்து, வீடு நிறைந்த மழலைப் பூக்களைப் பார்த்தாயிற்று. லௌகீகமிச்சம் இனி என்ன இருக்கிறது எனக்கு. ஆனால் அது... அந்த ஒரு விஷயம் தான் பிள்ளைப்பூச்சி மாதிரி என்னை நிமிண்டிக்கொண்டே இருக்கிறது.

அதாவது சொந்தபந்தங்கள் வந்துவிடுவார்கள். பழைய அலுவலக நண்பர்களுக்கும் பழக்கப்பட்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, கதை சொல்லிவிடும். ஆனால், அந்தப் பாட்டி.... அந்தப் பெண்... அவர்களுக்கு என் மரணம் எப்படித் தெரியும்? அவர்களுக்கு யார் சொல்வார்கள்?

அவர்கள் யாரோ எவரோ என் மரணம் தெரியாவிட்டால் என்ன... குடியா முழுகிவிடும்? இயல்பான அலட்சியம். எல்லாரையும்போல் எனக்கும் தோன்றிவிடுமா? ஆனால் மறுவினாடியே நான் பௌத்தனாகிவிடுகிறேன்.

எனக்கு இரண்டாயிரத்தில் பணி ஓய்வு. ஆயினும் உத்தியோக ருசி விடாததால் தென்னூர் கணினி மையம் ஒன்றில் நிர்வாகப் பொறுப்பில் சேர்ந்தேன். பத்திலிருந்து ஏழு. வேலை முடிந்ததும் சத்திரம் வந்து, அங்கு திருவரம்பூர் பஸ் மாறி ஒரு மணி அவகாசத்தில் வீடு திரும்பிவிடலாம். ஆனால் அது எனக்கு மொக்கையாகத் தோன்றியது.

ஆகவே தெப்பக்குளம் நிறுத்தத்திலேயே இறங்கிவிடுவேன். நந்தி கோயில் வழியாக சத்திரம் பேருந்து நிலையம். நடுவே ஆண்டார் தெரு, பட்டர் ஒர்த் சாலை. இரண்டையும் கடக்கும் பாதையில் பழங்களாகவும், காய்கறிகளாகவும் ஏகப்பட்ட தரைக் கடைகள். அங்குதான் அந்தப் பாட்டியும், அப்பெண்ணும் அறிமுகமானார்கள். அந்தப் பழக்கம் உரிமை எடுத்துப் பேசும் அளவுக்குப் போனது.

''ஏன் ஐயா... இப்படி பறந்தடிச்சுட்டு வேலைக்குப் போறே? வயசான காலத்திலே வீட்டிலேயே இருக்கலாம் இல்லையா...?'' என்று கரிசனம் பேசுவாள் பாட்டி.

''வீட்டிலே இருந்தால் உங்களை எல்லாம் பார்க்கமுடியாதேன்னு நான்தான் இப்படி வந்துட்டு இருக்கேன்'' என்று சொதப்புவேன் நான்.

ஒரு நாள் ஆஃபீஸ் விட்டுக் கிளம்ப ஒன்பது மணியாகிவிட்டது. அபூர்வமாய் கிடைக்கும் இனிப்புப் பீர்க்கங்காய் அன்று வந்திருக்கிறது. அதைக் கட்டி வைத்துக் கொண்டு அந்தப் பெண் எனக்காகக் காத்திருந்தாள். அவள் ஊருக்கான கடைசி பஸ் போய்விட்டது. 'அடிப் பைத்தியம்... இனி ஆறு கிலோ மீட்டர் நடந்தா வீட்டுக்குப் போவாய்? பன்னிரண்டு மணியாகிவிடுமே' என்று கடிந்துகொண்டேன்.

போட்டிக்கதை-3

தமிழினியன்

தூறல் கவிதை!

புகழ், பணம், விளம்பரம்
எல்லாமும் தேடிக் கத்தது
கிராமத்தின் வறட்சி கண்டு
ஊரை விட்டு
ஓடிப் போனவன்
எழுதி முடித்த
'கிராமத்தின் அடையாளம்'
கவிதைப் புத்தகம்



''நீங்க விசாரணை கைதியா? தண்டனைக் கைதியா?''
''என்ன?!''

'சார், உங்களுக்குப் பிடிக்குமேன்னுதான். ஏன் ஸார் லேட்டு?' அலட்டிக்காமல் சிரித்தாள் அவள்.

உறவுகளே வியாபாரமாகிப்போன உலகில் வியாபாரத்துக்கு அன்பு சாத்தியமா?

சென்ற டிசம்பரில் திடீரென்று ஒரு சென்னைப் பயணம்.

ஒரு நாளைக்கே ஆளைக்காணோம் என்று ஆலாய்ப் பறக்கும் அவர்கள் மனசு, நாலு நாட்கள் காணவில்லை என்றதும் எனக்கு என்னவோ ஆயிடுச்சு என்று ரொம்பவே பயந்துவிட்டாள் பாட்டி. பயம் மட்டுமா? அவர்கள் ஊரில் எனக்கு ஒண்ணும் ஆயிடக்கூடாதுன்னு கருப்பண்ண சாமிகிட்டே வேண்டிக்கொண்டிருக்கிறாள் பாட்டி. விவரம் சொல்லி அவள் விபூதி கொடுத்தபோது என்னையறியாமல் கண்ணீர் பெருகிவிட்டது. கொஞ்சநேரம் அப்படியே சிலையாகிப்போனேன். ஜென்மாந்திர உறவு தொடர்கிறதா இல்லை, தூய அன்பே ஜென்மத்தைத் தீர்மானிக்கிறதா?

பழகிப் பார்த்தால்தான் மனசின் மகத்துவம் புரிகிறது. யாரோ ஒரு சீனியர் சிட்டிசன் நான். ஐந்துக்கும், பத்துக்கும் பழமும் காயும் வாங்கியவன். என்னிடம் அந்தப் பாட்டிக்கும் இந்தப் பெண்ணுக்கும் இத்தனை அக்கறை ஏன்? அறுந்து தொங்கும் அந்தக் கிழிசல் சேலைக்குள் அப்பழுக்கற்ற அன்புச் சுனை எப்படி ஊற்றெடுக்கிறது?

''என்னங்க யோசனை?''

''ஒண்ணுமில்லே சாவித்திரி. சொன்னால் தப்பா எடுத்துக்கமாட்டியே.''

''உங்ககிட்டே தப்பு நினைப்பேனா. எதானாலும் தைரியமா சொல்லுங்க.'' கண் கலங்கியிருந்தாள் அவள்.

''அதாவது சாவித்திரி. தினமும் ஒரு பாட்டிகிட்டே பழமும், ஒரு பொண்ணுகிட்டே காயும் வாங்கறதாகச் சொல்வேனே.''

''ஆமாம்.''

''அவங்களைப் பார்க்கணும்போல இருக்கு சாவித்திரி.''

''அப்படியா...'' திகைத்துப் போனாள், அவள். எங்கே... எப்படி அவர்களைக்



''காதலிச்சிட்டு இருக்கீங்களா
கல்யாணம் பண்ணிட்டீங்களான்னு
கேட்டேன்!''

- பி.ஜி.பி. இசக்கி,
அகஸ்தியர்பட்டி.



கண்டுபிடிப்பது என்ற குழப்பம்.

''இல்லேன்னா ஒண்ணு செய்யறியா?''

''என்ன...?''

''ஆம்புலன்ஸ் அல்லது டாக்ஸி... டாக்ஸி...''

''சொல்லுங்க.''

''டாக்ஸி வைச்சு என்னை அங்கே, அவங்ககிட்டே... அங்கே...''

பேச முடியவில்லை. நெஞ்சுக்குள்ளே வழக்கமாய் உறுத்தும் அடைப்பு. இருமினேன். ரத்தம் ரத்தமாய் - வாந்தி.

மறுகணம் நர்ஸ், டாக்டர் யார் யாரோ ஓடி வருகிறார்கள். ஆக்ஸிஜன். ஸ்டிரிப்

''ஐயா உனக்கு ஒண்ணும் ஆயிடாது, தைரியமா இருய்யா''

இன்னும் என்னவெல்லாமோ. இரண்டு பக்கமும் இரும்புக் கம்பங்கள். நெஞ்சுக் கூடு ஏறி இறங்கி மூச்சுவிட சிரமமாய் இருக்கிறது.

உருவங்கள் நிழலாய்த் தெரிகிறது. பேசுங்குரல் தொலைவாய்க் கேட்கிறது. அப்போது வீறிட்ட சத்தம் வராந்தாவில், ''ஐயா... என் துரையே. உனக்கு என்னய்யா ஆச்சு?''

சந்தேகமில்லை. அது பழக்கடை பாட்டிதான். கூடவே அந்தப் பெண்ணின் தேம்பலோசை.

''தென்னூரு பேங்குக்கு எதிராலே நகைக் கடை இருக்கும். அந்த மாடியிலே தான் ஆபீசுன்னு பேச்சோடு பேச்சா ஐயா ஒரு நாள் சொல்லிட்டிருந்தாருங்க அம்மா. அதை ஞாபகம் வைச்சுட்டு நானும் இந்தப் பொண்ணும் காலம்பற அங்கே போய் விசாரிச்சோம். ஆபீசைக் கண்டுபுடிச்சு அட்ரசு வாங்கிட்டு... ஐயா உனக்கு ஒண்ணும் ஆயிடாது, ஐயா... தைரியமா இருய்யா.''

விபூதிபோல் இருக்கிறது. என் நெற்றியில் தீட்டுகிறாள் பாட்டி. அந்தப் பெண் என் நெற்றியைத் தொட்டுக் கும்பிடுகிறாள். இருவரின் கைகளையும் பற்றிப் பிடிக்க ஆவலாய் இருக்கிறது. இரண்டு வார்த்தை வேண்டாம், ஒரே ஒரு வார்த்தை பேசணும்போல நாக்குத் துடிக்கிறது. ஆனால் அப்படி எதுவுமே நிகழவில்லை.

ஆயினும் என்ன.

மனிதம் ஓர் அழகான கவிதையென்று மரணம் எல்லோருக்கும் தெரியும்படி எழுதிவிட்டு, என்னை அழைத்துச் சென்றது. ●

திருடன்:
''எதுக்கு... போலீஸில் மாட்டி விடவா...?''

வீட்டுக்காரப்பெண்:
''பக்கத்து வீட்டு பர்வதம் நகை வாங்கணும்னு சொல்லிட்டிருக்கா.. வாங்கினதும் தகவல் சொல்லத்தான்!''

- ஜி. சுந்தர்ராஜன், திருத்தங்கல்.

''இராமாயணம் என்றாலே தியாகம்தான். தந்தைக்காக சுகங்களையெல்லாம் தியாகம் செய்து வனவாசம் சென்ற இராமன், மகுடத்தைச் சூட மறுத்து அரச பதவியைத் தியாகம் செய்த பரதன்... என சொல்லிக் கொண்டே போகலாம்.

இராமனை 'மர்யாதா புருஷோத்தம் ராம்' என்று சொல்வோம். ஒரு நல்ல மகனாக, கணவனாக, சகோதரனாக, மாணவனாக, அரசனாக... என எந்த விதத்தில் பார்த்தாலும் இராமனுக்குச் சமம் உண்டோ?'' என்கிறார், என்.டி. டீவி இமாஜினில் வரும் இராமயாணத் தொடரின் தயாரிப்பாளர் கம் இயக்குநர்களில் ஒருவரான ப்ரேம் ஸாகர்.

''சுமார் 20 வருடங்களுக்கு முன்பே எங்கள் அப்பா ஸ்ரீ ராமானந்த் சாகர்ஜி தயாரித்த இராமாயணத்துக்கு மாபெரும் வரவேற்பு. எழுபத்தெட்டு வாரங்களுக்கு ஓடிய இராமாயணத்தை சுமார் 650 மில்லியன் மக்கள் பார்த்தார்கள் என பி.பி.ஸி செய்தி சொல்லியது. அப்போது இராமாயணத்தைப் பார்க்க முடியாதவர்களுக்கெனவே இப்போது மறுபடியும் தயாரித்தோம். இப்போது டெக்னாலஜி கிராஃபிக்ஸின் அசுர வளர்ச்சியினால் பல ஜாலங்களைக் காண்பிக்க முடிகிறது. இப்போது என்.டி.டீவி இமாஜின் சானல் என யாரும் சொல்வதில்லை. 'இராமாயண் சானல்' என்றுதான் சொல்கிறார்கள்...'' என்கிறார் பிரேம் ஸாகர்.

''துளஸிதாஸரின் ராம்சரித் மானஸ் மற்றும் வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாக வைத்து இராமாயண சீரியலைத் தயாரித்தாலும் கம்ப இராமாயணத்தையும் படித்துப் பார்க்கிறோம்.

ரெநவர்



தசரதன் இறந்தவுடன் அவன் உடலைப் பல வருடங்கள் கெடாமல் பதப்படுத்த எண்ணெய் உபயோகிக்கப்பட்டது என்ற செய்தி கம்ப இராமாயணத்தில்தான் கிட்டியது'' என்கிறார் பிரேம் ஸாகர்.

இராமாயணம் ஆரம்பித்த சில மாதங்களிலேயே பல விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளது. இராமனாக நடிக்கும் குருமீத் சௌத்ரிக்கு சிறந்த புதுமுக நடிகர் விருது, சீரியலுக்கு சிறந்த புது(!) சீரியல் விருது... என ஏக விருதுகள்.

ரவீந்தா ஜெயின் இசையமைக்க கவிதா கிருஷ்ணமூர்த்தி, சுரேஷ் வாட்கர் பாடியுள்ளனர்.



சேனல்

காம்ப்ரமைஸ்

''இன்று மாமியார் - மருமகள் சீரியல் படு ஹிட்டாக இருக்கையில் புராணத்தை எடுக்கத் துணிந்தது ஏன்?'' என்றபோது, ''நல்லதைச் சொல்ல நினைத்தோம். இராமாயணத்தைப் போல ஒரு நல்ல மெஸேஜ் வேறு கதை மூலமாகச் சொல்ல முடியுமா? நாங்கள் சமூகக் கதைகளுக்கும், குடும்பத்தை அடிப்படையாக வைத்தெடுக்கும் தற்கால சீரியல்களுக்கும் எதிர்ப்பு சொல்லவில்லை. நெகடிவ் எண்ணங்களை வளர்க்கக்கூடாது என்று விரும்புகிறோம்'' என்கிறார் பிரேம்.

''நாங்கள் எங்கள் சீரியல் பிரமோஷனுக்காக ஸ்கூல் குழந்தைகளுக்கென ராமன், சீதை, ராவணன் பாட்ஜ்கள் பண்ணினோம். அதிகமாக விற்பனை ஆகி சாதனை படைத்தது ராமன் அல்ல... ராவணன்'' சிரிக்கிறார் பிரேம் ஸாகர்!

பரோடாவிலிருக்கும் ஸாகர் ஸிட்டியில் ஒரு நாளைக்கு ஆயிரத்து ஐநூறு பேர்களுக்கு ஷூட்டிங் நேரத்தில் சாப்பாடு. கார்கள் வரிசையாக ஐநூறைத் தாண்டி நிற்கிறது. ''எங்கள் அப்பா ஏகப்பட்ட ஹிட் திரைப்படங்களைக் கொடுத்தவர். பிறகு சீரியலில் இறங்கி அதிலும் சாதனை படைத்தவர். அவர் மாதிரி எங்களால் முடியவே முடியாது...'' என்று நெகிழ்ந்த பிரேம் ஸாகர், கடைசியாகக் கொடுத்தார் ஒரு பன்ச்! ''எங்கள் சாகர் ஆர்ட்ஸ் கம்பெனி கொள்கையும் உங்கள் கல்கி பத்திரிகையின் கொள்கையும் ஒன்றே தான். நல்லதைச் சொல்லணும்; அதையும் துணிஞ்சு சொல்லணும். நெவர் காம்ப்ரமைஸ்...'' கலக்கிட்டீங்க ஸா(க)ர்!

- லதா சேகர்

"இந்த ஷூ எவ்வளவுங்க?" என்றாள் அருணா, உயரத்தில் இருந்த அட்டைப் பெட்டியைக் காட்டி.

"அது 1200 மேடம். எடுக்கட்டுமா?" என்றான் கடைப்பையன்.

"இல்ல... இது எவ்வளவு? இது... இது..." என்று கையைக் காட்டிக்கொண்டே பின்னால் நகர்ந்தவள் ஏதோ இடிப்பதுபோல் உணர்ந்ததால் சட்டென்று திரும்பினாள்.

'எதிர்ப்புறம் கையை நீட்டிக்கொண்டு நம்மைப் போல் யாரது?' என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது அவளும் திரும்ப, "அட, நம்ம ராது' என்று நினைத்துக்கொண்டே "ராது" என்று கையை நீட்ட அவளும் "அருணா" என்று கட்டிக்கொண்டாள்.

திருமலை நாயக்கர் மஹால் தூண்போல் இருவரும் கட்டிக்கொண்டு நின்றனர். எவ்வளவு முயற்சித்தும் முதுகுக்குப் பின் கை நீளவில்லை.

"எப்படி இப்படி வெயிட்போட்ட?" - "அதான் தெரியலை... நீ" என்ற அருணாவிடம், "உன்னைய மாதிரிதான். எப்படி ஏறிச்சுன்னே தெரியல. சாப்பிடறதே இல்ல" என்றுவேறு குறைப்பட்டுக்கொண்டாள்.

"தைராய்டு பிராப்ளம் ஏதாவது இருக்கான்னு செக் பண்ணிட்டியா... டாக்டர்ட்ட போனியா?" என்றாள் அருணா.

"எல்லாம் நார்மல். முதலில் வெயிட்ட தான் குறைக்கணும்னு டாக்டர் சொன்னாங்க ."

"உனக்கு என்ன பிரச்னை?"

"எனக்கு தைராய்டு ப்ராப்ளம் இருக்கு."

"எந்த டாக்டர்?" என்றாள் அருணா. அவள் பெயரைச் சொன்னவுடனேயே, "அட... நானும் அவங்க பேஷன்ட்தான்."



தொண்டையில்

"அப்படியா!" என்று, நடுத்தெருவில் நின்று புலம்ப வைத்த அந்த டாக்டரின் புகழ் பாடினர் இருவரும்.

"சரி, எப்படிக் குறைக்கப் போறே ராது?"

"வாக் ஆரம்பிச்சுட்டேன். அடுத்து ஜிம் ஜாயின் பண்ணலாம்னு இருக்கேன்."

"விசாரிச்சுட்டியா?"

லக்ஷ்மி மோகன்

50kg. தாஜ்மஹால் 6

''ம்ம்ம்..''

''நமக்கெல்லாம் வாக் மட்டும் போதாதுப்பா. ஜிம், ஏரோபிக்ஸ் மாதிரி வொர்க் அவுட் பண்ணினாத்தான் கொஞ்சமாவது இறங்கும். சீக்கிரம் ஸ்டார்ட் பண்ணிடு'' என்று திரியைத் தூண்டி விட்டாள்.

கடையில் கூட்டம் அதிகரிக்கத் துவங்கியது. ''என்ன மேடம், ஷூ பாக்கறீங்களா?'' என்று கடைப்பையன் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகக் கேட்டவுடன்தான் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தனர் இருவரும்.

ராது விலை உயர்ந்த ஷூ ஒன்றை வாங்கினாள். அருணாவும் தன் பர்ஸுக்கேற்றவாறு ஒரு ஷூவை வாங்கிக்கொண்டு இருவரும் ஃபோன், செல் நம்பர்களைப் பரிமாறிக்கொண்டு ஒரு முகூர்த்த வேளையில் கடையை விட்டு வெளியேறினர்.



பட்டாம்பூச்சி!

''அடிக்கடி கூப்பிடுப்பா. எவ்வளவு குறைஞ்சு இருக்கோம்னு அப்டேட் பண்ணிப்போம்'' என்று பரஸ்பரம் தெரிவித்துக்கொண்டு தோழிகள் இருவரும் அவரவர் வீடு வந்து சேர்ந்தனர்.

அது என்ன தைராய்டு? தொண்டையில் பட்டாம்பூச்சி வடிவில் இருக்கும் ஒரு கிளாண்டிலிருந்து சுரக்கும் ஒருவகை சுரப்பிதான் அது. இதனைக் கேடயச் சுரப்பி என்றும் கூறுவதுண்டு. இதன் குறைபாட்டினால் உடல் எடை அதிகரிக்கலாம். முடி உதிர்தல், சோர்வு போன்றவை இருக்கலாம். ஆனாலும் இதனைக் காரணம் காட்டிக்கொண்டு உட்கார்ந்து சாப்பிட்டால் எடை பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புண்டு. அதனால் உடல் எடை அதிகரிப்பதை உணரும்போதே உடனே மருத்துவரை அணுகவேண்டும்.

ஹார்மோன் ப்ராப்ளம் இருந்தா வெயிட் இறங்கவே இறங்காது என்று பொதுவாகக் கூறுவதுண்டு. அது முற்றிலும் தவறு. எந்த ஹார்மோனில் என்ன குறை என்று கண்டறிந்து, சரியான மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக இரவு படுக்கச் செல்வதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பே சாப்பிட்டுவிட வேண்டும்.

ஒபிஸிடிக்காரர்கள் தங்களது எடையில் 5 அல்லது 10 சதவிகிதம் குறைத்தால்கூட, அவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான காரணங்களான இரத்தத்தில் சர்க்கரை, இரத்தத்தில் கொழுப்பு, இரத்த அழுத்தம் ஆகியவற்றின் அளவுகளில் விரும்பத்தக்க மாற்றங்கள் ஏற்படும் என்கிறது ஆராய்ச்சித் தகவல்கள். ○

திரை சகாப்தங்களான கலைவாணர் மற்றும் கே.பி.சுந்தராம்பாள் நூற்றாண்டு விழா துவங்கி விட்ட இத்தருணத்தில் அவர்களின் நினைவுகள் வாசகர்களின் பகிர்வுக்காக...



● என்.எஸ்.கே

மக்களைச் சிரிக்க வைப்பது மிகப் பெரும் கலை. அந்தக் கலையில் நிபுணத்துவம் வாய்ந்த வல்லுனர் கலைவாணர். சிரிக்க வைத்ததோடு நில்லாமல் சிந்திக்கவும் வைத்தவர்.

எஸ்.ஜி.கிட்டப்பா, எம்.எஸ்.சுப்புலட்சுமி, ஜி.என்.பாலசுப்பிரமணியம் போன்ற பல இசை மேதைகளோடு இணைந்து பணியாற்றியவர் கலைவாணர்.

பெரியார், அண்ணா, ஜீவா, எம்.ஜி.ஆர் என பல தலைவர்கள் நேசித்த கலைஞராக கலைவாணர் விளங்கினார்.

நிகழ் சினிமாவில் நகைச்சுவை நடிகர் விவேக் கலைவாணரைத்தான் முன் மாதிரியாகக் கொண்டு இயங்குகிறார்.

'சினிமா' என்பது மக்களுக்கான பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமல்லாமல் அறிவின் சாளரமாகவும் திகழவேண்டுமென விரும்பிச் செயல்படுத்தினார் கலைவாணர்.

அமரர் கல்கி... ''பரோபகாரம் செய்கிறவர்கள், அதாவது பிறரை மகிழச் செய்கிறவர்கள் சொர்க்கத்துக்குப் போவார்கள் என்பது உண்மையானால், கலைவாணருக்கு சொர்க்கங்களுக்குள்ளே மிக மேலான சொர்க்கத்தைக் கொடுத்தே தீர வேண்டும்'' என்று தீர்க்கமாய் எழுதியிருக்கிறார்.

1908ல் நவம்பர் 29ல் நாகர்கோவில் அருகே 'ஒழுகின சேரி' என்ற கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த என்.எஸ். கிருஷ்ணன் வில்லுப்பாட்டு கலைஞராக தன் வாழ்வைத் தொடங்கினார். நாடகங்களிலும் பின்பு திரைத்துறையிலும் தனக்கென தனித்ததான ஓர் இடத்தை நிறுவி, இறுதி வரை அதைத் தக்க வைத்துக் கொண்டார்.

தயாரிப்பாளர்கள் தங்களின் திரைப்படத்துக்குத் தனியாக 'காமெடி டிராக்' தயாரிக்கும் நிர்ப்பந்தத்தை முதன் முதலாக ஏற்படுத்தியது கலைவாணரின் மக்கள் செல்வாக்கு. தான் நடிக்கும் காட்சிகளுக்கான வசனங்களைத் தானே எழுதிக் கொள்ளும் ஆளுமை அவரிடம் இருந்தது. தனது சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்த உடுமலை நாராயண கவியின் மொழிப்புலமையைப் பயன்படுத்திக் கொண்டார். குறுகிய காலகட்டத்தில் நூற்றி ஐம்பது படங்களுக்கு மேல் நடித்தார். தயாரிப்பாளராகவும் இயக்குனராகவும் பரிணமித்தார். சிறந்த காந்தியவாதியாகவும் தேச பக்தராகவும் வாழ்ந்த கலைவாணர் மனிதாபிமானத்தின் எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தார்.

பர்லஸ்க்யூ (Burlesque) எனப்படும் பகடி நாடகவகை மேற்கு நாடுகளில் பதினான்காம் நூற்றாண்டில் தோன்றியது. தியேட்டர், அரசர்கள், மதகுருமார்கள், பிரபுக்கள், கடவுள்கள், கதாநாயகர்கள், புனிதங்கள் - என அனைத்து மாண்புகளையும் ஏகதேசத்துக்குக் கிண்டலடிக்கும் அங்கத நாடகங்கள் இவை. நந்தன் சரித்திரத்தின் சாயலில் இவர் அமைத்த 'கிந்தன் சரித்

நோக்கி...

திரம்' அந்த வகையைச் சார்ந்தது. மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

'ஒன்றிலிருந்து இருபது வரைக்கும் கொண்டாட்டம்', 'விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி', 'சிரிப்போ சிரிப்பு' போன்ற காலம் மறக்கடிக்க முடியாத பாடல்களுக்கு ஜீவனுமாயிருப்பவர் கலைவாணர்.

1957-ல் ஆகஸ்ட் மாதத்தில் தனது நாற்பத்தொன்பதாவது வயதில் அவர், மரணம் அடைந்தார்.

• • •

கரும்பின் உறுதியும் அதன் சாற்றின் இனிமையும் கொண்ட கம்பீரமான குரல் கொடுமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்பாள் அவர்களுடையது.

1908 அக்டோபர் 11-ல் ஈரோட்டிலிருந்து முப்பத்தைந்து கி.மீ தொலைவிலுள்ள கொடுமுடி என்னும் ஊரில், வறுமையின் கொடிய கரங்களால் வதைக்கப்பட்ட குடும்பமொன்றில் பிறந்தவர் கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள் (கே.பி.எஸ்.).

ஓடும் ரயிலில் பாட்டுக்கள் பாடி, பயணிகளின் கருணையினால் தன் குடும்ப வண்டியை நகர்த்திக் கொண்டிருந்த பத்து வயது சிறுமி பாலாம்பாளை நடேச அய்யர் என்கிற ரெயில்வே ஊழியர் காண நேர்கிறது. அவரின் முயற்சியினால் கலையுலகின் கதவுகள் சுந்தராம்பாளுக்காக திறக்கப்பட, அவர் தன் காந்தக் குரலின் வசீகரத்தால் ஒரு சிம்மாசனம் அமைத்துக் கொண்டார். ஔவையார், கவுந்தி அடிகள் என்னும் இலக்கிய ஆளுமைகளை நினைத்தாலே நம் மனத்திரையில் பனிச்சிடுவது கே.பி.எஸ்.ஸின் அருள் முகம்.

நடிப்புக்காக பெரும் ஊதியம் பெற்ற நடிகை என்ற தகுதியையும் திரைப்பட வரலாற்றில் முன்முதலில் பெற்றவர் கே.பி.எஸ்.

முருக பக்தர், தமிழ்ப் பற்றாளர், தேசிய உணர்வாளர் எனப் பல தகுதிகள் இவருக்குண்டு. மோதிலால் நேரு மறைந்தபோது, இவர் பாடிய அவலச் சுவை வழிந்தொழுகும் இரங்கல் இசைப் பாடல், மூத்தகுடி மக்களின் மனத்தில் இன்னமும் ஞாபகச் சுழல்களாய் சுழல்கின்றன.

1951-ல் தமிழக சட்டமேலவை உறுப்பினராக இந்திய தேசிய காங்கிரஸ் இவரை நியமிக்க, இந்திய அரசியல் வரலாற்றில் சட்டமன்ற மேலவையை அலங்கரித்த முதல் திரைத்துறை கலைஞர் என்ற வரலாற்றுப் பெருமையும் இவருக்குக் கிட்டியது. 1964-ல் தமிழிசைப் பேரறிஞர் என்ற பட்டமும், 1970-ல் பத்மஸ்ரீ விருதும் பெற்றார் கே.பி.எஸ். 1980-ல் அக்டோபர் 15ல் கே.பி.எஸ். மறைந்தாலும் இன்னும் தமிழர்தம் செவிகளில் அவரின் வெண்கல மணியோசைக் குரல் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

● கே.பி.சுந்தராம்பாள்



– நரேன்

அக்கம் பக்கம் - குஜராத்

போர்பந்தர் நகரத்தில் காந்தி பிறந்த மண்ணில் காந்திஜிக்கு சிலை எழுப்பி நினைவகம் அமைப்பதற்கு எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. மாநில அரசு போர்பந்தர் கடற்கரையில் காந்திஜி நினைவகம் அமைக்கப்போவதாக அறிவித்துள்ளது. ஆனால் உள்ளூர்வாசிகள் அந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அவர்கள் சொல்லும் காரணம், கட்டடம் கட்டினால் போர்பந்தர் பீச்சின் அழகு கெட்டுவிடுமாம். கடற்கரையை ஒட்டிக் கட்டடங்கள் கட்டுவது சட்டமீறலாம். ஆனால் குஜராத் அரசு அதைக் கண்டு கொள்வதாக இல்லை. சென்னை மெரினாவை என்னவென்பது?

அகமதாபாத் நகரை ஒட்டி சபர்மதி நதிக்கரையில் இருக்கிறது அசாராம் பாபு என்ற சாமியாரின் ஆஸ்ரமம். அங்கே உள்ள பள்ளியில் படித்த இரண்டு மாணவர்கள் மர்மமான முறையில் இறந்துவிட்டார்கள். ஆசிரமத் தரப்பில் மாணவர்கள் நீச்சலடித்துக் கொண்டிருந்தபோது, ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டதாக விளக்கம் அளித்துவிட்டார்கள். ஆனால் பையன்களின் பெற்றோர், விசாரணை நடத்தி உண்மையை வெளிக் கொண்டுவர வேண்டும் என்று உண்ணாவிரதம் ஆரம்பித்துவிட்டனர். முதலமைச்சர் மோடி, சி.ஐ.டி. கிரைம் பிராஞ்ச் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார். உண்மை வெளிவருமா?

அகமதாபாத் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தன்று ராஜ்குமார்ஷா கடைக்குப் போய் மளிகை சாமான் வாங்கச் சென்றவர், குண்டு வெடிப்பு பற்றிக் கேள்விப்பட்டதும், வாங்கிய சாமான்களை வீட்டில் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ''சிவில் மருத்துவமனையில்தான் அடிபட்டவர்களைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அங்கே போனால் ஏதாவது உதவி செய்யலாம்'' என்று சொல்லிவிட்டு மருத்துவமனைக்குச் சென்றவர், கடைசி வரை வீடு திரும்பவில்லை. அதிர்ஷ்டவசமாக ராஜ்குமார்ஷா, சம்பவத்துக்கு பத்து நாட்களுக்கு முன்பு, ஒரு இன்சூரன்ஸ் பாலிசி எடுத்திருந்தார். இப்போது இன்சூரன்ஸ் கம்பெனி, ஷாவின் குடும்பத்துக்குப் பதினேழு லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. ''அவர் ஆசைப்பட்டபடி, என் மூத்த மகள் ஸ்வேதாவை (வயது 11) டாக்டராக்குவது தான் என் லட்சியம்''. என்கிறார் மனைவி லலிதா. இரண்டாவது குழந்தை மோக்ஷாவின் வயது இரண்டரை.



✱ குஜராத் போர்பந்தர் கடற்கரை




✱ அசாராம் பாபு ஆஸ்ரமம்

காந்திஜிக்குப் புதிய எதிர்ப்பு!

அகமதாபாத் வி.எஸ். ஹாஸ்பிடலுக்கு அருகில் இளநீர் வியாபாரம் செய்பவர் நிதின் படேல். 1999ல், ஒரு ஏழை முஸ்லிம் பெண்மணி தள்ளாடியபடி தன் கணவருடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். சிகிச்சை





● மோடி




அளித்த டாக்டர், அவர் தினமும் இளநீர் சாப்பிடவேண்டும் என்று சொல்லிவிட்டார். ஆட்டோ டிரைவரான கணவர் தினமொரு இளநீர் வாங்கக் காசில்லையே என வருத்தப்பட்டார். எதேச்சையாக விஷயத்தை அறிந்த நிதின் படேல், அந்தப் பெண்மணிக்கு தினமும் இலவசமாக இளநீர் தந்து உதவினார். அது முதல், ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக இளநீர் தருவதை வழக்கமாக்கிக் கொண்டுவிட்டார் நிதின். இன்று வரை தொடர்கிறது அவரது இலவச இளநீர் தானம்!

அகமதாபாத், சூரத் வெடிகுண்டு சம்பவங்களுக்குப் பிறகு, குஜராத் மாநிலக் காவல்துறையில் நிலவும் காவலர் தட்டுப்பாடு வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மாநில அரசின் கணக்குப்படி, காவல்துறையில் இரண்டரை லட்சம் காவலர்கள் தேவை. ஆனால் அனுமதிக்கப்பட்ட காவலர்கள் எண்ணிக்கை 97,300. அதிலும் மார்ச் 2006 நிலவரப்படி எண்ணிக்கை வெறும் ஐம்பத்தி மூன்றாயிரம்தான். எட்டு ஆண்டுகளாக காவல் துறைக்கு ஆட்கள் எடுக்கப்படவில்லை. ஆனால், ஆண்டுக்கு சராசரியாக இரண்டாயிரம்பேர் ரிடையர் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாகக் காவல் துறையில் காவலர்கள் எண்ணிக்கையை அதிகரிக்காவிட்டால் ஏற்படக்கூடிய சிக்கல்களை அரசுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள் சில அரசு உயர் அதிகாரிகள். காந்தி தேசம் என்பதால் காக்கிச் சட்டைக்கு வேலை இல்லாது போகுமா என்ன?

குஜராத்தில் புதிதாக ஐ.ஐ.டி. துவக்கப்பட்டுள்ளது. புது மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பித்துவிட்டன. மாணவர்கள் துளியும் ராகிங் பயமில்லாமல் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். காரணம், புது ஐ.ஐ.டி.யில் ஜூனியர் மாணவர்களை ராகிங் செய்ய சீனியர்கள் இல்லையே!

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**

* பைகிராஃப்ட்ஸ் ரோடு (1890)



* ஃபஸ்ட் லை



சென்னைக்கு 369வது பிறந்தநாள்



புகைப்பட உதவி :
கன்னிக்கோயில் ராஜா

* மௌபெரி



* பாரீஸ் கார்னர் (1890)





ரோடு (1915)





❋ சென்ட்ரல் (1925)

டு (1885)





❋ மைலாப்பூர் (1906)



❋ சென்னை நகரம்
உருவான நாள்
22.08.1639



❋ மௌண்ட் ரோடு (1906)

அபிராமிபட்டருக்கு ஓர் ஆசை. தன்னுடைய வாழ்நாளின் கடைசி தருணங்களில் அம்பிகையின் திருமணக் கோலத்தைத் தரிசிக்க வேண்டும்.

அம்பிகையும் இறைவனும் ஒருருவமாய் நிற்கும் கோலம் 'வவ்விய பாகத்து' மகிழ்ந்திருக்கும் கோலம்! அர்த்தநாரீசுவரக் கோலத்தில் இடப்பாகம் அம்பிகையாகவும், வலப்பாகம் பெருமானாகவும் விளங்கும் கோலம். அப்படி ஒருருவாய் இல்லாமல், ஈசனும் அம்பிகையும் ஈருருவாய் மணக்கோலத்தில் விளங்கும் கோலமே பட்டர் காண விழைவது. இந்தக் கோலத்தில் பெருமான் பிராட்டி ஆகிய இருவரது அனுக்ரக சக்தியும் உச்சத்தில் இருக்கிறதாம். உயிர்கள் அனைத்துக்கும் மங்களத்தையும், சுகவாழ்வையும் அருளும் திருக்கோலம் இது.

அம்பிகை ஈசனைப் பிரிந்து பூமியில் பிறந்து தவம் இயற்றி, பின்னர் தக்க தருணத்தில் இறைவனுடன் திரும்ப இணைவதாகப் பல ஸ்தல புராணங்கள் உண்டு.

அம்பிகை மீனாட்சியாகப் பிறந்தாள். மதுரைக்கு வந்தாள். பாண்டியனுக்கு மகளானாள். பின்னர் மகாராணியானாள். திக்விஜயத்தின்போது ஈசனைக் கண்டு, மனம் நெகிழ்ந்து, அவனையே மணந்தாள். இதேபோல், காத்யாயன மகரிஷியின் மகளாக வளர்ந்து திருவீழிமிழலையில் ஈசனை மணந்தாள். இங்கெல்லாம் இறைவனும் இறைவியும் மகிழ்ந்திருக்கும் மணக்கோலம் மிகப் பிரசித்தம்.

மதுரையில் மீனாட்சி கல்யாணத்தை மனத்தில் நிறுத்தும் சிலை மிகப் பிரபலமானது. மகாவிஷ்ணு கன்யாதானம் செய்து கொடுக்க சுந்தரேஸ்வரர் பெற்றுக் கொள்வதாக அமைந்த சிலை வடிவம் அது. திருவீழிமிழலையில் கல்யாணம் முடிந்து மாப்பிள்ளையும் பெண்ணும் தம்பதிகளாய்க் காட்சிதரும் கோலத்தைக் காணலாம்.

ஆனால் சுவாமி அம்பிகையின் கரம் பற்றிப் பாணிக்கிரகணம் செய்து கொள்ளும் கோலம் ஒன்று திருமணஞ்சேரியில் இருக்கிறது. கல்யாணத்தின்போது எடுத்த புகைப்படங்களின் 'ஆல்பம்' போல, சுற்று வட்டாரத்தில் உள்ள தலங்கள் எல்லாம் இந்தத் தெய்வத்திருமணத்தோடு தொடர்புடைய தலங்களாக அமைந்திருப்பது ஒரு சிறப்பு. அதுவும் திருமணத்தின் வெவ்வேறு கட்டங்களில் உள்ளது போல் பெருமானும் பெருமாட்டியும் காட்சி தருவதும் இந்தத் தலங்களின் சிறப்பு.

ஈசனைப் பிரிந்த அம்பிகை ஒரு பசுவின் வடிவில் பூமிக்கு வந்தாள். தன் தங்கையைப் பாதுகாக்க மாலவனும் பசு மேய்க்கும் கோபாலனாக இந்தப் பூமிக்கு வந்தானாம். தேரழுந்தூர் என்னும் திருத்தலத்தில் இந்த அண்ணனும் தங்கையும் கோஸகனாகவும் (பசுவுக்குத் துணையாகவும்) பசுவாகவும் காட்சி தருகிறார்கள். பசு உருவில் இருந்த அம்பிகை, காவிரியில் மூழ்கி மானிட உரு பெற்ற இடம் திருவாவடுதுறை. பின்னர் அந்த மானிடப்பெண் பரதமகரிஷியின் மகளாக வளர்ந்த தலம் 'திருத்துருத்தி'. அவளை ஈசனுக்கு மணம் பேசி முடித்தார் நந்தியம்பெருமான். திருமணத்துக்கு வந்த ஈசனை எதிர்கொண்டழைத்த ஊர் 'எதிர்கொள்பாடி'. இறைவன் தங்கி விரதம் அனுஷ்டித்து வேள்வி நடத்திய தலம்

அழகிய

த.கி.நீலகண்டன்

6

'வேள்விக்குடி'. மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் திருமணச் சடங்காக 'பாலிகை' தெளித்த இடம் 'குறுமுளைப் பாலி'. ஈசன் அம்பிகையின் கரம் பற்றி மணம்புரிந்த தலமே 'திருமணஞ்சேரி'.

இப்படி அந்த வட்டாரமே சுவாமி அம்பிகையின் கல்யாணக் கோலாகலத்தில் பங்குகொண்டதாக, ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஸ்தலபுராணங்கள் தெரிவிக்கின்றன.

எப்படிப்பட்ட அழகு அவன் அழகு! கல்யாணத்துக்காக பிரத்யேகமாக தன்னை சிங்காரித்துக் கொண்டல்லவா வந்திருக்



மணவாளன்

கிறான்! மயில்கண் ஜரிகையுடன் பட்டு வேஷ்டியும் அங்கவஸ்திரமும் அணிந்து, சிரசில் ஜடாமகுடத்துக்குப் பதில் அழகிய கிரீடம் விளங்க, காசியாத்திரை கோலத்தில் உள்ள கல்யாண மாப்பிள்ளையாக பளிச்சென்று திகழ்கிறான் கல்யாண சுந்தரன். நான்கு கரங்களில் மேல் இரண்டு கரங்களில் மானும் மழுவும் (சுவாமியின் கோலத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டுத் திரும்பிப் பார்க்கிறது அந்த மான்). வலது கீழ் கரம், அம்பிகையின் கரத்தைப் பற்றியிருக்க, இடது கரத்தில் அபய முத்திரை காட்டி நிற்கிறான். கல்யாணச் சந்நதியில், வந்திருக்கும் விருந்தினர்களை 'சௌக்யமா' என்று குசலம் விசாரிப்பது போல் அமைந்திருக்கிறது இந்த அபயகரம்.



உலையில் உலோகத்தை உருக்கியபோது உணர்ச்சிகளையும் சேர்த்து உருக்கி வார்த்தானோ கலைஞன்!

மாப்பிள்ளையின் அழகுக்குச் சற்றும் சளைத்ததல்ல மணப்பெண்ணின் சௌந்தர்யம். சர்வேஸ்வரியான அம்பிகை நாணமே உருவெடுத்த நங்கையாக ஈசனின் வலப்புறத்தில் நிற்கிறாள். ஈசனின் இடது பாகத்திற்குச் சொந்தம் கொண்டாடுபவள், வலதுபுறத்தையும் பிடித்துக்கொண்ட வெற்றிப் பெருமிதத்துடன் விளங்குகிறாள். சற்றே சாய்ந்து குனிந்த சிரம்! கணவனே ஆனாலும், நாலு பேர் பார்க்கும் இடத்தில் ஆண்மகன் கரம் பட்டதும் கூசிக் குறுகும் பெண்ணினத்தின் பிரதிநிதியாய் அவள் எழிற்கோலம் காட்டுகிறாள். அதனால் தானோ ஈசனும் பட்டும் படாதது போல் அவள் கரம் பற்றி இருக்கிறான்! அம்பிகை தன் வலது கரத்தை ஈசனிடம் பற்றக் கொடுத்து, இடது கரத்தில் ஒரு மலரை ஏந்தும் பாவனையில் வைத்திருக்கிறாள். அவள் பார்வை, அந்தக் கரத்திலுள்ள மலரின்மீது படிந்திருக்கிறாற்போல இருக்கிறது. கண்கள் என்னவோ அந்தப்பூவின் மேல் இருந்தாலும் பார்வை என்னவோ பரமனின் கம்பீரமான தோற்றத்தைப் பிறர் அறியாதவண்ணம் கண்டு ரசித்துக் கொண்டிருக்கிறதாக நமக்குப் படுகிறது.

அம்பிகையின் திருப்பாதங்களில் கொலுசு. சிக்கென்று பாந்தமாய்க் கட்டிய ஒன்பது கஜ மடிசார் புடைவை. ஒல்கி ஒசிந்த இடையில் ஒட்டியாணம். நின்ற கோலத்தில் ஒயிலாய், ஒய்யாரமாய் இருக்கிறாள் இந்தக் குயில். நிம்மதியும் நிறைவும் ததும்பி வழியும் குறுநகையுடன் கூடிய திருவதனம்.

''வல்லிய பாகத்து
இறைவனும் நீயும்
மகிழ்ந்திருக்கும்
செவ்வியும்; உங்கள் திருமணக்
கோலமும்...''

என்று இப்படி பொருத்தமான சொற்கள் வந்து விழுமானால், அபிராமிபட்டர் திருமணஞ்சேரி கல்யாண சுந்தரேசுவரரின் கோலத்தில்தான் மனம் மயங்கி நின்றிருப்பார் என்று நினைக்கத் தோன்றுகிறது. அழகு, கம்பீரம், நாணம், மகிழ்ச்சி, ஒயில், ஒய்யாரம் என்று பல வகை உணர்ச்சிக் கலவையாய் இந்த வடிவம் விளங்குகிறது. உலையில் உலோகத்தை உருக்கியபோது இந்த உணர்ச்சிகளையும் சேர்த்து உருக்கி வார்த்துவிட்டானோ அந்தக் கலைஞன்?!

ஆடு



நா.வே. அருள்

செவிகளில் சேகரமாயிருக்கும்
காற்றின் கொப்புளங்களாய்க்
கோடி கோடி குரல்கள்

காணாமல் போன
கடைசிக் குரலோ
அடிவயிற்றில் தீச்செருகும்
அடிமனசில் முன் நெருடும்

அன்பில் தோய்ந்த ஆயாவின் குரல்
'எழுந்துர்றா மணீ'

அடுத்ததாய் அம்மா
'சீக்கிரம் எண்ணெய் தேய்ச்சுக்கோ'

திண்ணையிலிருந்து தாத்தாவின் குரல்
'இட்டிலி சுட்டாச்சா?'

'கறிக்குழம்பு அண்ணா'
கண்ணடித்தாள் தங்கை.

வீட்டிலிருந்து வந்த
ஒவ்வொரு குரலையும்
நகர்த்தித் தள்ளி,
காணாமல் போன குரல் தேடி
கண்கள் பரபரக்க
கொட்டாப் பக்கம் ஓடினேன்
கட்டி வைத்த தூணில்
கயிறு மட்டும்...



மேஷம்: தொட்டது துலங்கும். வீடு மனை வாங்க உகந்த காலம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்ப்புகள் விலகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி உண்டு. பதவி உயர்வு கிட்டும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். குழந்தைகள் வழியில் சுப காரியம் கூடி வரும்.

ரிஷபம்: உத்தியோகத்தில் மாறுதல் உண்டாகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வியாபாரத்தில் மந்தமான சூழ்நிலை நிலவும். வழக்கு இழுபறி ஆகும். தாயின் உடல்நிலை பாதிக்கும். கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. வேலைப் பளு அதிரிக்கும். நீண்ட கால பிரச்னைகள் முடிவு பெற தாமதம் ஆகும். வீடு மாற்றம் உண்டாகும்.

மிதுனம்: யாரிடமும் வாக்குவாதம் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல் வாங்கலில் விழிப்புடன் இருப்பது நல்லது. யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. வாகனங்களில் செல்லும்போது உஷார். கைப்பொருள் மீது கவனம் தேவை. நண்பர்கள் விலகிப் போவார்கள். திருமணம் கைகூடும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

கடகம்: நண்பர், உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். கல்வி வளம் மேன்மை பெறும். தடை விலகி திருமணம் கைகூடும். இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. பொருளாதார சிரமம் இருக்காது. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். உடல் நிலையில் சற்று கவனம் தேவை.

சிம்மம்: சுப காரியம் நிறைவேறும். பணக் கஷ்டம் இருக்காது. நண்பர் உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். வெளிநாடு செல்லும் யோகம் வந்து சேரும். திருமணம் கைகூடும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை தீரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

கன்னி: படிப்பில் மேன்மை கிட்டும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். வீடு, தொழில் மாற்றம் உண்டு. வேலைப் பளு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளிநாடு செல்லும் யோகம் வந்து சேரும். கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும்.

துலாம்: சாதனைகள் படைக்கும் வாரம். வீடு மாற்றம் உண்டு. உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். வேலைப் பளு அதிரிக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். சுபகாரியச் செலவு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். சொத்து வாங்கும் யோகம் வந்து சேரும். வழக்கு வெற்றி அளிக்கும்.

விருச்சிகம்: உல்லாசமான வாரம். பண வரவு பெருகும். ஆடை, ஆபரண, அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். புண்ணிய தரிசனம் கிட்டும். உடன் பிறப்புகளால் அனுகூலம் ஏற்படும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

'சீட்' கொடுத்தாதான் எம்.பி. எலக்ஷன் பிரசாரத்துக்கு வருவேன்னது சரியா ஸார்?



வேலையில் உயர்வு ஏற்படும். புதிய வேலை தேடிவரும். வியாபாரத்தில் மிகுந்த லாபம் கிட்டும்.

தனுசு: நெருங்கியவர்கள் விட்டு விலகிப் போவார்கள். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப்போவது நன்மை அளிக்கும். பணக் கஷ்டம் இருக்காது. ஆரோக்கியம் சீராகும். கல்வியில் அக்கறை செலுத்தவும். வேலைப் பளு அதிகரிக்கும். மறைமுக விரோதிகளால் தொல்லை இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது உஷார்.

31.08.08 முதல் 06.09.08 வரை

தஞ்சை பரத்வாஜ்

மகரம்: இன்னும் சில வாரங்கள் கவனமுடன் இருக்க வேண்டும். நீண்ட நாள் தொல்லைகள் கொடுத்து வந்த பிரச்னைகள் முடிவடைய சில காலம் ஆகும். வண்டி, வாகனத்தில் செல்லும் போது உஷார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும்.

கும்பம்: வராத நிலுவைகள் வந்து சேரும். மனஸ்தாபங்கள் விலகி நட்பு அதிகமாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வீட்டில் சுபகாரியம் கைகூடி வரும். வீடு / மனை வாங்கும் நேரம் இது. குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். கடன் சுமை தீரும். வழக்கு வெற்றி அளிக்கும். தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்படும்.

மீனம்: வழக்கு வெற்றி பெறும். புதிய தொழில் துவங்க ஏற்ற தருணம். ஆரோக்கியம் சீராகும். கூட்டாளிகள் விட்டு விலகிப் போக நேரிடும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். மனச் சலனம் தீரும். பிள்ளைகள் இடம் மாறிப் போவார்கள். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வீடு / மனை வாங்க ஏற்ற காலம். செலவுகள் சுபமானதாக இருக்கும்.

விவசாய

என்னுடைய விவசாய ஞானத்தை உலகுக்கு வெளிப்படுத்த இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமென்று தோன்ற வில்லை.

நான் குடியிருக்கும் வீட்டுக்கு மேற் புறத்தில் வெற்றிடம் ஏராளமாயிருக்கிறது. ஏன் காய்கறிகள் பயிர்செய்யக் கூடாது என்பதாக பளிச்சென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. பணத்துக்குப் பணம் மிச்சம்; புத்தம் புதிய காய்கள் உடனுக் குடன் பறித்துக் கொள்ளலாம். இப்படி எண்ணி உடனே ஓர் ஆளைக் கூப்பிட்டுச் சுமார் பத்தடி சதுரத்துக்கு நன்கு கொத்தி வாங்கச் செய்தேன். முதன்முதல் கத்திரிச் செடி வைத்துப் பார்க்கிறதென்று தீர்மானம். கத்திரிச்செடிக்கு ஆட்டின் எருபோட்டால் செழித்து வளரும் என்று சொன்னார்கள். இரண்டணாவுக்கு ஒரு கூடை ஆட்டெரு வாங்கிவந்து கொட்டச் செய்தேன். பிறகு இரண்டணாவுக்கு 20 கத்திரிச் செடிகள் வாங்கிவந்து நடச் செய்தேன். ஆளுக்கு கூலி நாலணா கொடுத் தேன். அன்றிரவு மிக்க குதூ கலத்துடன் அந்தச் செடிகளில் காய்க்கப் போகும் கத்திரிக்காய் களைப் பற்றி நானும் என் மனைவி யும் பேசிக் கொண்டிருந்தோம். ''அவை காய்க்க ஆரம்பித்துவிட்டால் கறிகாய் விலைக்கு வாங்கவேண்டிய அவசியமே யிராது'' என்றேன் நான். ''என்னதான் காய்த்தாலும் தினம் கத்திரிக்காயே சாப்பிட முடியுமா?'' என்றாள் என் மனைவி. ''அப்படி மீந்துவிட்டால் கொத்தவால் சாவடி வியாபாரி யாருக்கேனும் காண்ட் ராக்ட் விட்டுவிடலாம்'' என்று நான் கூறினேன். செடிகள் பெரிதாகி ஒவ்வொரு செடியிலும் பத்துப் பதினைந்து கத்திரிக் காய்கள் பெரிது பெரிதாகத் தொங்குவ தாகவும், அவைகளைக் கூட்டு செய்வதா, கறி பண்ணுவதா என்பதைப் பற்றி நானும் என் மனைவியும் சண்டை போட்டதாகவும் அன்றிரவு கனவு கண்டேன்!

மறுநாள் காலையில் எழுந்ததும் முதல் காரியம் கத்திரிக்கொல்லை பார்வைதான். ஆனால், செடிகளைப் பார்த்ததும் உற்சாகம் பெரிதும் குறைந்து போயிற்று. எல்லாம் சோர்ந்து துவண்டு கிடந்தன. கூலி ஆள் செடிகளைச் சரியாக நட்டானோ இல் லையோ, வேர் நன்றாக ஊன்றியதோ இல்லையோ என்று சந்தேகம் உண்டா யிற்று. ஒரு செடியைப் பிடுங்கிப் பார்த்து இந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளப் போனேன். அதற்குள் குழந்தை ராஜம் ஓடிவந்து ''ஐயோ! மாமா! ஏன் செடியைப் பிடுங்குகிறீர்கள்?'' என்றாள். நான் விஷயம் தெரிவித்தபோது, ''முதலில் அப்படித் தான் வாடியிருக்கும். நாளைக் கெல்லாம் சரியாய்ப் போய்விடும். அதற்காக நட்ட செடியைப் பிடுங்கிப் பார்ப் பார்களா?'' என்றாள். இந்த விஷயங்க ளெல்லாம் எந்த விவசாயக் கலாசாலையில் படித்து இவளுக்குத் தெரிந்தது என்று எனக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது.


பதினைந்து நாட்கள் ஆயின. கத்திரிச் செடிகள் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தன. இலைகள் தளதளவென்றிருந்தன. எனக் கும், என் மனைவிக்கும் குழந்தைகள் ராஜம், ராமு எல்லாருக்கும் காலையில் எழுந்ததும் முதல் வேலை கத்திரிச் செடி களைப் பார்வையிடுவதுதான். கைகால் அலம்புவது, வாய் கொப்பளிப்பது

ஞானம்

எல்லாம் கத்திரிப் பாத்தியில்தான். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாக்குவதில்லை. இன்னும் நாலைந்து நாளில் பூக்கத் தொடங்கிவிடலாமென்று எதிர்பார்த்தோம். இப்படியிருக்கையில் ஒரு நாள் திடீரென்று ராஜம், ''ஐயோ! மாமா! கத்திரிச்செடி போச்சு!'' என்று கத்தினாள். நான் திடுக்கிட்டு, எழுதிக் கொண்டிருந்தவன் அப்படியே பேனாவைப் போட்டு விட்டு, எழுந்து ஓடினேன். பார்த்ததும் வயிறு பகீர் என்றது. ஒரு பெரிய காளைமாடு கத்திரிப் பாத்தியில் புகுந்து நாவை நீட்டி நீட்டி ருசி பார்த்து, அதன் இலைகளைக் காம்பு களுடன் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தது. எனக்குண்டான கோபத்தையும் எரிச்சலையும் சொல்லி முடியாது. 'இதென்ன அநியாயம்? கத்திரிச் செடியை மாடு தின்னுமா, என்ன? இதை எந்தப் புத்தகத்திலும் படிக்கவில்லையே? யாரும் சொல்லிக் கேட்டதுகூடக் கிடையாதே? இந்த மாட்டின் சொந்தக்காரன் மேல் வழக்குத் தொடர்ந்தால் என்ன?' என்று யோசித்துக் கொண்டு நான் திக்பிரமை கொண்டவன்போல் நிற்கையில் ராஜம் மறுபடியும், ''என்ன மாமா! மாடு செடிகளை அழிக்கிறது, சும்மா நிற்கிறீர்களே?'' என்று கூவினாள். உடனே நான் விழித்துக் கொண்டு மாட்டின் கொம்பைப் போய்ப் பிடிக்கப் போனேன். ஆனால், அந்தப் பொல்லாத மாடு கொம்புகளை ஓர் ஆட்டம் ஆட்டி என்னை முட்ட வந்தது!



நல்ல வேளையாக இதற்குள் ராமு எங்கிருந்தோ ஓடி வந்தான். பக்கத்தில் கிடந்த ஒரு தடியை எடுத்துக்கொண்டு எச்சரிக்கைகூடச் செய்யாமல் மாட்டின் முதுகில் நாலு சாத்துச் சாத்தினான். உடனே அந்தக் கோழைமாடு ஓட்டம் பிடித்தது! கேவலம் பெண்கள்கூட இக்காலத்தில் போலீஸ்



தடியடிகளுக்குப் புறங்கொடுத்து ஓடாமல் தீரத்துடன் நிற்கிறார்கள். அந்த ஆண் பசுவுக்கு அவ்வளவு தைரியங்கூட இல்லை! மனிதர்களில் வீர தீர பராக்கிரம சாலிகளை, 'ஏறு' என்றும் 'காளை' என்றும் கவிகள் வர்ணிப்பது அர்த்தமற்றதாகக் காணப்படுகிறது.

இன்னும் பத்து தினங்கள் கழிந்தன. கத்திரிச் செடிகள் மறுபடியும் தளிர்த்துப் பெரிய பெரிய இலைகள் விட்டுச் செழித்துக் காணப்பட்டன. மாடு கன்று வராமல் ஒருவர் மாற்றி



ஒருவர் காவல் புரிந்து வந்தோம். ஒருநாள் காலை நான் படுக்கையை விட்டு எழுந்து வெளிவந்ததும் வீதியில் ஓர் அதிசயக் காட்சியைக் கண்டேன். மூசுக்கட்டைப் பூச்சியைப் போன்ற ஒருவகைச் சிறிய பூச்சிகள் தெரு வீதியில் கால் வைக்க இடமில்லாது நிறைந்திருந்தன. செடிகளில் ஓர் இலையில் ஓர் அணுவளவு பாகங்கூடக் கண்ணுக்குப் புலனாகவில்லை. எல்லாம் பூச்சிகளால் மூடப் பெற்றிருந்தன.

மறுநாள் காலையில் சென்று பார்த்த போது, கத்திரிச் செடிகளில் ஒரு இலையாவது பாக்கியில்லை. ஆனால், இலைக்காம்புகள் எல்லாம் அப்படியப்படியே நின்றன. மாட்டைப்போல காம்புகளையும் தின்றுவிடாமல் விட்டதற்காகப் பூச்சிகளுக்கு நன்றி கூறினேன். ஆனால், பெரிய மாடு முதல் சிறு பூச்சிகள் வரையில் என்னுடைய விவசாயத்துக்கு ஏன் விரோதம் செய்ய வேண்டுமென்பது எனக்கு விளங்கவேயில்லை.

பின்னும் இருபது நாள் சென்றபிறகு



எங்கள் சொந்தக் கொல்லையில் காய்த்தது என்பதாக ஒன்றைக் கொடுத்துவிட்டாள். பாக்கி ஒரு காயை மேள தாளங்களுடன் நாலாக நறுக்கி சாம்பாரில் போட்டோம்.

ஒருநாள். ராஜம், ''மாமா மாமா! ஓடி வாருங்களேன்!'' என்று கத்தினாள். குழந்தைக்கு என்ன ஆபத்தோ தெரியவில்லையே என்று நான் அலறிப்புடைத்துக் கொண்டு எழுந்து ஓடினேன். ''மாமா! கத்திரிச் செடி பூத்தி ருக்கு'' என்று அளவில்லாத குதூகலத் துடன் கூச்சலிட்டாள் ராஜம். இருபது செடிகள் நட்டதில் ஒரு செடியானது எவ் வளவோ விபத்துக்களை எல்லாம் தாண்டிக் கடைசியாகப் பூப் பூத்து மூன்று காய்களும் காய்த்தது. அவற்றில் ஒன்று சொத்தை யாய்ப் போயிற்று. பாக்கி இரண்டையும் செடியிலிருந்து பறித்தோம். அன்றைய தினம் என் மனைவியின் அடுத்த வீட்டுத் தோழி ''சமையலுக்கு ஒன்றுமே இல்லை; கறிகாய் ஏதேனும் இருக்கிறதோ?'' என்று கேட்கவே, என் மனைவி மிகுந்த பெருமையுடன் ''எங்கள் சொந்தக் கொல் லையில் காய்த்தது'' என்பதாக ஒன்றைக் கொடுத்துவிட்டாள். பாக்கி ஒரு காயை மேள தாளங்களுடன் நாலாக நறுக்கி ஸாம்பாரில் போட்டோம். சாப்பாட்டின் போது தலைக்கு ஒரு துண்டம் கிடைத்தது. ஆஹா! என்ன இருந்தாலும் சொந்தக் கொல்லையில் பயிரிட்டுக் காய்த்த கறியின் சுவையே வேறுதான்! அந்த ருசி அனுபவித் தவர்களுக்கே தெரியும்.

- ஆனந்த விகடன்,
14.1.1931

''உங்களுக்கு இன்னும் ஒரு மாதத்தில் பிரமோஷன் வரும்!''

''அதுசரி! முதல்ல வேலை எப்ப கிடைக்கும்னு சொல்லுங்க!''

- உதய்



'பழைய இரும்பு வாங்கறதேய்...' கூவியபடியே வண்டியைத் தள்ளிச் சென்றுகொண்டிருந்தார் நாராயணசாமி. இதுதான் அவரது தொழில். இதிலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டுதான் அவரது வாழ்க்கை வண்டி ஓடிக்கொண்டிருந்தது. மூலக் கொத்தளம் பகுதியை எட்டினார்.

எதிரே வந்த பையன் ஒரு இரும்பு ராடை நீட்டிச் சொன்னான்:

''தாத்தா, இதை வாங்கிக்கிட்டு காசு கொடுங்க.''

அதைக் கையில் வாங்கியவர், மீண்டும் அவனிடமே நீட்டினார்.

''தம்பி, நீ அன்னிக்கு பால் காய்ச்ச வந்த ராம்தானே...''

சமீபத்தில்தான் அவர் இடம் மாறி வந்திருந்தார்.

அந்த வீட்டுக்கு மீன்பாடி வண்டியில் வந்த தட்டுமுட்டுச் சாமான்களை எடுத்து அடுக்கவும், பரண் கட்டவும் உதவி செய்தவன் இந்த ராம். அதற்குப் பிறகு இன்றுதான் பார்க்கிறார்.

''ஆமா தாத்தா...''

''தம்பி, சொல்றேன்னு தப்பா நினைக்காத. வேணாம். இது ரயில்வே பொருளு. வாங்கக்கூடாது. போலீஸ் பாத்தா புடிச்சுக்கும். எங்க யாச்சும் தூக்கிப் போட்ரு. நா வேணா உனக்குக் காசு தர்றேன்.'' சொன்னபடியே, ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டிவிட்டு, வண்டியைத் தள்ளிக்கொண்டு நடந்தார்.

மறுநாள் காலை...

முதுகு தேய்த்துவிட்டுக் கொண்டிருந்த பூசம்மா சொன்னாள்:

''ஏங்க... எம்புட்டு நாளா சொல்றேன். இன்னிக்காச்சும் சீட்டுக் காசுல ஒரு சரடு எடுத்துட்டு வரலாமில்ல.''

உண்மைதான். அவளும் ரொம்ப நாளாகச் சொல்கிறாள். வருகிற காசில் மிச்சம் பிடித்து, நகைச்சீட்டு கட்டி வந்தாள். அது முடிந்து மூணு மாசமாகிவிட்டது.

'ம்... கண்ணாலம் முடிஞ்சதுல இருந்து அவளுக்குன்னு பெரிசா என்னத்தைச் செய்துட்டோம். இதையாவது செய்வோம்' என்று தோன்றியது நாராயணசாமிக்கு.

''சரி... போகலாம்'' என்று குளித்து முடித்துக் கிளம்பினார்கள்.

சரடு மாதிரி மெல்லியதாகத்தான் இருந்தது அந்தச் செயின். அதை வாங்கியதே பெரிய விஷயம்தான். பூசம்மாளுக்கு அதுவே பெரிய சந்தோஷம்.

இருக்காதா என்ன? தெருத் தெருவாய் அலைந்து இரும்பு வாங்கி, அதை விற்று, அந்த வருமானத்தில் வாடகை



'நூலகர்' மாசிலாமணி

கொடுத்து, துணி எடுத்து, சாப்பிட்டு... பெரிய விஷயம்தான்! அவளது சந்தோஷமே, பெரும் ஆனந்தமாய் இருந்தது நாராயணசாமிக்கு.

வீட்டுக்கு வந்து சாமி படத்தின் முன் வைத்து வணங்கினார்கள். தன்னுடைய கையாலேயே எடுத்து மனைவியின் கழுத்தில் அந்தச் செயினை அணிவித்தார் நாராயணசாமி. பூசம்மாள் மேலும் பூரித்துப்போனாள்.

மறுநாள்,

காலையிலேயே வியாபாரத்துக்குப் புறப்பட்டார் நாராயணசாமி. நல்ல வியாபாரம். அதே சமயம், திடீரென்று வானம் இருட்டியது. மழை வருவது போலத் தென்பட்டது.

'அடடே... பூசம்மாளுக்கு நாஸ்டா வாங்கித் தரவில்லையே' என்ற யோசனை எழுந்தது. அப்போது எதிரே தென்பட்டான் ராம்.

''தம்பி... ஒரு உதவி செய்யேன். வீட்ல பாட்டி இருக்கும். நான் நாஸ்டா வாங்கித் தர்றேன். கொஞ்சம் கொடுத்துருவியா...?''

சாம்பலில் பிறந்தவன்



''சரி, தாத்தா'' என்ற ராம், அவர் வாங்கிக் கொடுத்த உணவோடு, தாத்தாவின் வீட்டுக்குப் போனான்.

கதவைத் தட்டினான். திறந்து கொண்டது.

''யாரு? உக்காருங்க. இதோ வர்றேன்.''

பாட்டியின் குரல் கொல்லைப்புறத்தில் கேட்டது. ராம் சுற்றிலும் பார்த்தான்.

சற்றுத் தள்ளியிருந்த பெட்டி அவனை இழுத்தது. மெதுவாக நடந்து

அதைத் திறந்தான். உள்ளே -

புதிதாக வாங்கிய சரடு - செயின் - புன்னகைத்தது. எடுத்து பையில் போட்டுக்கொண்டு அமர்ந்தான்.

பாட்டி வந்தாள். தாத்தா கொடுத்தனுப்பிய பார்சலைப் பார்த்தவள்,

''ஐய, யாரு இம்புட்டு சாப்பிடுவாக. இரு; நீயும் சாப்பிடு'' என்றாள். அவனைப் பேசவிடாமல் தட்டில் இட்லியை வைத்து நீட்டினாள். பாட்டிலில் தண்ணீர் எடுத்து வைத்தாள். ராமின் மனசு நடுங்கியது. சாப்பிடவே முடியாமல் எதுவோ உறுத்தியது.



''இந்தப் படத்தை 'எடுக்க' நான் ரொம்பக் கஷ்டப்பட்டேன்!''

''எந்த 'மொழி' படத்துலேயிருந்து சார்?''

– வெ.சீதாராமன்

சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான்.

''வழில அவங்களைப் பார்த்தா சீக்கிரம் வரச்சொல்லு. நான் மார்க்கெட்டுக்குப் போகணும். அவங்களுக்குப் பிடிச்ச அவல் பாயாசம்னு சொல்லு.'' கிழவி சிரித்தபடியே சொன்னாள்.

ராம் குற்ற உணர்வுடன் நடந்தான். எதிரே வந்த நண்பனிடம் அவனால் இயல்பாகப் பேச முடியவில்லை. சிறிது நேரத்தில் ஏனோ தாத்தாவின் வீட்டை நோக்கி நடந்தான். அந்தக் குடிசை எரிந்துகொண்டிருந்தது.

பக்கத்து வீட்டுக்காரர்கள் தண்ணீரை வாளி வாளியாகக் கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

''பாட்டி எங்கே?'' என்று பதறியவன், மார்க்கெட் போயிருப்பதை அறிந்து சந்தோஷப்பட்டான்.

''அட.... தாத்தாவுக்குச் சொல்ல வேண்டுமே...'' ஓடினான். நாராயணசாமி நடுங்கினார். 'பூசம்மா எங்கே?' புலம்பியபடியே ஓடி வந்தார். பூசம்மாள் கதறிக்கொண்டிருந்தாள்.

'ஐயா... நம்ம சரடுமில்ல போயிருச்சு...'

''நான் எனக்குத் தெரிஞ்சு எந்தத் திருட்டுப் பொருளையும் வாங்கி சம்பாதிக்காதவன். உழைச்ச பொருளா இருந்தா அது வரும். இல்லேன்னா போயிடும். நெருப்பு சரடை உருக்கி இருக்கும். உன்னோட உசுர உருக்கலை இல்ல. தர்மம் தலை காக்கும்டி'' என்றபடி அணைத்தார். பிறகு புகைந்துகொண்டிருந்த வீட்டினுள் புகுந்து, தேடினார். உடன் சேர்ந்து ராமுவும் தேடினான். திடீரென, தாத்தாவின் பேச்சும் வாழ்வும் அவனை உறுத்த க்ஷண நேர உறுத்தலால் திருடிய சரடைத் தன் பாக்கெட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் எடுத்து 'இதோ சரடு' என்று கூவினான். பாட்டியின் முகம் மீண்டும் மலர்ந்தது.

''சொல்லல... சரியா வாழ்ந்தா சரியா இருக்கும்'' என்றார் தாத்தா.

இதோ...

மீண்டும் வீடு மாற்றுகிறார்கள். ராம் தான் மீன்பாடி வண்டியில் சாமான்களை ஏற்றிக்கொண்டிருக்கிறான். அவனுடைய தவறான குணம் அந்த நெருப்பிலேயே சாம்பலாகிவிட்டது, அவனுக்கு மட்டுமே தெரிந்த உண்மை. இப்போது உங்களுக்கும் தெரிந்துவிட்டது. ○

மறந்ததும் மறைந்ததும்...

சுவீகாரம் - வினிதா பார்கவா, தமிழில் : ரம்யா மகாதேவன், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 2. விலை ரூ.65/-

இந்தியாவில் தத்தெடுக்கும் முறை குறித்து எழுதப்பட்டுள்ள ஒரு முழுமை யான ஆய்வு நூல். தத்தெடுத்தல் பற்றிய கோட்பாடுகள், ஆய்வுகள், சட்டங்கள் சமூக - கலாசார பரிமாணங்கள், நடை முறை, குடும்ப உறவுகள் மற்றும் சுய மதிப்பீடுகள் என்று, பன்முகத்தன்மையில் நூல் அமைந்துள்ளது.


பெரோஸ் காந்தி - பா.முருகானந்தம், அவின்யூ பிரஸ், புது எண் : 9, பழைய எண் : 25, டிசில்வா ரோடு, மைலாப்பூர், சென்னை - 4. விலை ரூ.60/-


பெரோஸ் காந்தியின் வாழ்க்கை வர லாற்றினைக் கூறும் நூல். பதினேழு அத் தியாயங்களில் கதை வடிவில் தந் திருக்கிறார் ஆசிரியர். மறைந்தும், மறந்தும் உள்ள விஷயங்களை வெளிப்படுத்த விரும்பிய ஆசிரியரின் ஆர்வம் நூலில் தெரிகிறது. அரிய செய்திகளை அறிய உதவும் நூல்.

கர்நாடக மாநிலக் கலைக் கோயில் கள் - ஜெயா வெங்கட்ராமன், கங்கை புத்தக நிலையம், 23, (பழைய எண் : 13), தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை - 17. விலை ரூ.80/-

கர்நாடக மாநிலத்தில் உள்ள பல்வேறு கோயில்கள் குறித்த ஆசிரியரின் பயணக் கட்டுரைகள். புகைப்படங்களுடன் கட் டுரைகள் அமைந்துள்ளது நூலுக்கு அழகு சேர்க்கிறது. கோயில்களை நேரில் சென்று தரிசிக்க இயலாதவர்கள் நூலில் படித்தும், பார்த்தும் பரவசமடையலாம்.

அன்றில்கள் - மயிலாடுதுறை







இளைய பாரதி, ரேவதி இளையபாரதி, நம்மொழி பதிப்பகம், 93, 4வது பிளாக், 4வது தெரு, கவியரசு கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், சென்னை - 118. விலை ரூ.50/-

கணவனும் மனைவியும் சேர்ந்து எழுதி யிருக்கும் கவிதை புத்தகம் இது. 'அன் றில்கள்' தலைப்பு அவ்வகையில் நன் றாகவே பொருந்துகிறது. ஹைகூ வடிவில் அமைந்த கவிதைகள். அவற்றுக்குப் பொருத்தமாக அமைந்த எளிய ஓவியங் களும் அழகு.

- நேயமுகில்





மனச்சிற்பம்




உலக சுற்றுலாப் பயணிகள் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடற்கரையில், ஓவியம் பயின்ற இளைஞர்கள் உலக சுற்றுலாப் பயணிகளுக்கும், நம் நாட்டின் இளைய சமுதாயத்துக்கும் ஓர் செய்தியை மணல் சிற்பத்தின் மூலம் சொல்ல வேண்டும் என விரும்பினார்கள்.

நம் முன்னோர்கள் சுதந்திரத்துக்குக் கொடுத்த விலையை உணர்த்துவதோடு, தீவிரவாதத்தை நம் இளைஞர்கள் நாடிச் செல்லக்கூடாது என்ற மையச் சிந்தனையையும் வெளிப்படுத்தும் விதமாய் இந்தியக் கரங்கள் தாய்த்திருநாட்டின் சுதந்திரக் கொடியை உயர்த்திப் பிடிக்கும் வகையில் வடிவமைத்தனர் மணல் சிற்பத்தை.

இதை உருவாக்கிய சுரேஷ், கிப்சன், திருமாவேந்தன், மணிகண்டன், ஆறுமுகம், புதியவன், மனோ ஆகிய இளம் கலைஞர்களிடம், ''உங்கள் பணத்தையும், காலத்தையும் உழைப்பையும் செலவிட்டு, சுழன்றடிக்கும் குளிர்ந்த காற்றுக்கு மத்தியில், ஓய்வின்றி தொடர்ச்சியாக இரண்டு இரவு மூன்று பகல் முழுமையும் உழைத்து இப்பணி செய்வதில் உங்களுக்கு என்ன நன்மை?'' என்றபோது குழுவில் ஒருவரான சுரேஷ், ''முதலில் ஆத்ம திருப்தி. பலரும் பலகாலம் கன்னியாகுமரி கடற்கரையில் மணல் சிற்பம் அமைக்கும் முயற்சியில் முயன்றும் முடியாதுபோனதை முடிக்க வேண்டும் என்ற உறுதி. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்த மணல் சிற்பத்தைப் பார்த்து விவரம் கேட்டாலே போதும். எங்கள் உள் உணர்வுக்குக் கிடைத்த வெற்றி'' என்றார்.

அதைவிட தீவிரவாதத்தை எதிர்க்கும் உணர்வை, இந்திய சுதந்திர தினநாளில் இளைய சமுதாயத்துக்கு, இளைஞர்களே சொல்லும் செய்தியாக இருந்த இந்த மணல் சிற்பம், ஓர் புதிய நம்பிக்கை சாட்சியாக தன்னை வெளிப்படுத்திக்கொண்டது. இது தேசத்தின் மீதான ஆத்ம ஆறுதலாயிருந்தது.

செய்தி, சித்திரம்: **த.இ.தாகூர்**



* சிற்பிகள்...

பித்ரு பூஜை செய்பவர்களுக்கு முன்னோர்களுடைய பரிபூரண ஆசியும் ஆதரவும் நிச்சயம் உண்டு

வயதான பசுக்களை பாதுகாத்து பராமரிக்கும் பசுமடத்தில் (மாட்டு தொழுவத்தில்)

மஹாளய அமாவாசை அன்று (28-9-2008) நடைபெறும்

பித்ரு தர்ப்பண பூஜையில் அனைவரும் கலந்து கொண்டு பித்ரு தேவதைகளின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்

மாட்டுத் தொழுவத்தில் பசுவின் சாணம், கோமியத்தில் (கன்றுபோட்ட பசுவின் கோமியம்) சுத்தம் செய்து பித்ரு பூஜை செய்வதால், தேவர்கள் வந்து சிறப்பாக நடத்தி வைப்பார்கள். பித்ருக்கள் ஆன்மா சாந்தியடைய உதவி செய்து, ஆரோக்கியம் அளித்து, அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுவித்து நீண்ட ஆயுளையும் அளிப்பார்கள்.


- கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து
- கோமாதாவிற்கு அகத்தி கீரை, அருகம் புல், கருப்பு எள் உருண்டை, வெல்லம், பொங்கல் போன்ற உணவு அளித்தால் மகாலட்சுமி நம் இல்லத்தில் என்றும் குடியிருப்பாள். எல்லா செல்வங்களையும் அளித்து, நிலை பெற செய்வாள்.
- அன்பர்கள் தங்களுடைய திருமண நாள், பண்டிகை நாட்கள், முன்னோர்களின் திதி நாட்கள், அன்பிற்குரியவரின் நினைவு நாள் என தங்களுக்கு உகந்த நாட்களின்போது கோதானம் செய்து, பசுக்களின் பராமரிப்பிற்கு நன்கொடை அளித்தால், ரிஷிகளின் ஆசி கிடைக்கும். மேலும் தேவர்கள் மகிழ்ச்சியால் மனம் குளிர்ந்து நம்மை வாழ்த்துவார்கள்.
- பசு மடத்தில் தினமும் நடைபெறும் கோபூஜையில் அன்பர்கள் நேரில் கலந்து கொண்டு கோமாதாவின் அருளை பெற வேண்டுகிறோம்.



பசு மடத்தில் உள்ள வயதான நோயுற்ற பசுக்களில் ஒரு பசுவை பராமரிக்க

ஒரு வாரத்திற்கு ..... ரூ.105.00 ஒரு வருடத்திற்கு ..... ரூ.5400.00

ஒரு மாதத்திற்கு ..... ரூ.465.00 கோதானம் (பசுவும் கன்றும்) ..... ரூ.9000.00



பித்ருக்கள் நினைவாக வயது முதிர்ந்த, பால் வற்றிய, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பசுமடத்தில் பாதுகாத்து பராமரிக்க உங்கள் அன்புக்காணிக்கையை கனிவுடன் மனமுவந்து தாரீர்!

- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீராமர் பாதம் 2 அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு பசுவும், கன்றும் சேர்ந்த (கோமாதா) வெள்ளியிலான விக்ரகம் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 3000 - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5400 - அனுப்பும் அன்பர்களுக்கு பெரிய வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 9000 - கோதானம் செய்யும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும், பசுவும் கன்றும் சேர்ந்த (கோமாதா) பித்தளையிலான பெரிய விக்ரகமும் அனுப்பி வைக்கப்படும்.

பசுவை பாதுகாக்க மேற்கண்ட நன்கொடையை அனுப்பும் அன்பர்களுக்கு (மஹாளய அமாவாசை அன்று) முன்னோர் வழிபாடு முழுமையாக செய்து பிரசாதத்துடன் மேற்கண்ட குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் கோமாதா லாக்கெட் அனுப்பி வைக்கப்படும். பசுவை பாதுகாக்க ரூபாய் அனுப்பும்போது யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர் திதி மற்றும் கோத்திரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று கோதானம், மகிஷ (எருமை) தானம், காராம் பசு தானம் செய்தால் பித்ரு தோஷம், புத்திர தோஷம், நாகதோஷம், ஆபிசார தோஷம், நவக்கிரஹ தோஷம், திருமண தடை, வியாபாரத் தடை மற்றும் அனைத்து தோஷங்களும் விலகி ஐஸ்வர்யம் தங்களுக்கும், தங்களுடைய சந்ததியினருக்கும் கிடைக்கும்

பணம் அனுப்பும் அன்பர்களுக்கு ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு அனுப்பி வைக்கப்படும்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.

தங்களால் இயன்ற அளவு நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலமாக Shri Ghosala Seva Trust, Chennai. என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பசு மடம்

(Recognised by Animal Welfare Board of India)

வயதான பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P. O), சென்னை - 600 077.

TEL: 044 - 3299 9888 Fax: 044 - 4206 6525



வயதான பசுக்கள் பாதுகாப்பு, உதவிக்கு: 93400 22233 (24 Hrs)

பேட் கதை-3

பம்பரக் கண்ணாலே...

தினம் ஏதாவது எஸ்.எம்.எஸ். அனுப்பியே தீர வேண்டும் உஷாவுக்கு. இல்லாவிட்டால் கோபம் வரும். கண்ணை உருட்டி உருட்டிப் பேசுவாள். சுத்தி விட்ட பம்பரம் மாதிரி சுழலும் கண்கள் அவளுக்கு.

''எம்பா... ரெண்டு வரில அழகா.. நச்சுனு ஏதாச்சும் மெசேஜ் அனுப்புன்னு சொன்னா... ஏன் ஒரேயடியா அலட்டிக்கிறே?''

''நினைச்ச உடனே கவிதை எழுதிட முடியாது தெரியுமா... உள்ளே பூ பூக்கணும்...''

''நல்லாப் பேசு. எழுத மட்டும் சுணக்கம். தெனம் ஒண்ணு அனுப்பறேன்னு நீதானே ப்ராமிஸ் பண்ணே...''

வாஸ்தவம்தான். அன்று நாற்பது நிமிடங்கள் பேசிய போது கடைசியாகக் கொடுத்த பிராமிஸ். அதுவும் தானாக மாட்டிக் கொண்ட வலை.

''நான் ஒண்ணு கேட்கட்டுமா...?''

''அய்... கேளு.. கேளு...''

''ச்சீ... நீ நினைக்கற மாதிரி எதுவும் இல்லே...''

''சரி... சொல்லு...''

''முழு இன்ட்ரெஸ்ட்டா கேளு.''

''சொல்லு...''

''கன்பாஃர்மா...''

''ஒக்கே... கேளு...''

''எனக்கு டெய்லி மினிமம் ஒரு மெஸேஜ்... கவிதையா.. அனுப்பறியா?''

''எ...எதுக்கு?''

''அனுப்பேன்...''

''ம்...''

''இங்கே பாரு.. உனக்கு வந்த மெஸேஜ் எல்லாம் அனுப்பாதே.. வேணாம்... நீயா சொந்தமா அனுப்பணும்.. புரியுதா..?''

''சரிப்பா...''

பேசி முடித்ததும், மெஸேஜ் வந்தது உஷாவிடமிருந்து. 'தேங்க்யூடா செல்லம்'.

'மரத்தில் பூ, இலை, காய், பழம் எதையும் விட்டு வைப்ப தில்லை



மைக் கார்னர்

சீன சாஸ்திரப்படி ஒவ்வொருவருக்கும் மூன்று விதமான அதிர்ஷ்டங்கள் உண்டு.

கர்ம வினைப்படி நடப்பது ஹெவன் லக் அதாவது பூர்வ புண்யம்; நமது செயல்பாடுகளின் நன்மை, தீமைக்கேற்ப உருவாவது ஹ்யூமன் லக்... அதாவது மனித விதி; சுற்றுச்சூழலால் உருவாவது எர்த் லக். (வழக்காடு மன்றத்தில் கேட்டது)

– நெல்லை. சூரலோன்

பிறர்.
ஆனால் தினம் நீர்
ஊற்றும் நீயோ
நின்று பேசிப் போகி
றாய்...



உடைந்த கிளையைத் தொட்டு...
அதன் வலி மறந்து
அடுத்த நாளும் பூக்கிறது
உற்சாகமாய்'

தமிங்கிலீஷில் டைப் செய்து அனுப்பியதும் 'சூப்பர்' என்று பதில் வந்தது.

மறுநாள் அடுத்த கவிதை.

ஒருநாள் என்ன முயன்றும் கவிதை வராமல் அலுத்து, வந்த மெஸேஜை அனுப்பி விட்டதும்... உஷாவின் கோபம் தெரிந்தது.

''இன்னிக்கு என்ன அனுப்பினே?''

''ம்ம்... இரு...''

அப்படியே குறுஞ்செய்தி அனுப்பியதைத் தேடிப் படித்தான்.

'முகவரி மாற்றம்
குறித்துக் கொள்
கேர் ஆஃப் உன்
இதயம்
ஈமெயில் நான் @
உன் இதயம். காம்'

''என்ன இது?''

''வந்து... எதுவும் தோணலே. அதனால''

''நான்தான் சொன்னேன்ல. எனக்கு உன் சொந்தக் கவிதை. ரெண்டே வரியா இருந்தாக் கூட போதும்னு...''

''ஓக்கே. ஓக்கே... ஏதோ அவசரத்துல... உனக்குக் கொடுத்த ப்ராமிஸை மீறக் கூடாதுன்னு...''

''இப்ப கட் பண்றேன். நீ புதுசா.. உன்னோட கவிதை அனுப்பறே.

ரிஷபன்

புரியுதா...''

அனுப்பினேன். கூடவே.. 'ஸாரிடா செல்லம்.'

அவனும் 'ஸாரிடா செல்லம்' என்று பதில் அனுப்பினான்.

பேருந்தில் மொபைலைக் கையில் வைத்துக் கொண்டு நிறைய அந்த முகம் தெரியாதவனின் திகைப்பு என்னைப்

பாதித்தது.

''என்ன ஆச்சு?''

''திடீர்னு ஏதோ ஸ்டக் அப் ஆகி...''

''இங்கே கொண்டாங்க... பேட்டரியை ரிமூவ் பண்ணிட்டு திருப்பி போட்டா ஒரு வேளை வொர்க் பண்ணும்.''

கழற்றிப் போட்டதில் 'இரு கைகள்' இணைந்து மிழுசிக் கேட்டது.

''ஏதோ மெஸேஜ் வந்திருக்கு.''



கிடைத்திருக்கும்.

'எதுவா இருந்தாலும்.. பேசு... ப்ளீஸ்...' அடுத்த மெஸேஜ். உடனே அழைப்பும். அரைமனதாய் எடுத்தேன்.

''என்ன ஆச்சு உனக்கு... ஏன் பேசலே?''

''..............''

''இங்கே பாரு... எம்மேல கோபம்னா... அதை எனக்கு சொல்ல வேண்டாமா... அப்புறம் எப்படி எனக்குத் தெரியும் என் தப்பு...''

லாஜிக்கல்.

"ஏம்பா... எந்த யுகத்துலயும் ஆம்பளைங்க எங்களைச் சரியாவே புரிஞ்சுக்க மாட்டீங்களா?"

வாங்கிப் படித்தவன் புன்னகையுடன் நீட்டினான்.

''நீங்களும் படிங்க. அருமையா இருக்குல்ல.''

''ஒரு மழை நாளில்...''

என் கவிதை... அனுப்பியது யார் என்று அவசரமாய்ப் பார்த்தேன். 'உஷா'. செல்பேசியைக் கொடுத்துவிட்டேன்.

மனசுக்குள் குமுறல் ஆரம்பித்தது.

'என்னை வைத்து கவிதை விளையாட்டு... அவளுக்காகவே பிரத்தியேகமாய் யோசித்த வரிகள். வேறு எவருக்கும் அனுப்பக் கூடாது என்று தவிர்த்தவை...'

அன்று பேசவே இல்லை.

'வொய்.. நோ கால்' என்று மெஸேஜ் வந்தது உஷாவிடமிருந்து.

அவசரமாய் டெலிட் செய்தேன்.

'நீ இப்பப் பேசணும். இல்லாட்டி மெஸேஜ்.. இல்லேன்னா, நா அப்புறம் உன் கூட பேசவே மாட்டேன்.'

அதுவும் 'டெலிட்'.

உடனே அழைப்பு அவளிடமிருந்து. 'நோ ஆன்சர்' என்று அவளுக்கு அறிவிப்பு

''நான் உனக்கு தெனம் ஒரு மெஸேஜ் அனுப்பறேன்ல... அது வேற யாருக்கும் நான் அனுப்பறதில்லே...''

''சரி... அதனால...''

''இன்னிக்கு உன்னோட பேர்ல அந்த மெஸேஜை... வேற ஒருத்தன் செல்லுல படிச்சேன்..''

எதிர் முனையில் மௌனம் சிறிது நேரம். கையும் களவுமாய் மாட்டிக் கொண்டாளா...



''அடப்பாவி... 'ஒரு மழை நாளில்' தானே..''

''ஆமா...''

''என் ஃப்ரெண்டுகிட்டே செல்லை.. அவ ஏதோ அர்ஜெண்டாய் பேசணும்னு கேட்டாளேன்னு கொடுத்தேன். பேசிட்டு மெஸேஜைப் பார்த்தா... அட... நல்லா இருக்கே, என் ஆளுக்கு அனுப்பறேன்னு அப்படியே ஃபார்வர்டு பண்ணிட்டா... நீயா ஏதாச்சும் மனசுக்குள்ள குழப்பிக் கிட்டு... என்னோட பேசாம இருந்தின்னா எனக்கு எப்படி மேட்டர் தெரியும்... ஏம்பா... எந்த யுகத்துலயும் ஆம்பளைங்க எங்களைச் சரியாவே புரிஞ்சுக்க மாட்டீங் களா..?''

சிரித்துக்கொண்டே காதலுடன் தேம்பி னாள்.

''ஸாரிடா செல்லம்...''

''நோ... தண்டனை உண்டு. இனிமேல் ரெண்டு கவிதை மினிமம். டெய்லி நீ அனுப்பறதை நோட்டுல எழுதி வச்சுக் கிட்டு நானும் டெலிட் பண்ணிடறேன்... பின்னால குழப்பம் வராதில்ல...'' என்றாள். அவள் எதிரே இல்லை; ஆனாலும் தனது பம்பரக் கண்களால் சாட்டையின்றி என்னைச் சுழற்றுவதும் தங்க சிலை போல் வந்து மனதைத் தவிக்க விடுவதும் மனத் திரையில் வந்து போனது.

சண்டையிட்ட பின்... காதலின் கவிதைத் தன்மை இரட்டிப்பாகி விடுகிறது. ○

''மகாராணிக்கு குறும்பு கூடுதல் தான்...!''

''என்ன?''

''மன்னரின் குறட்டையை, ரிங்டோனா செட் பண்ணியிருக்காரே!''

- பி.ஜி.பி. இசக்கி

அக்குபஞ்சர்

வயது இருபது ப்ளஸ்தான் என்றாலும், முன்னந்தலையில் முடியையே காணவில்லை. அப்படியே முடி இருந்தாலும் சமாதான நிறம்தான். இருபது ப்ளஸ்ஸோடு எண்கள் ஒவ்வொன்றாய் அதிகரிக்க, ரத்தத்தில் சர்க்கரையின் அளவும் போட்டி போட ஆரம்பித்து விடுகிறது.

பிறகு...

சர்க்கரை நோய் என்கிற நீரிழிவைத் தடுக்க வாழ்நாளளவும் மருந்து, மாத்திரை, ஊசி மருந்துகள், டயட் கன்ட்ரோல், வாக்கிங்... ஒருநாள் லீவ் விட்டாலும் உபாதைகள் ஆரம்பித்துவிடும்.

இளநரை, முடி உதிர்வு, நீரிழிவு, மாரடைப்பு என்று இன்றைய இளையதலைமுறையை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பிரச்னைகளுக்கு மருத்துவமே இல்லையா?

''உண்டு'' என்று உறுதியாகச் சொல்கிறார் அக்குபஞ்சர் மருத்துவரான எம். முத்துக்குமார்.

''சர்க்கரை நோய் என்கிற நீரிழிவுக்குக் காரணம் கணையம் கெட்டுப்போய் இன்சுலின் சுரப்பது குறைவதுதான். அதற்காக வாழும்காலம் வரை, மாத்திரைகள் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. கணையத்தோடு தொடர்புடைய அக்குபுள்ளிகள் காதுகளில் இருக்கின்றன. அந்தப் புள்ளிகளைத் தூண்டி விடுவதால், கணையம் தன் வேலையை முறையாகச் செய்ய ஆரம்பித்துவிடும். அக்குபஞ்சர் முறையில் இந்த மருத்துவத்தைத் தொடங்கிய இருபது நாட்களில், வழக்கமாக எடுத்துக்கொள்ளும் மாத்திரையில் பாதி அளவைக் குறைத்து விடலாம். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து நீரிழிவுப் பிரச்னைக்கே 'டாட்டா' சொல்லிவிடலாம்.

சர்க்கரை நோய்க்கு மனஅழுத்தம் அதிகரிப்பதும், உணவுப்பழக்கம் மாறிவருவதும் கூட முக்கிய காரணங்கள். உடல் உழைப்பு குறைந்து, மூளை உழைப்பு அதிகரித்துவிட்டது. வருங்காலத்தை நினைத்து நிகழ்காலத்தை காயப்படுத்திக் கொள்வதால்தான் இவ்வளவு சிக்கல்களும். முழுமையான நல்லதூக்கம் இல்லாமல் போவதால் ரத்தத்தில் வெப்பம் அதிகரித்து விடுகிறது. இது இதயத்தில் உள்ள இரத்த ஓடுபாதைகளில் அடைப்பு ஏற்படுத்தி விடுகிறது. இந்த அடைப்புகளை அக்குபஞ்சர் மூலம் எளிதாக நீக்கி, மாரடைப்பைத் தவிர்க்க முடியும் என்கிறார் டாக்டர் எம்.முத்துக்குமார்.



* எம். முத்துக்குமார்




இளவயதிலேயே தலைமுடி உதிர்வதற்கும் நரைப்பதற்கும் கூட ரத்தத்தில் வெப்பம் அதிகரிப்பதுதான் காரணம் என்கிறார் இவர். இவற்றையும் அக்குபஞ்சரில் எளிதாகக் குணப்படுத்தலாம் என்று நம்

பிக்கை தெரிவிக்கிறார். அறுபது நாட்களில் நூறு சதவிகித மாற்றம் உறுதி என்கிறார்.

தலையில் உள்ள முடிவளர்ச்சியை சிறுநீரக ஓடுபாதையும் உடலில் முளைக்கும் முடிகளை நுரையீரல் ஓடுபாதையும் தீர்மானிக்கின்றன. எனவேதான் உடல் முழுக்கக் கொத்துக் கொத்தாய் முடியிருந்தாலும் தலை மட்டும் சொட்டையாகி விடுகிறதாம்.

'காஸ்மெட்டிக் அக்குபஞ்சர்' என்கிற இந்த முறையின் மூலம் தொப்பையைக் கூட பதினைந்து நாட்களில் குறைக்கலாமாம். ஐந்திலிருந்து ஏழு சென்டிமீட்டர் குறைந்துவிடும். முகச்சுருக்கம், கண்ணுக்குக் கீழ் கருவளையம் எல்லாவற்றுக்கும் இந்த காஸ்மெட்டிக் அக்குபஞ்சரில் தீர்வுகள் உண்டு என்கிறார்.





''எப்படி?'' என்ற கேள்விக்கு எளிமையான விளக்கம் கொடுக்கிறார் டாக்டர் எம். முத்துக்குமார்.

''உடல் முழுவதும் பன்னிரண்டு முக்கியமான ஓடுபாதைகள் இருக்கின்றன. இவற்றின் பணி நுரையீரலில் உருவாகும் உயிர்ச்சத்தை அனைத்து உறுப்புகளுக்கும் எடுத்துச் செல்வது. இதைத் தவிர நூற்றுக்கணக்கான சிறிய ஓடுபாதைகளும் உண்டு.

இந்த ஓடுபாதைகளில் அடைப்பு ஏற்படும்போது, இரு உலோகங்களாலான ஊசியைச் சரியான இடத்தில் குத்தி, அடைப்பை நீக்குவதுதான் அக்குபஞ்சர் முறை.



'அட இந்த முறை நல்லா இருக்கே!' என்று உடனே அக்குபஞ்சர் மருத்துவரைத் தேடி ஓட வேண்டாம்.

வேதனை நீக்கும் வெறும் ஊசிகள்!

நீங்கள் பார்க்கப் போகிற மருத்துவர் உடலியல், உடற்கூறியல், நோயியல் பற்றிப் படித்துப் பட்டம் பெற்றவரா என்று உறுதிசெய்து கொள்ளுங்கள். அவருக்கு அந்தத் தகுதிகள் இருப்பின் தயக்கமின்றி உங்கள் உடலில் ஊசி குத்த அனுமதியுங்கள். மனித உடலில் உள்ள அக்குபுள்ளிகள் மில்லி மீட்டர் அளவிலேதான் இருக்கின்றன. போலி டாக்டரிடம் போய் அவர் தவறான இடத்தில் குத்தி, இசகுபிசகாக ஏதாவது நடந்துவிடக் கூடாது'' என்றும் எச்சரிக்கிறார் எம்.முத்துக்குமார்.

- எஸ்.பி.என்.

* பிரச்சார நாடகம்



3000 நாடகங்கள்...

2006-07 ஆம் ஆண்டில் தாய் - சேய் நலம் மற்றும் மக்கள் நல்வாழ்வு மேம்பாட்டுக்கு மேற்கொண்ட முன்முயற்சிக்கு பிரதமரின் பெருமைக்குரிய தேசிய விருதைப் பெற்றிருக்கிறார் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஷீலாராணி சுங்கத். தற்போது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர் பொறுப்பு வகிக்கும் அவரைச் சந்தித்தோம்...

''1995ம் ஆண்டு தொடங்கி 2006 வரை மக்கள் நல்வாழ்வுத் துறையின் முக்கியப் பொறுப்புக்களை நான் வகித்தபோது, தாய் சேய் நலம் தொடர்பாக பல புதிய முன்முயற்சிகளை மேற்கொண்டோம். குறிப்பாக, பெண் சிசுக்கொலை என்ற மிகக் கொடிய சமூக அவலத்தை முடிவுக்குக் கொண்டுவர தீவிரம் காட்டினோம். பொது மக்களின் உதவியோடு அரசாங்க அதிகாரிகளும் கைகோத்து சமுதாய முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டால் நிச்சயம் வெற்றி கிட்டும் என்பதற்கு அது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

ஓர் அரசாங்க அதிகாரியாக இருந்துகொண்டு என் கண்முன் நடக்கும் அவலங்களைக் களைந்தெறிய நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், அது மிகப்பெரிய குற்றம் என்று நினைத்தேன். பெண் சிசுக் கொலை எந்தெந்தப் பகுதியில் எந்த அளவு உள்ளது என்பதை முதலில் கண்டறிந்துகொண்டோம். அது பற்றி அறிய வரைபடம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. அதன்படி பெண் சிசு மரணங்கள் தமிழ்நாட்டில் மதுரை, தேனியில் தொடங்கி திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், தர்மபுரி வழியாக வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் பகுதி வரை காணப்பட்டது. இது சமூக ஒப்புதலோடு நிகழ்த்தப்பட்டதுதான் மிகப் பெரிய சோகம்'' என்கிறார்.


''1998ல் தமிழ்நாட்டில் நிகழ்த்தப்பட்ட பெண் சிசுக் கொலை 3417. அவ்வாண்டு பெண் சிசுக் கொலைக்கு எதிராக நட

வடிக்கைகள் தொடங்கப்பட்டதிலிருந்து மெல்ல அது 2000ல் 1281 ஆகவும் 2006ல் 64 ஆகவும் குறைக்கப்பட்டது. தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 1998ல் 1002-ஆக இருந்த பெண் சிசுக் கொலை, 2007ல் 33-ஆகக் குறைக்கப்பட்டது.

பெண் சிசுக் கொலை என்பது புற்று நோயைப் போலத்தான். அதை முதலிலேயே களைந்தெறியாவிட்டால் வேகமாக எல்லா இடங்களுக்கும் பரவிவிடும். பெண் சிசுக் கொலையை நடத்திய பல பெண்களிடம் பேச்சுக் கொடுத்தபோது முதலில் வந்த எதிர்க் கேள்வி இதுதான். ''உனக்கென்ன, என் குழந்தையை நான் கொல்றேன்?'' மாமியார், மாமனார் மற்றும் கணவரிடமிருந்து வரும், ஒருவித கட்டாயக் கட்டளையின் பேரினாலும் ஒரு தாய் பெண்சிசுவைக் கொல்லத் துணிகிறாள். கிட்டத்தட்ட 3000 நாடகங்களைப் போட்டோம். பெண் என்பவள் சமுதாயத்தில் பெரும் மதிப்புக்குரியவள் என்பதை மெல்ல வலியுறுத்தினோம்.

மகப்பேறு இறப்பு குறித்த தகவல்களை உடனடியாகத் தெரிவித்தல், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 24 மணி நேர மகப்பேறு கவனிப்பு, நிலைய சேவைகளைக் கண்காணித்தல், பிரசவம் பார்ப்பதில் அரசு சுகாதார நிலையங்களின் பங்களிப்பை அதிகப்படுத்துதல், ஒரு பெண் பிரசவிக்கும்போது அவளுடன் உற்ற பெண்

ஒரு தேசிய விருது!



* முதல்வரிடம் பாராட்டு



துணை உடனிருக்க ஏற்பாடு செய்தது. கிராமச் சுகாதார செவிலியர்களுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட பயிற்சி அளித்து அவர்களது தன்னம்பிக்கையை அதிகப்படுத்தியது. பிறந்த 6 மாதத்திலிருந்து 15 வயதுக்குள் பிளவுபட்ட உதடுகள் மற்றும் பிளவுபட்ட அண்ணக்குறைபாடுகள் கொண்ட 6,066 குழந்தைகளுக்கு இலவசமாகச் சிகிச்சை அளித்தது... இப்படி சில நலத்திட்டங்களைக் கொண்டு வந்து செயலாற்றியதன் மூலம் தமிழ்நாட்டில் பெண்சிசுக் கொலை என்பது பெருமளவில் குறைந்தது. இன்னும் கருவிலேயே பெண் குழந்தைகளை அழிக்கும் அவலம் அழியப் பாடுபடவேண்டும் என்பதுதான் என் விருப்பம்'' என்கிறார் ஷீலா ராணி சுங்கத் ஐ.ஏ.எஸ்.

- நளினிசம்பத்குமார்

என் உறவினர் டாக்டர் லக்ஷ்மி என்னை ஒரு கர்நாடக இசை ஆசிரியரிடம் கூட்டிக்கிட்டுப் போனாங்க. அவங்க பிரபல வித்வான் மகாராஜபுரம் சந்தானத்தோட மகள், பிருந்தா தியாகராஜன். அவங்களைத்தான் நான் அந்த ஆகஸ்ட் 5-ஆம் தேதி பார்த்தேன். டாக்டர் லக்ஷ்மி என்னை அவங்ககிட்ட அறிமுகப்படுத்தினாங்க. 'சரி. நான் என்ன பண்ணணும் உங்களுக்கு?'ன்னு கேட்டாங்க. நான் அவங்ககிட்ட, 'எனக்கும் என் கணவருக்கும் தமிழ் கீர்த்தனைகள் கத்துக்கணும்னு ரொம்ப ஆசை. ஆனா, அதுக்கு ஏத்த சந்தர்ப்பம் முழுசா எங்க ரெண்டுபேருக்குமே இது வரைக்கும் கிடைக்கலை. இப்போ நான் உங்ககிட்ட சங்கீதம் கத்துக்கணும்னுதான் வந்திருக்கேன். நான் ரொம்ப லேட்டுதான். ஆனா, உங்க அறிமுகம் கிடைச்சது நான் செஞ்ச பாக்கியம்'னு சொன்னேன்.

அவங்க ஒண்ணுமே சொல்லலை. கிச்சனுக்குப் போய் காஃபி போட்டு எடுத்துட்டு வந்து கொடுத்தாங்க. அப்புறம் என்கிட்ட 'ஏதாவது ஒரு பாட்டுப் பாடுங்க'ன்னு சொன்னாங்க. நான் 'குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா' பாடினேன். 'நல்லாத்தானே பாடறீங்க? நான் இன்னும் என்ன பண்ணணும்?'னு கேட்டாங்க. 'என்ன மேடம் இப்படி கேக்கறீங்க? எனக்கு நிறைய கீர்த்தனைகளைக் கத்துக்கிட்டு நல்லா பாடணும்னு ஆசையா இருக்கு'ன்னு சொன்னேன். அதுக்கு அப்புறம்தான் அவங்க ஒரு வழியா சமாதானம் ஆகி, எனக்கு கர்நாடக இசையைக் கத்துக் கொடுக்க ஆரம்பிச்சாங்க. அன்னிலருந்து இன்னிக்கு வரைக்கும் நான் அவங்களோட கிளாஸுக்கு ரெகுலரா போய்க்கிட்டு இருக்கேன். நானே அவங்க வீட்டுக்குப் போயிடுவேன்.

அவங்ககிட்ட இசைப்பயிற்சி





ஷோபா சந்திரசேகர்

எடுத்துக்கிட்டதுக்கு அப்புறம்தான் எனக்கு மேடைக் கச்சேரி பண்றதுக்கு தைரியம் வந்துச்சுன்னு சொல்லலாம்.

என்னோட முதல் ஆல்பத்தை வெளியிடலாம்னு தோணிச்சு. என் கணவர் கிட்டயும் விஜய்கிட்டயும் பேசினேன். அவங்களும் சரின்னு சொன்னாங்க. 2005-ம் வருஷம் என்னோட முதல் ஆல்பம் 'சமர்ப்பணம்' ரிலீஸ் ஆச்சு. அந்த ரிலீஸ் ஃபங்க்ஷனை விஜய்தான் முன்னால நின்னு நடத்தினான். அதுல நிறைய பாரதியார் பாடல்களைப் பாடியிருந்தேன். அந்த ஆல்பத்தை காஸ்மிக் மியூசிக் வெளியிட்டிருந்தாங்க.

இரண்டாவது இசை ஆல்பமான 'ஆனைமுகனும் ஆறுமுகனும்' ஆல்பத்தை வெளியிட யோசிச்சப்போதான், ஏவி.எம். பாலசுப்ரமணியம் சார் நினைவுக்கு வந்தார். அவர்கிட்ட போய் பேசினோம். 'ரொம்ப நாள் கழிச்சு ஏவி.எம்.லிருந்து உங்க மூலமாக ஒரு பக்திப் பாடல் ஆல்பம் வெளியிட வாய்ப்பு வந்திருக்கு. தாராளமா வெளியிடலாம்'னு சொல்லிட்டாரு. அந்த ஆல்பம் ரிலீஸ் ஆனப்பவும் விழா ரொம்ப பிரம்மாண்டமாக நடந்தது. வீணை காயத்ரி, எம்.எஸ்.வி.சார், பாலசந்தர் சார் - இப்படி பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் அந்த விழாவுக்கு வந்திருந்தாங்க. அந்த விழாவுலயும் விஜய் கலந்துக்கிட்டான்.

என்னோட மூணாவது இசை ஆல்பத்தை விஜய்யோட 'போக்கிரி' படத்தின் 175-ஆவது நாளன்னிக்கி, நேரு உள் விளையாட்டரங்கத்துல ஃபைவ் ஸ்டார் ஆடியோ



18

என் செல்ல தளபதி!

ரிலீஸ் பண்ணினாங்க. இந்த மூணு ஆல்பத்துக்கும் விஜய் கூட இருந்தான். நாலாவது ஆல்பத்தை ரிலீஸ் பண்றப்போ அவனால வர முடியல.

என்னோட நாலாவது ஆல்பம் 'குருராஜ சரணம்'. முழுக்க முழுக்க ராகவேந்திர சுவாமிகள் மேல பாடின கீர்த்தனைகள். 'வாணி ஆடியோ' அந்த ஆல்பத்தை வெளியிட்டிருந்தாங்க. அதை ரஜினி சார்

ரசிக்க பாட்டு!

ரிலீஸ் பண்ணினா நல்லா இருக்கும்னு எனக்குத் தோணிச்சு. ஏன்னா, ரஜினி சார் தீவிரமான ராகவேந்திர பக்தர். அவருக்கு ஃபோன் பண்ணினேன். அவர் ரொம்ப சந்தோஷமா ஒத்துக்கிட்டார். அந்த ஆல்பம் ரிலீஸ் ஃபங்க்ஷன் மார்ச் மாதம், ஒன்பதாம் தேதி ரொம்ப சிம்பிளா, அதே சமயம் ரொம்ப பிரமாதமாக ரஜினி சார் வீட்லயே நடந்தது. அன்னிக்கு ராகவேந்திர சுவாமிகள் சன்யாசம் வாங்கின தினமாம். ரொம்ப விசேஷமான தினம். எனக்கு ரொம்ப நிறைவா இருந்தது.

அன்னிக்கு ரஜினி சார் வீட்டுக்கு நடிகர் லாரன்ஸ் ராகவேந்திராவும் வந்திருந்தார். அவரும் ராகவேந்திரரின் பக்தர் இல்லியா? அன்னிக்கு அந்த ஆல்பம் ரிலீஸ் பண்ற நிகழ்ச்சி ஒரு பத்து நிமிஷம்தான் ரஜினி சார் வீட்ல நடந்தது. ஆனா, ரஜினி சார் என்னை ஹால்ல உக்கார வச்சு ஒரு முக்கால் மணி நேரத்துக்குப் பேசிக்கிட்டு இருந்தார். அன்னிக்கு விஜய்யும், விஜய் குடும்பமும் ஊர்ல இல்லை.

நான் கிளம்பறப்போ ரஜினி சார்கிட்ட, 'பாட்டைக் கேட்டுட்டு எப்படி இருந்துச்சுன்னு கண்டிப்பா சொல்லணும்'னேன். சரின்னார். சொன்ன மாதிரி அன்னிக்கு ராத்திரியே ஃபோன் பண்ணினார். 'ஷோபாஜி! உங்க குரல் பேசும்போது ஒரு மாதிரியா இருக்கு. பாடும்போது ரொம்ப இனிமையா இருக்கு. இவ்வளவு நல்லா பாடுவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை'ன்னு சொன்னார். அந்த ஆல்பத்துல 'இதயம் உன்னை'ன்னு ஒரு பாட்டு இருக்கு. அந்தப் பாட்டு ரொம்பப் பிடிச்சிருக்குன்னு சொன்னார்.

விஜய், நான் பாடின ஒவ்வொரு சி.டி.யையும் கேட்டுட்டு கருத்து சொல்வான். குறிப்பா அவனுக்கு எந்தப் பாட்டு பிடிச்சிருக்குன்னும் சொல்லுவான். என்னோட குரு பிருந்தா தியாகராஜன்கிட்ட



விஜய் வின்னர்ஸ் 15

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. கே.பாண்டிச் செல்வி, மதுரை -1
2. ஆர்.பிரதீபன், லால்குடி
3. வெ.ராம்குமார், வேலூர்
4. வ.விக்னேஷ், திருச்சி
5. எஸ்.ஷாலினி, தருமபுரி
6. எஸ்.அபிராமிபூநீ, ஈரோடு
7. க.மோகன், திருவண்ணாமலை
8. பி.ஏ.அரவிந்தராமன், தஞ்சாவூர்
9. பி.கீர்த்தி, குடந்தை
10. க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

- *முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.*
- *குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.*

அப்பப்போ பேசுவான். 'அம்மாவை நல்லா பாட வச்சிருக்கீங்க'ன்னு பாராட்டு வான். அவங்களுக்குப் பிறந்த நான் வந்தா, ஃபோன் பண்ணி விஷ் பண்ணுவான்.

விஜய் அவன் நடிச்ச 'பத்ரி' படத்துல ஒரு பாட்டு பாடியிருந்தான். 'ஏ பாப்பா நீ கொஞ்சம் நில்லு'ங்கற பாட்டு. அந்த பாட்டு ரெக்கார்ட் ஆன உடனே ஒரு கேஸட்ல ரெக்கார்ட் பண்ணிக்கிட்டு என்னைத் தேடி வந்தான். அப்போ நான் ஒரு மெடிடேஷன் கிளாஸ்ல இருந்தேன். அது ஒரு கல்யாண மண்டபத்துல நடந்துக்கிட்டு இருந்தது.

'அம்மா! ஒரு பத்து நிமிஷம் வர முடியுமா?'ன்னு கேட்டான். நான் 'எங்க?'ன்னு கேட்டேன். 'காருக்கு'ன்னான். போனேன். முழுப்பாட்டையும் எனக்குப் போட்டுக் காட்டினான். 'எப்பிடி இருக்கு? ஏதாவது குறை இருந்தா சொல்லுங்க. இப்பவே சரி பண்ணிக்கறேன்'னு சொன்னான். நான் எப்பவுமே முகதாட்சண்யம் பாக்காம மனசுக்குப் பட்டதைச் சொல்லிடுவேன். அன்னிக்கும் அப்படித்தான் சொன்னேன். 'ரொம்ப நல்லா பாடியிருக்கே விஜய். இந்தக் காலத்துக்கு ஏத்த மாதிரி ரொம்ப நல்லா இருக்கு. இன்னும் கொஞ்சம் பிராக்டீஸ் பண்ணினா ரொம்ப நல்லா வரும்.'



விஜய் ரொம்ப சந்தோஷமா கிளம்பிப் போனான். இத்தனைக்கும் அவன் முறைப்படி இசை கத்துக்கிட்டதில்ல. கேள்வி ஞானத்துலதான் பாடறான். ஆனா, அவனோட பிள்ளைகளுக்கு முறைப்படி சங்கீதம் கத்துக்குடுக்கணும்னு அவனுக்கு ஆசை இருக்கு.

எத்தனையோ மேடைக்கச்சேரிகள் பண்ணியிருந்தாலும், ஒரு கூட்டத்துல நான் ஒரு பிரார்த்தனைப் பாடல் பாடினேன். அதை என்னால என்னிக்குமே மறக்க முடியாது. அது நடந்தது ஜூலை 25-ஆம் தேதி.

செயின்ட் பிரிட்டோஸ் அகாடமின்னு ஒரு ஸ்கூல் இருக்கு. என்னோட உறவினர் சேவியர் பிரிட்டோதான் அந்த ஸ்கூலோட கரஸ்பாண்டன்ட். அவர்தான் விஜய்யோட முதல் நாலு படத்தையும் தயாரிச்சவர். அவரோட துணைவியார் விமலா பிரிட்டோ. ஒரு நாள் அவங்ககிட்ட இருந்து ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. 'எங்க ஸ்கூல்ல ஒரு கூட்டம் நடக்குது. ஒரு வி.ஐ.பி. கலந்துக்கறார். உங்களால பிரேயர் சாங் பாட வர முடியுமா?'ன்னு கேட்டிருந்தாங்க. நான் உடனே 'யார் அந்த வி.ஐ.பி?'ன்னு கேட்டேன். சொன்னாங்க. உடனே ஒத்துக்கிட்டேன். அந்த வி.ஐ.பி. முன்னால பாடறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும்னு நினைச்சேன். யார் அந்த வி.ஐ.பி.? அடுத்த வாரம் சொல்றேன்.

எழுத்து வடிவம்:

பாலுசத்யா


ச.ந.கண்ணன்



அரசியலையும் ஒலிம்பிக்கையும் அவ்வளவு சீக்கிரம் பிரித்துவிட முடியாது. அரசியல் காரணங்களைச் சுட்டிக்காட்டி சில ஒலிம்பிக் போட்டிகள் நிறுத்தப்பட்டுள்ளன. முக்கிய நாடுகள் பங்கேற்காமல் ஒலிம்பிக்கின் விசேஷத்தைக் குறைத்திருக்கின்றன. போதை மருந்து உட்கொள்ளல், இன ஏற்றத்தாழ்வுகள் போன்ற சமூக அவலங்கள் எல்லாம் ஒலிம்பிக் போட்டிகளின்போது எதிரொலித்துள்ளன. இதில் சீனா அனுபவிக்கப்போகும் தொல்லைகள், சிக்கல்கள் என்ன என்பதுதான் போட்டி தொடங்கும் முன்பு இருந்த பெரிய கேள்வி.

ஆனால், அரசியல் வேறு ஒலிம்பிக் வேறு என்று அழகாகப் பிரித்துக் காட்டியிருக்கிறது சீனா. மேலே சொன்ன அத்தனை பிரச்னைகளையும் அது எதிர்கொண்டாலும், போட்டி ஆரம்பமான பிறகு எல்லாமே புஸ்வாணமாகிப் போய்விட்டன. குடும்ப விழா போல எண்ணி மக்கள் தினமும் ஸ்டேடியத்துக்கு வருகை தந்தார்கள். இந்தச் சூழலால் வீரர்கள் உற்சாகமானார்கள். இதற்கு முன்னால் நீடித்துவந்த அத்தனை சாதனைகளும் முறியடிக்கப்பட்டு புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

நினைத்துப் பார்த்துக்கொள்வதுபோல நிறைய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. எட்டு தங்கம் வாங்கிய பெல்ப்ஸ் பற்றி எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது அவரது சாதனைகள் குறித்து அல்ல. 'அவருடைய ரகசியக் காதலி யார்?' என்றுதான் ஆளுக்கு ஓர் ஊகத்துடன் கட்டுரைகள் எழுதுகிறார்கள். மூன்று உலக சாதனைகள் படைத்த உசைன் போல்ட்டை வரவேற்க புதிய கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார் ஜமைக்காவின் பிரதமர். இதனிடையே நடப்பு சீன உலக அழகியை ஜமைக்காவுக்கு





ஜெயித்துக் காட்டிய சீனா!

வருமாறு அழைத்திருக்கிறார் உசைன் போல்ட். 'இனிமேலாவது எங்கள் நகரின் சாலைகள் அழகு பெறட்டும்' என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்கள் போல்ட்டின் உறவினர்கள். பெருகுவேயைச் சேர்ந்த லெர்ன் ஃபிரான்கோ என்கிற ஜாவலின் வீராங்கனையை எல்லா கேமராமேன்களும் விடாமல் படம் பிடித்துக்கொண்டிருந்தார்கள். பார்ப்பதற்கு வீராங்கனை போலில்லாமல் ஹாலிவுட் நடிகை கேத்ரீனா ஜீடா ஜோன்ஸ் போல அரங்கில் எல்லோரையும் தன் பக்கம் ஈர்த்துக்கொண்டிருந்தார் அவர். ஆனால், விளையாட்டில் பின்தங்கிப் போனார்.

இந்தியாவுக்குப் பதக்கம் வாங்கிக் கொடுத்த அபினவ் பிந்திரா, சுஷில்குமார், விஜேந்தர் ஆகிய மூவரும் அதற்கு முன் எந்த ஒரு வெளிச்சத்தையும், நிதி உதவியையும் பார்க்காதவர்கள். எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் அர்ப்பணிப்பின் மூலமாக இதைச் சாத்தியமாக்கியிருக்கிறார்கள். மூவருக்கும் இந்திய அரசு நிறுவனங்கள், பதக்கம் வாங்கிய அதே நாளில் லட்சக்கணக்கில் பரிசுத்தொகையை வாரி வழங்கியபோது, இந்தியாவுக்கு முதல் தனி நபர் பதக்கம் (வெண்கலம்) வாங்கித் தந்த மல்யுத்த வீரர் ஜாதவ்த்தின் மகன் அளித்த பேட்டி அதிர்ச்சியைத் தூண்டியது. ஹெல்சின்கி ஒலிம்பிக்ஸ் போட்டிக்குச் செல்ல பணம் இல்லாமல் ஊர் மக்களிடம் 25 பைசா, 50 பைசா என்று கடன் வாங்கி பிறகு போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார் ஜாதவ். பதக்கம் வாங்கிவந்த பிறகும் அரசிடமிருந்து நயா பைசா வெகுமதி கிடைக்கவில்லை. அதே உழைப்பு, அதே பதக்கம். ஆனால் கௌரவம் மட்டும் காலத்துக்கேற்றாற் போல் மாறுகிறது.

அடுத்த ஒலிம்பிக் போட்டி (2012) லண்டனில் நடக்க இருக்கிறது. அமெரிக்கா, சீனாவைவிட அதிக பதக்கங்கள் வாங்கியிருந்தாலும் தங்கப்பதக்க எண்ணிக்கையில் அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது சீனா. அடுத்த ஒலிம்பிக்கில் அமெரிக்கா வீறு கொண்டு எழும் என்பதில் சந்தேகமேயில்லை. இந்தியர்கள் அதிகம்பேர் வாழும் பகுதி என்பதால் லண்டனில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. ○

ஒலிம்பிக் கொடியுடன் லண்டன் மேயர்...



* பெல்ப்ஸ்



* லெர்ன் ஃபிரான்கோ





கிராமக் காதலன்

கோவையிலிருந்து முப்பது கி.மீ. தொலைவில் உள்ளது வாகராயம்பாளையம். அதனைச் சுற்றிலும் சுமார் முப்பது கிராமங்கள். அத்தனை கிராம மக்களும் எளிதில் வந்து மருத்துவம் பெறும் இடம் வாகை மருத்துவமனை. 'கட்டாய கிராம சேவையை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் செய்யவேண்டும்' என்ற கருத்து எழுந்த போது போர்க்கொடி பிடித்து எதிர்த்த சூழல் நம் கண்முன் நிற்கையில், வசதியான வாய்ப்புகள் தேடி வந்தபோதும் அதை உதறிவிட்டு கிராமத்திலேயே தனது வேலையை சேவையாக மாற்றியுள்ளவர் ராமர்.

''நான், என் காலேஜ்மேட் சுனிதா. எங்களுக்கு இரண்டு வருட ஜூனியர் சுரேஷ் ஆகியோர் கோர்ஸ் முடித்த பின்னர், கிராம மருத்துவப் பணியில் எங்களை ஈடுபடுத்திக் கொள்வதென அப்பொழுதே முடிவெடுத்திருந்தோம். எனக்கும் சுனிதாவுக்கும் இடையில் காதல் மலர்ந்தது. மருத்துவக் கல்லூரியில் தேர்ச்சி பெற்று வெளிவந்தவுடன், திருமணமான உடனேயே கிராம மருத்துவ சேவைக்காக வாகராயம்பாளையம் கிராமத்தில் முழு நேர மருத்துவமனையினைத் துவங்கினேன். எங்களுடன் பின்னர் வந்து இணைந்து கொண்டவர் டாக்டர் சுரேஷ்!'' எனக் கூறும் டாக்டர் பி.கே.ராமருக்கு வயது முப்பத்தைந்து.

நகரங்களில் இருக்கும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள அத்தனை வசதிகளும் எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், லேப் வசதி, ஜெனரேட்டர், மருந்தகம், இருபது படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் பிரிவு, லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை என அத்தனை வசதிகளும் இடம் பெற்றுள்ளன இந்தக் கிராமத்தின் 'வாகை மருத்துவ மனை'யில்.

''எங்கள் மூவருக்குமே இந்தக் கிராமத்து மருத்துவ சேவை முழுமையான மனநிறைவைத் தந்துவருகிறது. அவர்கள் மருத்துவமனை துவங்கிய பிறகு, இங்கு ஒரு டாக்டராக பணியில் சேர்ந்து





* சுனிதா



* ராமர்



* சுரேஷ்

கொண்டேன். கிராம மக்களிடையே மருத்துவ விழிப்புணர்ச்சிக்காக, நிறைய இலவச மருத்துவ முகாம்கள் நடத்தி வருகிறோம். கிராமத்து மக்களின் ஒரு சாரார் மத்தியில், நகர மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதே ஒரு 'கௌரவம்' என்கிற அபிப்ராயம் இருந்து வருகிறது. இருந்த போதிலும் எங்கள் மருத்துவமனையை நாடி வந்து சிகிச்சை பெற்று நலம் அடைந்து செல்லும் கிராமவாசிகள் பெரும் பாலோர்!'' என்கிறார் டாக்டர் சுரேஷ். வயது 32.

''எனக்கும் என் கணவருக்கும் மனதார பிடித்துப் போகவே, இந்த கிராமத்து மருத்துவப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறோம். டி.ஜி.ஓ. தேர்ச்சி பெற்ற பின்னர், அன்னூர் அரசு மருத்துவ மனையில் மகப்பேறு மருத்துவராகப் பணியில் இருந்து வருகிறேன். வாகை மருத்துவமனைக்கு, வருகை மருத்துவ ராகவும் வந்து செல்கிறேன்!'' எனக் கூறுகிறார் டாக்டர் சுனிதா ராமர்.

''நான் பிறந்து வளர்ந்து படித்தது எல்லாமே ஒரு கிராமத்தில்தான். என் அப்பா அம்மா இருவரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். தேயிலைத் தோட்ட கூலித் தொழிலாளிகள். தங்களது பிள்ளை களையாவது நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்று ரொம்பவும் கஷ்டப்பட்ட வர்கள். பொள்ளாச்சி அருகே ஏ.நாகூர் கிராமத்தில் தமிழ் வழிக்கல்விதான் படித்தேன். அரசு கட்டணச் சலுகையில் கோவை மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி டாக்டர் ஆகி, கடந்த ஏழு ஆண்டுகளாக வாகராயம் பாளையம் கிராமத்தில் மருத்துவமனை நிறுவி, குறைந்த கட்டணங்களில் கிராம மக்களுக்கென மருத்துவப் பணியாற்றி வருகிறோம்!'' என்கிறார் இந்த கிராமக் காதலன் டாக்டர் சி.கே.ராமர்.

செய்தியும் சித்திரங்களும் :

ஸ்ரீரங்கம் திருநாவு

உத்தமபுத்திரன்

தமிழக காங்கிரஸ் கூட்டணி என்று எழுதப்பட்ட படகில், கால்மேல் கால் போட்டபடி ஜாலியாக அமர்ந்திருக்கிறார் கலைஞர். தங்கபாலு படகை ஓட்டிக்கொண் டிருக்க, அருகே ஜி.கே.வாசன், முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி, திருமாவளவன் மற்றும் பலர் இருக்கின்றனர்.

கலைஞர்: *(காகித ஓடம் பாடலின் மெட்டில் பாடுகிறார்)* காங்கிரஸ் ஓடம் கடலலை மீது போவதுபோலே நாங்களும் போவோம்.

தங்கபாலு: என்ன தலைவரே... ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போல...

கலைஞர்: பின்னே தி.மு.க. முப் பெரும் விழாவுல எனக்கு 'பெரியார் விருது' கொடுக்கப் போறாங்களே...

ஜி.கே.வாசன்: உங்க விழாவுல உங் களுக்கே விருது கொடுக்கப் போறாங்களா? நீங்க ஆசைப்பட்டா அகில உலக விருதுகள் எல்லாம்... நீங்களே எடுத்துக்க வேண் டியதுதானே...

கலைஞர்: *(உடனே கவிதை பாடு கிறார்)* எடுத்துக்கொள் எனச் சொன்னால் பெறுவதல்ல... பேரும், புகழும் தருவது.... ஆண்டு கழித்த அரை நூற்றாண்டை வாழ்ந்து கெடுத்த வஞ்சகர் கூட்டம்...

த.பாலு: யோவ்... வாசன், சும்மா இருக்க மாட்டியா... தலைவர் கோபத்துல கவிதையால திட்ட ஆரம்பிச்சுட்டார் பாரு... இப்பவெல்லாம் யாரையும் நேர டியா திட்றதில்லை... கோபம் வந்தா உடனே கவிதை எழுத ஆரம்பிச்சுடறார்.

கலைஞர்: என்ன அங்க குசுமுசா?

த.பாலு: அதாவது தலைவரே... நம்ம படகைவிட்டுப் போன கம்யூனிஸ்டுங்க... காங்கிரஸ் ஒரு மூழ்குகிற படகுன்னு தெருத்தெருவா கோஷம் போடப் போறாங் களாம்...

கி.சாமி: மூழ்குகிற படகு மட்டு மில்ல... நொண்டிக் குதிரைன்னும் சொல் றாங்க.

த.பாலு: (கடுப்புடன்) ஆமா அது ரொம்ப முக்கியம்...

கலைஞர்: கம்யூனிஸ்டுகள் மீண்டும் 'கம்'யூனிஸ்டுகள்தான் சும்மா நீந்திப் பார்க்



ஆட்கள் தேவை

நடுக்கடலில் படகு தள்ள...

கப் போயிருப்பாங்க.

வாசன்: ஏற்கனவே... ஒரு மருத்துவர் தானா விழுந்து தத்தளிச்சிக்கிட்டு... கரையேற கொம்பு கெடைக்குமான்னு தேடிக்கிட்டிருக்கார்.

கலைஞர்: அவர் ஒண்ணும் தானா விழலை. நாங்க தான் தள்ளிவிட்டோம். கப்பல்ல இடமில்லைன்னு சொன்னதும்... இப்படி பல்டி அடிச்சிட்டாங்களே...

(அப்போது கரையிலிருந்து பேரிச்சம் பழத்துக்கு சயம் பித்தளை படகு வாங்கறதேய்...' என்று குரல் வர...)

வாசன்: பாருங்க... தலைவரே... யாரோ நம்ம படகைப் பேரிச்சம்பழத்துக்குக் கேக்கறாங்க.

கலைஞர்: (கடுப்புடன்) வேறு யாருமில்ல... வைகோதான்... எப்பவுமே அவர் கால் நம்ம படகுல படவே கூடாது. திடீர்னு படகுல என்ஜின் கோளாறு ஆயிடுச்சுன்னா.. எறங்கித் தள்ள ஆள் வேணுமில்லையா...?

த.பாலு : (யோசித்தபடி) தலைவரே... பேசாம... படகு தள்ள புதுசா கட்சி ஆரம்பிச்சிருக்கிற சிரஞ்சீவியைப் படகுல ஏத்தினா என்ன?

கலைஞர்: ஐயய்யோ... நடிகரா...? வேணாம்பா.... ஏற்கெனவே ஒரு நடிகரால நான் பட்ட வேதனையை இன்னும் மறக்கமுடியாமத் தவிக்கிறேன்.

த.பாலு: அப்புறம்... இன்னொரு விஷயம் தலைவரே. இன்னும் தியாகி பென்ஷன் வாங்கிக்கிட்டிருக்கிற கட்சித் தலைவர்களை மாத்திட்டு இளைஞர்களுக்குப் பொறுப்பு கொடுக்கப் போறேன். நான் ஐயா கர்மவீரர் காமராஜர் போட்டுக் கொடுத்த ரூட்டுல படகைச் செலுத்திக் கரை சேர்க்காம விட மாட்டேன்.

(அப்போது... கலைஞர் அவசரமாக செல் எடுத்துப் பேசுகிறார். பின் தங்கபாலு காதில் வைக்கிறார்.)

த.பாலு: (பதட்டத்துடன்) சொல்லுங்கஜி... அப்படியாஜி... இப்பத்தானே ஜி படகைக் கொடுத்தீங்க ஜி... படகு நடுக்கடல்ல ஜி... அச்சாஜி!

கலைஞர்: (புன்னகைத்தபடி) என்னய்யா... பெரிய பட்ஜெட்ல படம் எடுத்து ஊத்திக்கிட்ட புரொடியூசர் மாதிரி ஆகிட்டே?

த.பாலு: தலைவா.... என்னைக் காப்பாத்துங்க... படகை ஓட்ட வேற ஆள் போடப் போறாங்களாம்!

கலைஞர்: இங்க பாருங்கய்யா... படகு மட்டும்தான் உங்களோடது. அது எங்க போகணும், எங்க நிக்கணும், எங்க இறங்கித் தள்ளணும், யாரை ஏத்தணும் எல்லாம் முடிவு செய்ய வேண்டியவன் நான்தான். தெரியுதா... வேணுமுன்னா உன் சோகம் நீங்க ஒரு கவிதை சொல்லட்டுமா?

(மூவரும் 'ஐயய்யோ' என்று காதைப் பொத்திக்கொண்டு கடலில் குதிக்கின்றனர்.)

ஆழ்வார்கள் பன்னிருவருள், பெருமானுடைய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவதற்காகவே பெரியாழ்வார் அவதரித்தார். அவருடைய பெண்பிள்ளையாக ஆண்டாள் அவதரித்தாள் என்று பார்த்தோம். இந்த ஆண்டாள், அரங்கனாலே வரிக்கப்பட்டு, அவனையே திருமணம் புரிந்துகொண்டாள். அவ்விருவரின் மணக்கோலத்தை திருவரங்கத்திலே கண்டு ஸேவித்த பெரியாழ்வார், அதே கோலத்தில் அவர்களை ஸ்ரீவில்லிபுத்தூரிலும் கண்டுகளிக்க ஆசைப்பட்டு, பெருமாளிடம் வேண்டினார்.

பெரியாழ்வாரின் வேண்டுகோளுக்கு இசைந்த அரங்கனும் ஆண்டாளை அழைத்துக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளினார். அங்கே குடியிருக்க வீடு வேண்டுமே? பெரியாழ்வார், தாம் இருந்த திருமாளிகையையே மகளுக்கு ஸ்ரீ(ஸ்த்ரீ)தனமாகக் கொடுத்தார். இன்றைக்கும், பெரியாழ்வார் வாழ்ந்திருந்த வீடேதான் ஆண்டாள் - ரங்கமன்னார் சன்னிதியாக ஸ்ரீவில்லிபுத்தூரில் விளங்குகிறது.

ஆண்டாள் ரங்கமன்னார் சன்னிதியில் நடுவிலே ரங்கமன்னார். அவருக்கு

தென்திசை உயர்ந்தது!



20 கண்ணனைத் தேடி...

வலது பக்கத்தில் ஆண்டாள், இடது பக்கத்தில் கருடன் என்று மூவருமாகச் சேர்ந்து காட்சி தருகிறார்கள்.

அதோடு மட்டுமில்லாமல், இந்த சன்னிதிக்கு நடுவிலேயே ஒரு கண்ணாடிக் கிணறு உள்ளது. சிறுமி ஆண்டாள், வட பெருங்கோயிலுடையானுக்கு தொடுத்த மாலையை அணிந்துகொண்டு, கையிலே குலுங்கும் வளையல்களை அணிந்து கொண்டு (காரை பூணும், கண்ணாடி காணும், தன் கையில் வளை குலுக்கும்... என்ற பாசுரத்தின்படி) இந்தக் கண்ணாடிக் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்து, தான் அழகாக இருக்கிறோமா? என்று பார்ப்பாளாம்! பெருமானுக்குத் தகுதி உடையதா தன் அழகு என்று பார்த்துக்கொள்வாளாம்! அவளுடைய சன்னிதிக்கு நேரே தட்டொளி இருப்பது போலே, இந்தக் கண்ணாடிக் கிணறும் உள்ளது.

இந்த ஆண்டாள் - ரங்கமன்னார் சன்னிதியிலே இடது பக்கத்தில் இடம் பெற்றுள்ள கருடாழ்வாரின் அம்சமாகவே தான் இத்தலத்தில் பெரியாழ்வார் ஆனி மாதம் ஸ்வாதி நக்ஷத்திரத்தன்று அவதரித்தார்.

இம்மூவரையும் ஒரு சிம்ஹாசனத்தில் ஸேவிக்கும்போது, பிரணவ ஸ்வரூபமே எழுந்தருளியது போலிருக்கிறது! 'முப்புரி ஊட்டிய திருத்தலம்' என்று ஸ்ரீவில்லிபுத்தூரரைச் சொல்வார்கள். ஓம் என்னும் 'ப்ரணவம்' என்பது அ- உ- ம என்கிற மூன்று எழுத்துக்களால் ஆனது. இவற்றிலே அ - பரமாத்மா திருமாலைக் குறிக்கும்; ம - ஜீவாத்மாவாகிற அடியவனைக் குறிக்கும்; உ - நாச்சியார் பிராட்டியைக் குறிக்கும். இந்த மூன்றுபேரும் சேர்ந்துதான் இந்த ஆஸ்தானத்திலே இருக்கிறார்கள். அ - பகவான் ரங்கமன்னார், உ - பிராட்டி ஆண்டாள், ம - அடியவன் ஜீவாத்மா, கருடன். இந்த மூவரும் பிரணவமே உருக்கொண்டு எழுந்தாற்போல் பொலிகிறார்கள். இவ்வூருக்கு இதுவும் ஒரு தனிச்சிறப்பு.

"................மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயில் -
இனங்கள் கூவின காண்...

என்ற ஆண்டாள் பாசுரத்திலே குறிப்பிடப்பட்ட, மாதவிக் கொடியின் பந்தல், இதே ஸ்ரீவில்லிபுத்தூரிலே இன்றைக்கும் ஆண்டாள்-ரங்கமன்னார் சன்னிதி அருகே



வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்

காணக் கிடைக்கிறது. இந்த சன்னிதியானது பெரியாழ்வாரின் இல்லம் என்பதைப் பார்த்தோம். இங்குள்ள சாளரங்கள், கண்ணாடிகள், மேல்கட்டுகள் எல்லாவற்றையும் பார்க்கிறபோது, ஒரு கோயிலின் அமைப்பு என்பதைக் காட்டிலும் ஒரு வீட்டின் அமைப்பாகவே காட்சி தருகின்றது.

இவ்வூரின் திருமுக்குளத்தின் கரையிலே ஆண்டாளுடைய எண்ணெய்க் காப்பு உத்ஸவ மண்டபம் அமைந்திருக்கிறது. இந்த உத்ஸவமே மிக ஆச்சர்யமான உத்ஸவம். மார்கழி மாதத்தில் கடைசி ஏழு நாட்கள் நடைபெறுகிறது.

எல்லா ஊர்களிலும் மார்கழிமாதம் முப்பது நாட்களும் உத்ஸவம் உண்டு. ஆனால், ஆண்டாள் பிறந்து, பாடிய இவ்வூரில் மார்கழி மாதம் கடைசி ஏழு நாட்களுக்கு மட்டுமே உத்ஸவம்.

இந்த உத்ஸவத்தின்போது, ஆண்டாள் மூடுபல்லக்கிலே தன் சன்னிதியிலேயிருந்து வெளியே எழுந்தருள்கிறாள். பெரிய பெருமாள், அதாவது வடபெருங்கோயிலுடையானுடைய சன்னிதியின் கோபுர வாயிலில் வந்து நின்றுகொண்டு, பெருமாளிடத்திலே:

"மாலே! மணிவண்ணா! மார்கழி நீர் ஆடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்;
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன்
பாஞ்சசன்னியமே



இவர் பக்தியைக் கண்டு ஆண்டாள், "உமக்காக ஒரு நாள் அதிகப்படியாக இந்த உத்ஸவத்தைக் கண்டருள்கிறோம்" என்று உவந்து அருளினாள்





போல்வன சங்கங்கள்
போய்ப்பாடு உடையனவே;
சாலப் பெரும் பறையே,
பல்லாண்டு இசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே,
விதானமே;
ஆலின் இலையாய்! அருள் - ஏலோர்
எம்பாவாய்''

என்று இத்தனையையும் வேண்டுகிறாள். உடனே அந்த ஆலின்இலையான், வடபத்ரசாயி, அந்த ரங்கநாதன் சங்கம், பறை முதலான இசைக்கருவிகள் மற்றும் விளக்கு, கொடி முதலாக அவள் கேட்பவை அனைத்தையும் கொடுப்பதாக ஐதிஹ்யம்.

ஆகையாலே ஆண்டாள் பல்லக்கு அவள் சன்னிதியிலேயிருந்து புறப்பட்டு வடபெருங்கோயிலுடையான் சன்னிதிக்கு வருகிற வரைக்கும் எந்த வாத்திய ஒலியும் இருக்காது. பெருமாளிடம் ஆண்டாள் வேண்டியதைப் பெற்றுக்கொண்டு, இசையுடன் இச்சன்னிதியிலேயிலிருந்து புறப்பட்டு எண்ணெய்க் காப்பு உத்ஸவ மண்டபத்துக்கு வந்து சேர்கிறாள். இது பகல் பத்துமணிக்குத் துவங்கி, மதியம் வரை ஆகிவிடும். இங்கே உள்ளே பெரிய மண்டபம், வெளியே சிறிய மண்டபம். உள்மண்டபத்திலே ஆண்டாளுக்கு எண்ணெய்க் காப்பு நடைபெறும்.

பெரிய ராணிகள், பட்டமகிஷிகள் நீராடச் செல்கிறபோது, அவர்களுக்குப் பல் துலக்கிவிடுவது, நாக்கு வழித்துவிடுவது போன்ற உபசாரங்கள் எல்லாம் செய்வார்கள். அதேபோல் இங்கே ஆண்டாளுக்கு எல்லா உபசாரங்களும் நடைபெறும். எண்ணெய்க் காப்பும் சாற்றிக்கொள்கிறாள். பிறகு வெளிமண்டபத்துக்கு எழுந்தருள்கிறாள். இங்கே, ஐந்தரை மணி அளவில் அபிஷேகம், திருமஞ்சனம் நடைபெறும். இந்த நீராட்டு உத்ஸவம் வெகு காலத்துக்கு முன்பிருந்தே நடந்துவருகிறது.

ஸ்ரீ மணவாள மாமுனிகள் என்னும் ஆசார்யர் 1371 முதல் 1443 வரை எழுந்தருளியிருந்தார். இவர் பெரிய ஜீயர் என்று கொண்டாடப்பட்டார். நாம் இப்போது ஸ்ரீவில்லிபுத்தூரிலே கொண்டாடும் மார்கழி எழு நாள் உத்ஸவத்தை ஸேவிப்பதற்காக, தை மாதம் ஒன்றாம் தேதி இவர் வந்திருக்கிறார். இவர் வந்து சேர்வதற்குள் எழு நாள் உத்ஸவமும் முடிந்துபோயிருந்



தது. ஆனால், இவர் பக்தியைக் கண்டு ஆண்டாள், ''உமக்காக ஒரு நாள் அதிகப்படியாக இந்த உத்ஸவத்தைக் கண்டருள்கிறோம்'' என்று உவந்து அருளினாள். இன்றைக்கும் பெரிய ஜீயர் உத்ஸவமாக, தை மாதம் ஒன்றாம் தேதியும் இதே நீராட்ட உத்ஸவம் நடக்கிறது. ஆனால், மணவாள மாமுனிகள் ஸேவித்ததற்கு இணங்க சில வேறுபாடுகள் உண்டு. எண்ணெய்க்காப்பு, நீராட்டம் எல்லாமே வெளியில் திருமண்டபத்தில்தான். மற்ற எல்லா நாட்களும் ஆண்டாள் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருப்பாள். ஆனால், அன்று மட்டும் மேற்கு நோக்கி உள்ளேயிருக்கிற மண்டபத்தை நோக்கி எழுந்தருளியிருக்கிறாள். உள்மண்டபத்திலிருந்தபடி மணவாள மாமுனிகள் தரிசனம் பண்ணினதாக ஐதிஹ்யம்.

எண்ணெய்க் காப்பு உத்ஸவம் நடைபெறும் இந்த எட்டுநாட்களும் அடியார்கள் இங்கே அவசியம் வந்து ஸேவித்தால் கண் பெற்ற பயனும் ஆண்டாள் அருளும் கிட்டும்.



இன்னொரு மண்டபம் திருக்கல்யாண உத்ஸவ மண்டபம். பங்குனி உத்திரத்தில் ஆண்டாளுக்கு இங்கே திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறும். ஸ்ரீரங்கத்திலேயும் அதே உத்ஸவம் - ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் நம் பெருமாளுக்கும் ஒரே ஆஸனத்தில் சேர்ந்து நடைபெறுகிறது.

இன்று கல்யாண உத்ஸவமாக நாம் கொண்டாடுவது அன்று எப்படி நடந்தது? பெருமாள் அரங்கநாதன், தன் அதிகாரிகள் மூலமாகப் பெரியாழ்வாருக்குச் செய்தியனுப்பி, ஆண்டாளை மூடுபல்லக்கிலே அழைத்துவரச் சொன்னார். அவ்வாறே ஆண்டாள் வந்து இறங்கினாள். வாத்திய கோஷத்தோடே பெரிய பெருமாள் சன்னிதிக்குள்ளே போய் கேசவ நம்பியின் திருவடித் தாமரைகளைத் தொட, அங்கேயே பெருமானிடம் சேர்ந்து ஸ்ரீவைகுண்டமாகிற தன்னிடத்தைத் திரும்ப அடைந்தாள்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்வார் - ''ஆண்டாள் அவதரித்ததாலேயே இந்தத் தெற்குதிசை ஓங்கிப் போயிற்று! அதனால் திருவரங்கத்து எம்பெருமானும் இந்தத் தென்திசை நோக்கியபடி துயில்கொண்டிருக்கிறான்!'' என்று. இதுவே உண்மை!

(தேடுவோம்)

படங்கள்: **ஸ்ரீஹரி**

சித்திரங்கள்: **வேதா**

ஒவ்வொரு மாநிலமும் பல லட்சங்கள் பரிசளிப்பது அவசியமா?

! விளையாட்டுச் சாதனையாளர்களுக்கான பரிசு, அவர்களுடைய பொருளாதாரத் தகுதியைக் கருதி கொடுக்கப்படுவதில்லை. மகிழ்ச்சி, வாழ்த்து,



● ஆந்திர கேள்விக்குறி!



● பேசாத நியாயம்!

சிரஞ்சீவியால் ஆந்திராவுக்கு

● சு.மு.சுரேஷ், தகட்டூர்

? ஜார்கண்டில் தம் இடத்தைத் தக்க வைத்துக் கொள்வாரா மதுகோடா?

? பாவம் கோடா! அவரை யார் கேட்டார்கள்? நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்புக்காக பேரம் பேசப்பட்டதில், சிபுசோரனுக்கு ஜார்கண்ட் முதல்வர் பதவியை அள்ளிக் கொடுத்துவிட்டதே காங்கிரஸ் தலைமை!

● கலா மூர்த்தி, சென்னை - 18*


? விளையாட்டு வீரர்களையும் சாதனையாளர்களையும் கௌரவிப்பது அரசின் கடமைதான். ஆனால், ஏற்கெனவே வெள்ளிக் கரண்டி (அல்லது வெள்ளித் துப்பாக்கி!)யுடன் பிறந்த அபிநவுக்கு

பாராட்டு தெரிவிக்கும் விதமாகக் கொடுக்கப்படுகிறது. பெறுபவர், அதைப் பொது நலத்துக்குப் பயன்படுத்துவது, அவருக்கு மேலும் பெருமை சேர்க்கும்.

● த.புகழேந்தி, கூகூர்

? 2500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு இரண்டரை கோடி ரூபாய் சுழல் நிதி மானியத்தை மு.க.ஸ்டாலின் வழங்கியிருப்பது பற்றி...?

! அதை வழங்கியது ஸ்டாலினோ தி.மு.க.வோ அல்ல; தமிழக அரசு. நமது வரிப்பணம். இதைப் புகழேந்தியே உணராதபோது பாவம் எளிய பெண்கள் எவ்வாறு அறிவார்கள்! வோட்டு அறுவடைக்குத்தான்



உதவுவார்கள்.

● **ஜி.இந்திரா, பெங்களூரு**

? சமீபத்திய டீ.வி. பேட்டியில் ஷபானா ஆஸ்மி ''முஸ்லிம்களுக்கு இந்திய அரசியலில் சரியான நியாயம் கிடைக்கவில்லை'' என்று கூறியுள்ளாரே?

! சிந்தனையாளரான ஷபானா ஆஸ்மி, அந்தப் பேட்டியில் பேசிய வேறு பல கருத்துகள் சரியானவையானபோதிலும் இந்த இடத்தில் சற்றுத் தடுமாறியிருக்கிறார். இந்திய அரசியலில் ஒட்டுமொத்த இந்தியர்களுக்குச் சரியான நியாயம் கிடைக்கவில்லையே! இதில் ஹிந்து என்ன, முஸ்லிம் என்ன, அல்லது கிறிஸ்தவர் என்ன...?


● **க.நா.இராஜேஸ்வரன்,**
மொரட்டுப்பாளையம்

? மே.வங்கம் சிங்கூரில் எதிர்ப்பு தொடர்ந்தால் கார் ஆலையை அங்கிருந்து வெளியேற்றவும் தயங்க மாட்டாராமே ரத்தன் டாடா?

! கார் உற்பத்தி செய்யும் இடத்தில் கவலையை உற்பத்தி செய்தால் டாடா என்ன செய்வார்? 'டாடா'தான் என்று நினைவூட்டுகிறார். மே.வங்கத்தின் இழப்பை, தனது லாபமாக்கிக்கொள்ள தமிழகம் உள்பட பல மாநிலங்கள் போட்டி போடும்.

நீங்கள் கேட்டவை - தராசு

...ன்மையா?



✱ சிங்கூருக்கு டாடா!



✱ மனத்திலும் இனிமை!



✱ மானுக்குப் பின் மனிதன்!

● **எஸ்.சுந்தர், திருநெல்வேலி**

? மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக தமிழக அரசு ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு ஆணை எதை உணர்த்துகிறது?

! 1) வருவது தேர்தல் ஆண்டு என்பதை; 2) விலைவாசி மேலும் உயரும் என்பதை.

● **கே.தெய்வசிகாமணி, சென்னை - 82**

? ''நான் ஒருவரை வெறுத்தால், அவர் உயிருடன் இருக்கமாட்டார்'' என சல்மான்கான் ஒரு தொலைக்காட்சி அரட்டை

யின்போது சொல்லலாமா?

! மான் வேட்டையைத் தொடர்ந்து மனித வேட்டையா! வெறுக்கத்தக்க வார்த்தைகள்; பொறுப்பற்ற பேச்சு!

● **கே.வி. சீனிவாசன்,**
திருச்சி - 13

? இன்றைய இளைஞர்களின் சொர்க்கம் எது?

! ❋ கையகல செல்ஃபோன்...
❋ கை நிறைய சம்பளம்...
❋ கணினியோடு காதல்...
❋ காதுக்குள் இசை...
❋ கனவுகள் காட்டும் கண்ணாடி!

● **எஸ். பக்கிரிசாமி,**
திருவாரூர்

? சிரஞ்சீவி ஆந்திர முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டால் அம்மாநிலம் நல்ல வளர்ச்சி பெறும் என பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் குறிப்பிட்டுள்ளாரே...?

! அவர் குரலின் இனிமை மனத்திலும் ததும்புவதால் சொல்லியிருக்கலாம். அவர் கூற்று சிரஞ்சீவித்துவம் அடைந்தால் ஆந்திராவுக்கும் இனிமை!

● **கருப்பம்புலம் சித்திரவேலு,**
நெய்விளக்கு

? கம்யூனிஸ்டுகள் பற்றிய ஆற்காடு வீராசாமியின் பேச்சை, கலைஞரே கண்டித்துள்ளாரே?

! அடுத்தநாளே அதே கலைஞர் அதே வேகத்தில் கம்யூனிஸ்டுகளையும் கண்டித்துள்ளாரே! மருமகள் பிச்சைக்காரனிடம், 'ஒண்ணுமில்லே, போ!' என்று விரட்ட, மாமியார் ஓடி வந்து, 'அவ என்ன சொல்றது? நான் சொல்றேன், ஒண்ணும் கிடையாது, போ!' என்றாளாம்!

● **வி.எஸ்.கீர்த்தனா,**
ஈரோடு - 11

? 'காலச்சுவடு' பத்திரிகையை அரசு நூலகங்கள் வாங்கத் தடை செய்யப்பட்டுள்ளது பற்றி தராசின் கருத்து என்ன?

! விமர்சனச் சுவடுகூட தன் மீது படக்கூடாது என்று கருதும் அரசின் அநீதிகளுள் ஒன்று!

● **குவளை எழில்,**
சென்னை - 93


? வ.உ.சி.யின் கொள்ளுப் பேரனும் பேத்தியும் வாழ இடமின்றிச் சாலை ஓரத்தில் படுத்து உறங்குகிறார்களாமே? இது என்ன கொடுமை?

! தினமணி ஏற்படுத்திய விழிப்புணர்வால் இரவோடிரவாக இவர்களது பிரச்னை, தீர்வு நோக்கித் திரும்பியுள்ளது மகிழ்ச்சியான விஷயம்.


● **பி. பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி**

? ஆஞ்சநேயரை தினம் வணங்கினால் மனஉறுதி ஏற்படும் என்று கூறுவது உண்மையா?

! அனுமனோ அல்லாவோ... பெயர் முக்கியமல்ல; அந்தத் தெய்வத்தின் பெயரைச் சொல்லி வணங்குபவரின் நம்பிக்கைதான் முக்கியம். மனநம்பிக்கை எதையும் சாதிக்கும். ○



● நம்பிக்கையின் விலை?



● வரிப்பண விளம்பரம்



● மதிப்பெண்ணின் வெகுமதி

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:
எஸ்.சுந்தர், திருநெல்வேலி
★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
கலா மூர்த்தி, சென்னை - 18

சுறுசுறுப்பான விற்பனையில்...

சாதனை

இது வெற்றிப் படை!





சாகஸம்

ஒலிம்பிக் ஆல்பம்!

சிறுகதைப் போட்டி முடிவு

கோகுலம்

செப்டெம்பர் 2008 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

மத மாற்றம்

இந்து மக்கள் கட்சி என்ற அமைப்பு தமிழ் நாடு முழுவதும், வேற்று மதங்களில் சேர்ந்தவர்களை, இந்து சமயத்தில் இணைத்து 'தாய்ச் சமயம் திரும்பும் விழா' நடத்தி வருகிறது. ''இந்துமதத்தில் இணைபவர்கள், உண்மையான மனமாற்றத்துடன்தான் வருகிறார்களா அல்லது உணர்ச்சி வேகத்தில் வருகிறார்களா, மதமாற்றத்துக்குப் பிறகு அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி இருக்குமா?'' போன்ற கேள்விகளுடன் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத்தைச் சந்தித்தோம்.

''பண்ருட்டி, நெல்லை, நாகர்கோவில் மற்றும் கோவை போன்ற இடங்களில், சுமார் 2000 குடும்பங்களை, தாய்ச் சமயமான இந்து சமயத்தில் இணைத்திருக்கிறோம். இந்தக் குடும்பங்களில் ஒன்றிரண்டு இஸ்லாமியக் குடும்பங்கள் தவிர, மற்ற குடும்பங்கள் அனைத்தும் தலித் கிறித்துவக் குடும்பங்கள். மூன்று, நான்கு தலைமுறைக்கு முன்பே இந்து சமயத்திலிருந்து கிறித்துவ சமயத்துக்குச் சென்றவர்கள்.''

மீண்டும் தாய்ச் சமயம் ஏன்?

''அந்தக் காலத்தில், இந்து சமுதாயத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமையின் காரணமாகத்தான் தலித்துகள் கிறித்துவ மதத்துக்குச் சென்றனர். ஆனாலும் அங்கேயும், தீண்டாமை கடைபிடிக்கப்படுவதைக் கண்டு அதிர்ந்துபோயினர். சமீபத்தில் இறையூர் என்ற இடத்தில் வன்னிய கிறித்துவர்களுக்கும், தலித் கிறித்துவர்களுக்கும் பெரிய அளவில் மோதல் நடந்தது. இதன் காரணமாக தலித் கிறித்துவர்கள் பலர் தேவாலயங்களுக்குச் செல்ல முடியவில்லை.

தலித் பாதிரியார்களுக்குப் பதவி உயர்வு மறுக்கப்படுகிறது. கிறித்துவ சுடுகாட்டிலும், தலித்துகள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். திருமாவளவன் போன்றோர்கூட கண்டுகொள்வதில்லை. இந்தச் சூழலில்தான் 'இனி பொறுப்பதில்லை' என்று தாய் மதம் திரும்பியுள்ளனர்.

இங்கும் அதே நிலைமை தானே?

* அர்ஜுன் சம்பத்



''உண்மை; இந்து சமயத்தில் ஜாதிக் கொடுமைகள் ஒழிந்துவந்த காலகட்டத்தில், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்ட இடஒதுக்கீட்டால் ஜாதிச் சங்கங்கள் எல்லா இடங்களிலும் வேரூன்றத் துவங்கிவிட்டன. இதற்குக் காரணம் பெரியார்

தான். அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக, இடஒதுக்கீடு கேட்டது நியாயமான ஒன்று. ஆனால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஜாதிகள் மீண்டும் உயிர்பெற வழிவகுத்து இந்து சமயத்தில் பிளவை உண்டாக்கிவிட்டது. நாங்கள் கிராம அளவில், இந்து சமயத்துக்குள் ஒற்றுமைக்காக தீவிரப் பிரசாரம் செய்து வருகிறோம். இந்து சமயத்துக்குள் சீர்திருத்தங்கள் சாத்தியம். மேலும் 'தீண்டாமை' கொடுமை சட்டம் இருக்கிறது. போலீஸ், நீதித்துறை தலையிட்டு முறைப்படுத்த வாய்ப்புண்டு.''

எந்த ஜாதியில் சேருவார்கள்?

''இந்து சமயத்துக்குத் திரும்பும் தலித்துகளை மீண்டும் இந்து தலித்துகளாகவே கருதி இடஒதுக்கீடு அளிக்கவேண்டும். இதற்காக நாங்கள் போராடுவோம். இது பற்றிய சட்ட நிலைப்பாடு தெளிவாக இல்லை.''

நிஜ மாற்றமா?

புரிந்து கொண்டுதான் வருகிறார்களா?

''அப்படி உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் எந்தக் காரணத்துக்காக கிறித்துவ மதத்துக்குச் சென்றார்களோ, அதே கொடுமைகள் அங்கேயும் தொடர்ந்தால் அவர்கள் எங்கு செல்வார்கள்? அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி, சுத்தி சடங்குகள் செய்துதான் சேர்த்துக்கொள்கிறோம். அவர்களை அரவணைப்பது நமது கடமை அல்லவா?''

* தாய் மதத்துக்குத் திரும்புதல் - பண்ருட்டி



வாழ்க்கையில் மறுமலர்ச்சி?

''தாய்ச் சமயத்துக்கு திரும்பும் தலித்துகளுக்கு இடஒதுக்கீடு அளிப்பது ஒன்றே மறுமலர்ச்சி அளிக்கும். ஆனால் இடைக்கால ஏற்பாடாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம், சுயவேலைவாய்ப்புக்காகப் பயிற்சிகள் கொடுக்கிறோம். சமயப்பணிகளில் இணைந்து செயல்பட வைக்கிறோம்.''

இந்து மதம் அனுமதிக்கிறதா?

''சமண மதத்திலிருந்து இந்து சமயம் திரும்பிய திருநாவுக்கரசரை வரவேற்றதால்தான், நமக்கு தேவாரப் பாடல்கள் கிடைத்தன. வேத காரணங்களைக் காட்டி, இஸ்லாமியர்களை இந்துமதத்தில் சேர்க்காமல் காஷ்மீர் பிராமணர்கள் நிராகரித்ததால்தான், இன்று காஷ்மீரில் பிரிவினை தலைவிரித்தாடுகிறது. இந்தத் தவறை மீண்டும் நாம் செய்யக்கூடாது.''

– ஸ்ரீநி



Dr.Kamakshi Memorial Hospital



Dr. T.G. Govindarajan
President -Founder -
Medical Director

தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக உடலிலுள்ள புற்றுநோய்
மற்றும் இதர நோய்களை எளிதில் கண்டறிய உதவும்

PET CT Scan

மருத்துவ சேவை நிறுவனத்தில் ஒரு மைல்கல்
தமிழகத்தில் இதுவே முதல் முறை

Dr. காமாட்சி மருத்துவமனை

கேன்சர் இன்ஸ்டிடுட் (wia)
இணைந்து பெருமையுடன்
அறிமுகம் செய்துள்ளது



CANCER INSTITUTE
Canal Bank Road
Gandhi Nagar, Adyar
Chennai - 20
Cell : 93814 36899
93814 36896

10% Special Discount On Sunday for Master & Executive Health Check-up

தமிழ் நாட்டில் முதல் PET CT Scan

இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:

* பெட் சி.டி.ஸ்கேன் என்பது உடல் அணுக்களின் செயல்திறன் பற்றியும் அணு பெருக்கத்தைப் பற்றியும் முழு தகவல்களைத் தரவல்லது.
* முக்கியமாக பெட் சி.டி.ஸ்கேன், மனிதனின் உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரை முழுவதும் பரிசோதிப்பதால், உடலில் எங்கெல்லாம் புற்றுநோய் இருக்கிறது? அது வேறு எங்கெல்லாம் பரவியிருக்கிறது? நோயின் தீவிரம் எந்த அளவு உள்ளது? என்பதை எல்லாம் துல்லியமாகக் கண்டறியப் பயன்படுகிறது.
* அதேபோல், ரேடியோதெரபி, கீமோதெரபி போன்ற சிகிச்சைகளுக்குப் முன் 'பீரியாடிகல் ரிவியூ' மூலம் நோயின் தாக்கம் எவ்வளவு குறைந்துள்ளது என்பதையும் கண்டறியலாம்.
* மூளையில் ஏற்படும் 'அல்ஸேமெர்ஸ்', 'பார்க்கின்சன்ஸ்', புற்றுநோய் போன்ற நோய்களை கண்டறியவும், அவற்றுக்கு எளிய முறையில் கண்டறியவும், 'பெட் சி.டி ஸ்கேன்' பயன்படுகிறது.
* புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சை முறையை பின்பற்ற வேண்டும் என்று தெளிவாக உணர்த்துகிறது. இதயத்தில் உள்ள பிரச்னைகள் மற்றும் தசைகளின் செயல்பாடுகளை அறிய உதவுகிறது.

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.